# மிழ் எழுத்தொலி நூல்

அல்லது

# லகப் பொது தமிழ் எழுத்தொலி

## VERSAL TAMIL PHONETICS)

ஆ க[illegible]

ந. மு. கோவிந்தராய நாட்டார், B. A., L. T.

தஞ்சை

நாட்டார் தமிழ்ப் பேரவையாரால்

வெளியிடப்பெற்றது.

1953.

(All Rights Reserved)

விலை ரூ. 2—4—0.

மகாலிங்கம் பதிப்பகம்,

தஞ்சை.

# பொருளடக்கம்


பக்கம்.

| | | |
|---|---|---|
| I | உரிமையுரை .... | i |
| II | TO THE READER .... | ii |
| III | சிறப்புப்பாயிரமும், மதிப்புரையும் | iii |
| IV | முகவுரை .... | vii |
| V | நூல்: | |
| | 1. தோற்றுவாய் .... | 1 |
| | 2. சிறப்புப்பாயிர் வுரையாராய்ச்சி | 3 |
| | 3. ஆய்தத்தின் பெருமை | 14 |
| | 4. ,, வரிவடிவு | 22 |
| | 5. எழுத்துக்கள் பிறக்குமாறு | 29 |
| | 6. ஆய்தத்தின் ஒலித்தன்மை | 32 |
| | 7. மெய்யெழுத்துக்கள் பிறக்குமாறு | 38 |
| | 8. மெய்க்கலப்பொலிகள் .... | 41 |
| | 9. உயிரெழுத்துக்கள் பிறக்குமாறு | 46 |
| | 10. குற்றியலிகரம், குற்றியலுகரம் | 56 |
| | 11. உயிர்க்கலப்பொலிகள் .... | 60 |
| | 12. அளபெடை .... | 63 |
| | 13. மகரக்குறுக்கம் .... | 65 |
| | 14. ழகரத்தின் பெருமை .... | 66 |
| | 15. வல்லெழுத்துக்களை வலித்தொலியாமை | 69 |
| | 16. முடிவுரை .... | 73 |
| | 17. பிறமொழிப் பாடங்கள் | 81 |
| | 18. பிழைதிருத்தம் .... | 92 |

# உரிமை உரை.

சென்னை அரசாங்கத்தில் மேற்பார்வை பொறிவலரா யிருந்தவரும் (Superintending Engineer) தம் அலுவற்றுறையில், Calculograph, Theory of Thrust முதலியவற்றைக் கண்டு பிடித்த பேரறிஞரும்,

பிறமொழி கலவாத தூய தமிழில் செய்யுளோ, உரை நடையோ எழுதுவதே தமிழ் மொழிக்கு ஆக்கந்தரும் என்ற உண்மையைத் தமிழ் மக்களுக்கு முதன்முதலாகப் புலப்படுத்தியவரும்,

'தமிழ் நெடுங்கணக்கும், அதன் மந்திரப்பொருளும்' Tamil Alphabet, Its Mystic Aspect என்னும் ஆங்கில நூலில் தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவ மாட்சியையும், அதன் தத்துவ அடிப்படையையும் விளக்கியவரும்,

உலக மொழிகளனைத்தையும் தமிழ் எழுத்துக்களைக் கொண்டே எழுதலாகும் என்ற உண்மையை முதன் முதல் உலகிற்குப் புலப்படுத்தியவரும்,

பல அருங்கட்டுரைகளின் ஆசிரியரும் தமிழ்ப் பேரறிஞரும், ஆகிய

**உயர்திருவாளர். பா. வே. மாணிக்க நாயக்கர்**

B. E., M. C. I., M. I. E.,

அவர்கள் நினைவிற்கு

இந்நூல் உரிமையாக்கப்படுகிறது.

ந. மு. கோ.

# TO THE READER

The system of Tamil Phonetics expounded in this book is not a mere improvisation of symbols prefixed or suffixed to the existing Tamil characters, but a thoroughly scientific one based on fundamental phonetic principles enunciated in Tholkappiam, the oldest of existing Tamil grammars written, perhaps, some three thousand years ago. The reader is therefore requested to delve deep into the book and try to understand the basic principles of Tamil Phonetics before he attempts to transliterate any language in the system.

N. M. G.

சென்னை அரசாங்கக் கல்லூரிகளில் தமிழ்ப் போராசிரியராயிருந்து
ஓய்வு பெற்றுள்ள தமிழ்ப் பெரும் புலவர்

## பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்

## இயற்றிய சிறப்புப் பாயிரமும், எழுதிய மதிப்புரையும்.

### பாயிரம்.

*நேரிசை யாசிரியப்பா.*

மன்னிய வளங்கெழு சென்னி நன்னாடன்
பொய்யா தளிக்கும் பொன்னிமா நதியான்
நடுக்கா விரியெனும் நன்னகர்க் குரிசில்
வேளாண் வாழ்க்கைத் தாளாண் மையினன்
நாடாள் வாரெனும் நற்குடித் தோன்றல்
முத்துசாமிப்பெயர் முதல்வன் புதல்வன்
தாய்மொழி யதனொடு தனியாங் கிலமுதற்
பன்மாண் கலைதேர் நுண்மாண் நுழைபுலன்
விழுமிய நடையினன் கெழுதகை நண்பினன்
பாடறிந் தொழுகும் பண்புடைப் பெரியோன்
தந்தையென் றேற்றனன் கொல்லெனுஞ் சொல்புரி
மாவிந்தை வாழ்புயக் கோவிந்த ராய
நாட்டா ரென்னும் நற்பெய ருடையோன்
நாவினி யல்பொடு நவிலா வொலிகெழும்
உலகின் மொழிக ளனைத்தையும் வழாஅது
தென்றமிழ் மொழியிற் சீர்பெற வழங்கலாம்
கொள்கை யதனைப் பல்வகைச் சான்றொடும்
தாஅன் நாட்டித் தனது நிறுப்பெனத்
தமிழெழுத் தொலியெனும் பனுவல்
இமிழ்கட லுலகினர்க் கீந்தனன் பெரிதே.

# மதிப்புரை.

செந்தமிழன்னையின் செய்தவப் பயனெனத் திகழ்ந்து தம்புகழ் நிறுவிய நாவலர், பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களைத் தமிழகம் முழுதுமே நன்கறியும். அத்தகைய சீரியரின் அரும்பெறல் திருத்தம்பியாராவர் நமது ந. மு. கோவிந்தராய நாட்டாரவர்கள், B. A., L. T. இவர்கள் இளமையிலிருந்தே ஊறிய தமிழ்ப்பற்றும், தமிழ்ப் புலமையும் வளரப்பெற்று நிரம்பியவர்கள். மாணவரா யிருந்த பொழுதே இவைபற்றிய கட்டுரைகள் தமிழ் வெளி யீடுகளில் வெளியிட்டுள்ளனர். நான்காண்டுகளின் முன்பு ஒன்பான்சுவையுந் ததும்ப 'இராசேந்திரன்' என்னும் வர லாற்று நாடகநூலை இனிய செந்தமிழ் நடையில் இயற்றி வெளியிட்டனர்.

பல்லாண்டுகளாக இவர்தம் உள்ளத்தே கருக்கொண்டு, உரம்பெற்று வளர்ந்து, வளம்பெற்று இற்றைஞான்று உருக்கொண்டு தோன்றியதாகும் 'தமிழ் எழுத்தொலி நூல்' அல்லது 'உலகப்பொது தமிழ் எழுத்தொலி' யென்னும் இந்நூல். இஃது, இதுவரை தமிழில் வெளிவராத ஓர் புத்தம் புதியநூல். "ஒருகுடைக்கீழ்த் தனியரசாய் உல காளுந் தமிழ்த்தாயே" என்னும்படி **உலகின் வழங்கும் எம் மொழிகளையும் தமிழின் எழுத்தொலியால் உரியவாறு பேசவும், எழுதவும் கூடும் என்னுந்திறனை அசைக்க முடியாத வன்மையுடன் நிலைநாட்டியுள்ளார்.**

இதற்கு உறுதுணையாகத் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைப் பலருரையுடன் தெளிவுறப் பயின்று ஏனையிந்திய மொழிகட்குத் தாயகமென்னும் வடமொழியை

யும், அரபி முதலிய மொழிகளையும் நன்குணர்ந்து, ஆங்கில மொழியின் ஆழ்ந்த பயிற்சிபெற்றுள்ளமையால் மேனாட்டுப் பிறமொழிகளையுந் துணிந்து, இவற்றின் ஒலி இயைபுகளில் உலகின் ஏனைய மொழிகளும் அடங்கு மாற்றைத் தெரிந்து **தமிழின் எழுத்தொலிகள் உலகின் மொழிகளனைத்தையும் அளக்கவல்ல ஆற்றலுடையன** என்னும் உண்மையை அங்கை நெல்லியென யாவரும் உணரும் வண்ணம் தெளிவுறுத்தியுள்ளனர்.

ஒரு புதுக்கொள்கை வெளிவருவதாயின், பல இடங்களிலிருந்தும் எதிர்ப்புவர விருக்கும் இயல்பைக் கடைப்பிடித்து அவற்றிற்கேற்ற விடைதரும் வாயிலாகப் பல சான்றுகள் இந்நூலிற் காட்டப்படுகின்றன. பிற உரைகளை மறுக்கப் புகுங்கால் அவற்றின் மேன்மை காட்டி மறுக்கத் தொடங்குதல் பாராட்டுதற்குரியது. தான் நாட்டித் தனது நிறுப்பு; பிறர்தம் மதம் மேற்கொண்டு களைவு, இருவர் மாறுகோள் ஒருதலைதுணிவு, உரைத்தும் என்றல், உரைத்தாம் என்றல், பின்னது நிறுத்தல், முன் மொழிந்து கோடல், முதலிய மதங்கள், உத்திகளனைத்தும் இதன்கண் அமைந்துகிடக்கின்றன. பல்வகை ஒலிவேறுபாடுகட்கும் வரிவடிவங்கள் அமைத்துக்காட்டப்படுகின்றன. ஒலிகள் பிறக்கும் இடமும், முயற்சியும், மூச்சுக் காற்றின் நிலையும் பொருத்திக் காட்டப்படுகின்றன.

இந்நூலின் பொருநுண்மையைக் கேட்ட அளவானே, தமிழர் ஒப்புயர்வில்லா ஓர் புது வீறுகொண்டெழுந்து தோள் தட்டுவர், பன்மொழியுணர்ந்த பேரறிஞர் 'மூக்கினுச்சிச்சுட்டுவிரல்சேர்த்தி' வியப்பர். பிறமொழியாளரோ, திடுக்கிடுவர். யாம் நூலையும், ஆக்கியோனையும் நீடு நிலவுக என வாழ்த்துவம்.

பெரும்பயனுடையதாகிய இவ்வரும் பெரும் பனுவல், தமிழராயினர் ஒவ்வொருவர் கையிலும் இருத்தற்குரியது, எனவே, தமிழ்ப் புலவர்கட்கு இன்றியமையாது வேண்டற் பாலதென்பது 'உபலப்தி'யாற் போதருகின்றது.

இனி, பல்கலைக் கழகத் தேர்வுகளில், பீ. ஏ., ஆனர்ஸ், பீ. ஓ. எல்., எம். ஓ. எல்., முதலியவற்றின் பாடமாகவும், தமிழ் வித்துவான் வகுப்பிற்கும், பிறமொழியோடு தமிழ் பயிலும் பிரிவுடை வித்துவான் வகுப்பிற்கும் பாடமாகவும் வைத்தற்குரியது இந்நூல். தமிழரே யன்றிப் பிறமொழி யினரும் போற்றத்தகுவது இந்நூல். வாழ்க, தமிழெழுத் தொலி நூல்!

# முகவுரை.

உலக மொழிகளனைத்தையும், தமிழ் எழுத்துக்களைக் கொண்டு சிறிதும் ஒலிவழுவிலாது எழுதவியலும் என்ற உண்மையைச் சொற்பொழிவுகள் மூலம் முதன்முதல் புலப்படுத்தியவர் காலஞ்சென்ற தமிழ்ப்பேரறிஞர், உயர் திருவாளர், பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள், B. E. M. C. I., M. I. E., ஆவர். தமிழ்நாட்டின் தவக்குறைவால் உயர்திரு. நாயக்கர் அவர்கள், உலகப்பொது தமிழ் எழுத் தொலி நூல் வெளியிடுவதற்கு முன்னர் இவ்வுலக வாழ்வை நீத்தனர். அவர்கள் மறைவிற்குப் பிறகு, அவர்களுடைய ஒலியிலக்கண வுண்மையை உணர்ந்து கோடற்குப் பல் லாண்டு சிந்தித்தும் பயன் காணதிருந்தேன். அதன் அரை குறைகளையாவது அறிந்துகொள்ள ஆர்வங்கொண்டு அவர் சொற்பொழிவுகளைக் கேட்டறிந்த பல தமிழறிஞர்களிடம் உசாவியும் பயன்கண்டிலன். எனினும் நாயக்கர் அவர் களின் சொற்பொழிவுகளுக்கு அடிப்படையாய் நின்றது தொல்காப்பியம் என்ற உண்மையை அறிந்திருந்தேன் ஆகலின், அதனை ஒலி யொன்றையே குறித்து ஆராயத் தொடங்கினேன். தொடங்கியேனுக்கு வேறுபல நூல் களும் இப்பொருள் குறித்து ஆராயவேண்டிய இன்றி யமையாக் கடப்பாடு ஏற்பட்டது. பல்லாண்டுகள் என் பள்ளித்தொழிற்கிடையில் அருமையாகக்கிடைத்த ஓய்வு களிற் செய்த ஆராய்ச்சியின் பயனே இச்சிறுநூல்.

எனதாராய்ச்சியின் முடிவினை ஓர் சிறு கட்டுரையாக வரைந்து 1944-ல் என் மூத்தோர் நாவலர், பண்டித ந. மு. வே. அவர்களிடம் காட்டினேன். கட்டுரையினை முழுதும்

படித்துப் பார்த்த அவர்கள், அதன் முடிவினை ஒப்புக் கொண்டு நூல் வெளியிடுதற்கு முன்னர், தமிழ்நாடெங் கணும் இப்பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றிவர வேண்டுமென்று பணித்தனர். இப்பணி தலைமேற்கொண்டு சொற்பொழிவாற்றத் தொடங்குமுன்னர் மூத்தோர் இவ் வுலகவாழ்வினை நீத்தனர்! என் சொற்பொழிவுகளிற் குறிப்பிடத் தக்கவை கீழ்வருமாறு:

| சொற்பொழிவு நாட்கள். | இடம் | தலைவர் |
|---|---|---|
| 1947 அக்டோபர் 15, 16. | அரசாங்கக் கல்லூரி கோயன்புத்தூர் | திருவாளர் இராவ்பகதூர் C. M. இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் B.A., B.L., |
| 1947 அக்டோபர் 18 | கலைவளர் கழகம் கோயன்புத்தூர் | தமிழாசிரியர், திருவாளர் சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் |
| 1947 அக்டோபர் 20, 21 | நகராண்மைக் கழகக் கல்லூரி, சேலம் | கல்லூரித் தலைவர் திருவாளர் A. இராமசாமிக்கவுண்டர் அவர்கள் M.A., L.T., |
| 1950 பிப்பரவரி 21, 22, 23 | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் | தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் A. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் M.A , PH.D., |
| 1950 மே 20, 21 | வேலைத் தமிழ்க் கழகம், வேலூர் | வேலூர்க் கல்லூரித் தமிழாசிரியர் வித்துவான் K. பாலகிருட்டின நாயுடு அவர்கள் M.A., L.T., |
| 1952 டிசம்பர் 4, 5, 7 | நாட்டார் தமிழ்ப் பேரவை, தஞ்சை. | |

இந்நூலைப் படிப்போர் தமிழ்மொழியின் ஒப்புயர்வற்ற

பெருமையினை யுணர்ந்து பெருமிதவுணர்ச்சி பெறுவர் என்பது என் நம்பிக்கை. தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிர வுரை ஆராய்ச்சியும், எழுத்ததிகார ஆராய்ச்சியும் நிரம்பிய தொன்னூலின், தமிழ்ப் புலவர், வித்துவான் மாணவர்களுக்கும், B. A., Hons., M. O. L., மாணவர் களுக்கும் இந்நூல் பாடமாக வைக்கக்கூடிய தகுதியுடைய தெனக் கருதுகின்றேன். பல்கலைக் கழகத்தினர் ஆவன செய்வார்களாக. நூலிற்குச் சிறப்புப்பாயிரமும், மதிப் புரையும் எழுதியுதவிய அருந்தமிழ்வாணர், பண்டித, அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களுக்கும், நூலைச் சிறப்புற அச் சேற்றித்தந்த தஞ்சை, மகாலிங்கம் அச்சகத்தாருக்கும், நூல் நாட்டார் தமிழ்ப்பேரவை வெளியீடாக வருவதற் கிசைந்த நாட்டார் தமிழ்ப்பேரவை நிறைவேற்றுக் கழகத் தினருக்கும் எனது நன்றி யுரியதாகும்.

ந. மு. கோ.

# தமிழ் எழுத்தொலி நூல்

அல்லது

# உலகப் பொது தமிழ் எழுத்தொலி.

# Universal Tamil Phonetics.

தமிழ் எழுத்தொலிகள் உலகமொழிகளின் எழுத்தொலிகளுக்குப் பொதுவான அடிப்படை இயல்புகளைக் கொண்டிருத்தலாலும் அவைகளால் உலகமொழிகள் அனைத்தையும் சிறிதும் ஒலி வழுவின்றி எழுதுதல் கூடும் ஆதலாலும் இந்நூலுக்குத் தமிழ் எழுத்தொலி நூல் அல்லது உலகப் பொது தமிழ் எழுத்தொலி எனப் பெயர் கொடுத்தாம்; பொதுவாதல் யாங்ஙனம் எனில் விளக்குதும் :

மக்களை ஓரிடமிருந்து பிறிதோரிடத்திற்குத் தூக்கிச் செல்வன வண்டிகள். அவைதாம் இக்காலத்து நீராவி ஈர்க்கும் தொடர்வண்டிகள், நாவாய்கள் முதல் வானூர்திகள் ஈறுக பலதிறப்பட்டன. இவ்வாறே மக்கள் கருத்தினை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எடுத்துச் செல்வன மொழிகள். இதனாலேயே ஆங்கில மொழி நூலறிஞர் மொழியினை Language is the vehicle of thought எனக் கூறுவர். உலகில் 1500 மொழிகள் வரையில் உள்ளன என அறிஞர் கூறுகின்றனர்.

மக்களை ஏற்றிச்செல்லும் நீராவி வண்டி முதலியவைகளை ஆக்குதற்குத் தனித்தனி தொழிற்சாலைகள் உண்டு.

ஒன்றை ஆக்கும் தொழிற்சாலையில் மற்றொன்றைச் செய்தல் முடியாது. ஆனால் மக்கள் கருத்துக்களைத் தூக்கிச் செல்லும் தமிழ், ஆங்கிலம், அரபி, இந்தி முதலாய மொழிகளாம் வண்டிகளை யெல்லாம் ஒரே தொழிற்சாலையே உண்டாக்குகின்றது. அதுதான் வாயும் அதன் உறுப்புக்களும், மூக்கும், ஆகும். இவைகளின் உதவியினாலேயே எல்லா மொழிகளும் உண்டாகின்றன. வானூர்தி முதலியவைகளை ஆக்கும் தொழிற்சாலைகளுக்கு தீ எத்துணை இன்றியமையாததாயிருக்கின்றதோ அத்துணை, மொழிகளை உண்டுபண்ணும் தொழிற்சாலைக்கு உடலிலிருந்து வெளிவரும் தீக்காற்று (Carbon dioxide gas) இன்றியமையாததாயிருக்கின்றது. இக்காற்றினையும் பேச்சுக்கருவிகளையும் நேரிய முறையில் இயக்கி அவற்றின் பயனை முழுதும் பெற்றனவாயுள்ளன தமிழ் எழுத்துக்கள். ஏனைய மொழிகள் இவற்றின் பயனை முழுதும் பெறவில்லை. ஆகலின் உலகமொழி எழுத்தொலிகளின் பொதுவான அடிப்படை தமிழில் அமைந்துள்ளது. பிறமொழிகள் ஒவ்வொருவகையில் குறைபாடுள்ளனவாய் அமைந்துள்ளன. ஆகையின் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு பிறமொழிகளை எழுதுதல் எளிதாயுள்ளது. பிறமொழி எழுத்து கொண்டு தமிழை எழுதுதல் இயலாததாகின்றது. எடுத்துக்காட்டாக இரண்டொன்று கூறுதும்: வடமொழியிலோ, இந்தியிலோ, வேறு வடவிந்திய மொழியிலோ எகர ஒகர உயிர்களும் அவை யேறிய உயிர் மெய்களும் இல்லை. ஆகலின் எடு, ஒரு, கெடு, கொடு என்ற சொற்களை இம்மொழிகளில் ஏடு, ஓரு, கேடு, கோடு என்றே எழுதவியலும். இவ்வாறே தமிழ்ச் சிறப்பெழுத்துக்களாகிய ழ, ற, ன மேற்கூறிய மொழிகளில் இல்லாமையால் இவ்வெழுத்துக்கள் கொண்ட சொற்களை அவற்றில் எழுதவியலாது.

யாம் எழுதும் இந்நூலுக்கு அடிப்படை பொதுவாகத் தொல்காப்பியமும் சிறப்பாகத் தொல்காப்பியத்தின் முதல் மூன்று இயல்களாகிய நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியலும்

ஆகும். நுண்மாண் நுழைபுலத்தராய இளம்பூரணர், கல்லாடர், சேனவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியிருக்கின்றனர். இவர்கள் உரைகளின் உதவியின்றி இக்காலத்து நாம் தொல்காப்பியத்தைச் சரியாக உணர்ந்து கோடல் முடியாது.

எனினும்

அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

என்ற தெய்வப்புலவர் கட்டளைப்படி எத்துணைப் பேரறிஞராயினும் ஓரோவழி தவறுதல் இயல்பே. அவ்வாறு தவறினும் அவர்களுடைய பெருமை குறையாது. மேலும் இக்காலத்து நூலாராய்ச்சி செய்வோருக்குள்ள துணைவாய்ப்புகள் அக்காலத்து உரையாசிரியர்களுக்குக் கிடைத்திரா. ஆகலின் இந்நூலில் சிற்சிலவிடங்களில் அவர்கள் உரைகளுக்கு யாம் மாறுபடக் கூறினும் அவர்கள் பெருமைக்கு எட்டுணையும் இழுக்கின்றாம்.

முதற்கண் பனம்பாரனார் இயற்றிய சிறப்புப்பாயிரத்தின் உரைகளைச் சிறிதாராய்வாம்:

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்
தறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து

மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

என்பது சிறப்புப்பாயிரம். தொல்காப்பிய உரையாசிரியர்களில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் இவர்கள் உரையே எழுத்ததிகாரத்திற்குள்ளது. சிறப்புப் பாயிரத்திற்கு இவர்கள் உரையுடன் சிவஞான முனிவருடைய உரையும், சோழவந்தான் அரசன் சண்முகனாருடைய உரையும் உள்ளன. பேராசிரியர் உரை எமக்குக் கிடைத்திலது. ஏனை நால்வர் உரையும் மிகச்சிறிய மாறுபாடுகளுடன் பொதுவாக ஒத்திருக்கின்றன. ஆயினும் இவ்வுரைகள் ஐய மறுக்கவேண்டிய இரண்டிடங்களில் சரியாக ஐயமறுத்துத் தெளிவிக்கவில்லை. அவற்றைக் கூறுமுன் உரையாசிரியர்களுடைய மாறுபாடுகளைச் சிறிதாராய்வாம்.

நச்சினார்க்கினியர் பெரும்பாலும் இளம்பூரணரை ஒட்டியே பொருள் விரிக்கின்றார். சிவஞான முனிவர் இவர்களுடைய உரைகளைச் சிற்சிலவிடங்களில் மறுக்கின்றார். ஆயினும், இம்மறுப்புகளால் பெரிய பொருள் மாறுபாடுகள் ஏற்படவில்லை. 'ஆயிடை' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'ஆகிய எல்லைக்குள்ளிருந்து' எனப் பொருள் கூறுகின்றார். சிவஞான முனிவர் 'அவ்விடமாகிய' எனப் பொருள் கூறுகின்றார். 'நல் உலகத்து' என்பதற்கு நச்சினார்க்கினியர், 'நல்லாசிரியரது' எனப் பொருளுரைக்கின்றார். சிவஞான முனிவர் 'நல்ல உலகத்தின்கண்' எனப் பொருள் உரைக்கின்றார். 'ஆயிரு முதலின்' என்பதற்கு 'அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளுகையினாலே' எனப் பொருள் விரிக்கின்றார் நச்சினார்க்கினியர். 'ஆராய்ந்த பெரிய காரணத்தானே' எனப் பொருள் விரிக்கின்றார் சிவஞான முனிவர். 'செந்தமிழியற்கை சிவணிய' என்பதற்கு, 'செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய' என நச்சினார்க்கினியரும், 'செந்தமிழ் உண்மையைப் பொருந்தி உணரும்

பொருட்டு' என முனிவரும் உரை விரிக்கின்றனர். 'போக்கறு பனுவல்' என்பதனை நச்சினார்க்கினியர் 'புலம் தொகுத்தோன்' என்பதற்கு அடையாகக் கொண்டார். சிவஞான முனிவர் அவ்வாறு கொள்ளவில்லை. அரசன் சண்முகனார் 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு' என்பதற்கு, 'செந்தமிழ் இலக்கணமுற்று நிரம்பிய தலைச்சங்கத்து வீற்றிருந்த புலவரொடு பயின்று' எனப் பொருள் விரிக்கின்றார். இவர் 'போக்கறு பனுவல்' என்பதனைப் பாண்டியனுக்கு அடையாகக் கொண்டார். இவ்வுரைகளை இன்னணம் கூர்ந்து நோக்குவோமாயின் சிறப்புப்பாயிரத்தின் அடிப்படையான பொருளை மாற்றக் கூடியதான வேறுபாடு இல்லை யென்பதனை யுணர்வோம். இவ்வுரையாசிரியர்கள் ஐயமறுத்துத் தெளிவிக்கவேண்டிய

> 'அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
> அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
> மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
> மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த'

என்னும் இவ்வடிகளுக்கு நேரிய பொருள் கூறவில்லை என்பது எமது கருத்து. பனம்பாரனார் தொல்காப்பியருடன் பயின்றவர் என்பதனையும், தொல்காப்பியர் இயற்றிய நூலை முழுதும் ஐயமறப் படித்துப் பிறகு சிறப்புப்பாயிரம் இயற்றினார் என்பதனையும் உளத்திற் கொண்டு உரையாசிரியர்கள் பொருள் விளக்கியிருப்பார்களானால் நேரிய பொருள் அவர்களுக்குப் புலனாயிருக்கும்.

> 'பருப்பொருட் டாகிய பாயிரங் கேட்டார்க்கு
> நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும்'

என்றாராகலின், நூலுக்கும் பாயிரத்திற்கும் உள்ள தொடர்பினை உளத்திற்கொண்டு உரைசெய்யாமையின் உரையாசிரியர் எல்லோரும் குன்றுமுட்டிய குரீஇப் போலாயினர். அன்றியும் இது சிறப்புப்பாயிரம் என்பதனை மறந்து தொல்காப்பிய நூற்பா எனக்கொண்டு இவர்கள் பொருள் கூறியிருப்பதுபோல் எமக்குத் தோன்றுகிறது. 'முறைப்

பட எண்ணி' என்பதற்கு எல்லோரும் ஏறக்குறைய ஒரே பொருள்தான் கூறுகின்றனர். 'நூலை அதிகாரவகையான் முறைப்படுத்தும் வழியை எண்ணிப்பார்த்து' என்ற பொருள் கோடலோடமையாது, 'முந்துநூலில் அவை முறைபிறழக்கிடந்தன ஆகையால்' எனக்காரணங்காட்டி உரைநிறுவுகின்றனர். ஆயினும் ஒருவராவது அகத்தியத்திலோ, வேறு முந்திய நூல்களிலோ, எழுத்து, சொல், பொருள், ஆகியவற்றின் இலக்கணம் முறைபிறழ்ந்திருந்தது என்பதற்கு யாதொரு சான்றும் காட்டினாரில்லை. 'என்ப' 'என்மனார்' எனத் தம் நூற்பாக்களில் அகத்தியனாரையோ, வேறு முந்திய ஆசிரியர்களையோ ஆணையாகத் தொல்காப்பியர் சுட்டுகின்றனரே? அகத்தியனார் முறைப்பட நூல் செய்யும் திறல் அற்றவரா? ஆகையின் 'நூலை முறைமையாக ஆய்ந்து' என விடுத்தலே 'முறைப்பட எண்ணி' என்பதன் ஏற்புடைப் பொருளாகும்.

தமிழ் இயல்நூல் செய்த ஆசிரியர் தொல்காப்பியனார் வடமொழி நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்குத் தனது நூற்படு பொருளை எடுத்துக் கூறியதேன்? தமிழ்ப் புலமையும் இயல் ஆராய்ச்சியும் நிரம்பிய ஒரு ஆசிரியருக்கு எடுத்துக் கூறுவதன்றோ ஏற்புடைத்தாகும். 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' 'முறைப்பட எண்ணி' எனக் கூறிய பனம்பாரனார் மீண்டும் 'மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டி' எனக்கூறியதேன்? அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறாது வடமொழி ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனக்கூறியதேன்? ஐந்திர நூலாராய்ச்சித் தமிழ் இயல்நூல் செய்த தொல்காப்பியனாருக்கு எவ்வாறு பயன்பட்டது? ஆகிய வினாக்கள் சிறப்புப் பாயிரத்தைப் படிக்கும் தமிழறிஞர் உள்ளத்தில் எழூஉதல் இயற்கையேயாம். இக்கேள்விகளுக்கு உரையாசிரியர் ஒருவரும் சரியான விடைபகரவில்லை. எமது விடைகளைக் கூறுமுன் உரையாசிரியர்களுடைய விடைகளைச் சிறிதாராய்வாம்.

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பதற்கு

சிவஞான முனிவர் கூறும் விளக்கவுரை :—

"அகத்தியம் நிறைந்த தொல்காப்பியன் என்னாது ஐந்திரம் நிறைந்த தொல்காப்பிய னென்றதென்னையெனின், அகத்தியம் நிறைந்தமை யெல்லாரானுந் தெளியப்பட்டமை யின் வடமொழியினும் வல்லானுயினான் என்பது விளக்கிய, அங்ஙனம் கூறினாரென்பது" என்பதாகும். அரசன் சண்முகனார் இதற்குக் கூறும் உரை :— "இனிச் செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டென்றத னானே தமிழ்நிறைந்தா னென்பது பெறப்படலால் ஈண்டத் தமிழேயன்றி வடமொழியு நிறைந்தானென்பது விளங்க வைந்திர நிறைந்தோ னென்றார்." என்பதாகும். நச்சி னார்க் கினியர் இக்கடாவினை எழுப்பவில்லை யாதலான் விடையுங் கூறவில்லை. மேலிருவருரையும் சரியே. எனினும் 'வடமொழியினும் வல்லானுயினான்,' 'வடமொழியு நிறைந் தான்' எனக் கூறுதலினும், வடமொழி இலக்கணமாகிய ஐந்திரத்தில் வல்லானுயினான், நிறைந்தான் எனக் கூறுதலே பொருத்தமுடைத்தாம். என்னை? 'வடமொழி கூறும் நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி வடமொழி இயற்கை சிவணிய வடபுலத்தொடு முந்துநூல் காணும்' கடப்பாடு ஆசிரியருக் கின்மையின். இக்காலத்துச் சில தமிழறிஞர் ஐந்திர விலக் கணம் என்று ஒன்று இருந்ததே இல்லை என்று கூறுகின்ற னர். சிலவடமொழியாளரும் இவ்வாறே கருதுகின்றனர். சிலர் ஐந்திரம் என்பதனை ஐந்திறம் எனத் திரித்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, ஆகிய ஐந்திலக்கணங் களையும் அச்சொல் குறிக்கின்றதென்பர். இக்கொள்கை வலியுடைத்தன்று. 'திறம்' என்பதனை, கூறுபாடு என்ற பொருளில் இலக்கணத்தைக் குறிப்பதாகக் கொள்ளினும் 'நான் மறைக்கும்' இச்சொல்லுக்கும் யாதொரு இயைபும் இல்லை. இரண்டாவதாக, பனம்பாரனார் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றையே பாயிரத்தில் குறிக்கின்றார். ஆசிரியர் தொல்காப்பியனாரும் யாப்பையும், அணியையும்

தனி அதிகாரங்களாகக் கூறவில்லை. உண்மை யாதெனின் டாக்டர் பர்னல் கூறுமாறு, ஐந்திரம் என்பது ஒரு ஆசிரிய ரால் எழுதப்பட்ட இலக்கணமன்று. பல ஆசிரியர்களால் வழிவழியாகப் பின்பற்றப்பட்டதொரு மரபு. ஐந்திரமரபு எளிய இயற்கையான இலக்கிய விதிகளைக்கூறுகிறதென்றும், பாணிணீயம் செயற்கையான எளிதில் உணரலாகா விதி களைக் கூறுகிறதென்றும் சில ஆசிரியர் கூறுகின்றனர். வடமொழி நான்மறைப் பாடல்களில் ஐந்திர மரபு விதிகள் காணப்படுகின்றன என்றும் பல அறிஞர் கூறுகின்றனர். இன்னோரன்ன சான்றுகளால் அறியக்கிடப்ப தென்னை யெனின் நான்மறைகள் பன்னூறாண்டுகளாக எழுதப் படாமல் வந்தவாறே ஐந்திரமும் எழுதப்படாது வழிவழி வந்ததொரு இலக்கணமரபு என்பதும், அம்மரபு விதிகள் நான்மறைப் பாடல்களில் பயின்றுள்ளன என்பதுமாம்.

இனி 'மயங்கா மரபின் எழுத்து முறைகாட்டி' என்ப தற்கு உரையாசிரியர்கள் கூறும் விளக்கவுரையைச் சிறி தாராய்வாம். 'எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி', 'முறைப்பட எண்ணி' என முதற்கண் கூறியவர் மீண்டும் 'எழுத்துமுறை காட்டி' எனக்கூறியதேன் என்ற கடாவை யாம் எழுப்பியுள்ளோம். இக்கடாவினை இளம்பூரணர் ஒருவரே எழுப்பியுள்ளார். ஏனைய மூவரும் கூறியது கூறிய தேன் என்பதனைச் சிந்திக்கவில்லை. ஆனால் தத்தமக்குத் தோன்றியவாறு பொருள்கூறியிருக்கின்றனர். கடாவை எழுப்பிய உரையாசிரியரும் சரியான விடைகூறவில்லை என்பது எமது கருத்து. நச்சினார்க்கினியர் இத்தொடரைப் 'புலந்தொகுத் தோனே' என்பதனைக்கொண்டு முடித்துப் பொருள் கூறுகின்றார். அவர் கூறும் பொருள் : "மயங்கா மரபின் எழுத்துமுறைகாட்டிப் புலந்தொகுத்தோனே" —அம் மூவகையிலக்கணமும் மயங்கா முறைமையாற் செய் கின்றமையின் எழுத் திலக்கணத்தை முன்னர்க்காட்டிப்பின் னர் அவனை இலக்கணங்களையும் தொகுத்துக் கூறினான்" என்ப தாகும். இவ்வுரையில் ஓர் இடர்ப்பாடு தோன்றுகிறது.

மரபு என்பதற்கு முறைமை என்று பொருள் கொண்டது தவருகும். இதற்கு முன்னோர் ஆட்சி முறைமை என்பதே நேரிய பொருளாகும். இவ்வாறு கொண்டால் அகத்தியர் முதலாய முன்னோர் முறை பிறழ்ந்து கூறினர் என்பதற்கு இடனில்லாது போய்விடும். 'அரில்தபத் தெரிந்து' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'குற்றமற ஆராய்ந்து கூறி' என்று பொருள் கூறுகின்ருர். 'தெரிந்து' என்ற சொல்லுக்கு 'கூறி' என்று பொருள் கொள்வது பொருத்தமற்றதாகும். மேலும் இவர் கூறுகின்ற சிறப்புரை, "முற்கூறிய நூல்கள் போல எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் மயங்கக் கூருது வேருேர் அதிகாரமாகக் கூறினர் என்றதற்கு 'எழுத்து முறைகாட்டி' என்ருர்" என்பதாகும். யாம் முற்கூறியவாறு முந்திய நூல்களில் இவை மயங்கக் கிடந்தன என்பதற்கு ஆசிரியர்கள் சான்றுகள் கூற வில்லை யாதலான் இவ்வுரையும் பொருந்தாது. அரசன் சண்முகனர் கூறும் உரை—"ஒன்றனுட் பிரிதொன்று கலவாத மரபினையுடைய தன்னுடைய நூன் முறையைக் காட்டி" என்பதாகும். மேலும் 'மரபு' என்பதற்கு இவர் 'தொன்றுதொட்டுவந்த வழக்கு' என்றும் பொருள் கூறு கிருர். இவ்வுரையில் உள்ள குறைகள் யாவை எனின், 'எழுத்து' என்பதற்கு 'நூல்' எனப் பொருள்கொண்ட தொன்று. 'மரபு' என்பதனைத் தொன்றுதொட்டுவந்த வழக்கு என்று விளக்கினமையால் அவ்வழக்கு அகத்தியனர் முதலாயினரால் பின்பற்றப்பட்ட வழக்கேயாம். அவர் பின்பற்றவில்லை என்ற கொள்கை பொருத்த மற்றதாகும். சிவஞான முனிவர் உரை "இயற்றமிழும், இசைத்தமிழும், நாடகத்தமிழும்,முன்னூலுட்போல விரவாத தன்மையானே இயற்றமிழை வேறு பிரித்து முறையானே உலகிற் கறி வித்து" என்பதாகும். இவர் உரையின் குறைகளும் மேற் குறித்தவாறே. 'எழுத்து' என்பதற்கு 'இயற்றமிழ்' எனப் பொருள் கொள்ளின், இசை நாடகத்தமிழுக்கு சிறப்புப் பாயிரத்தில் மூலமின்மையான் அப்பொருள் கோள் பயனில தாகின்றது. பனம்பாரனர் 'எழுத்தும் சொல்லும் பொரு

ஞும் நாடி' எனக் கூறியிருத்தலினல், இயலிசை நாடகம் என்ற பிரிப்பை இவ்வுரையுட் புகுத்துவது பொருந்தாது என்பது வெளிப்படை.

ஆகவே இவ்வாசிரியர் உரைகளை யெல்லாம் இன்னணம் நுட்பமாக ஆராய்தலான் தெரியவருவதென்னை யெனின், 'மயங்கா மரபின் எழுத்துமுறைகாட்டி' என்ற தொடர் இவர்களை மயங்கவைத்தது; ஆகலின் உண்மைப் பொருள் விளங்கவில்லை; ஆகலின் கொண்டு கூட்டியும், இல்லாதது வருவித்தும், வலிந்து பொருள்கொண்டும் இடர்ப்படுகின்றனர் என்பதாம். இவ்வுரைகள் எல்லாம் தவறுடையன என்பதற்குச் சிறப்புப்பாயிரமே சான்று பகர்கின்றது. வடமொழி நான்மறைமுற்றிய அதங்கோட்டாசாற்குத் தமிழின் மூவகை இலக்கணங்களையோ, இயல் நூல் முறையையோ, இயற்றமிழில் இசை, நாடகம் விரவாத முறையையோ மரபுநிலை திரியாது குற்றமற எடுத்துக் கூறுவதன் பயன் யாதாம்? நான்மறை முற்றிய அதங் கோட்டாசாற்கு ஆசிரியர் தொல்காப்பியனார் விளக்கியது 'எழுத்து முறை' ஒன்றே. அஃதின்னதென இனி விளக்கு வாம்.

பனம்பாரனார் சிறப்புப்பாயிரத்தில் ஆசிரியர் தொல் காப்பியனாருடைய புலமையை இருகூறுகப் பிரித்து விதந்துள்ளார். முதற்கூறு 'வடவேங்கடம்' எனத் தொடங்கி 'போக்கறுபனுவல்' என்பதனுடன் முடிகின்றது. இரண்டாம் கூறு 'நிலந்தரு திருவிற்பாண்டியன்' எனத்தொடங்கி 'படிமையோனே' என்பதனைக் கொண்டு முடிகின்றது. இவ்விரு கூறுகளிலும் உள்ள எழுவாயினையும் பயனிலையையும் தொடர்பு படுத்தலாமேயொழிய பொருளைத் தொடர்ப் படுத்தல் ஒண்ணாது. அவ்வாறு தொடர்ப்படுத்த முயன்றதனாலேயே உரையாசிரியர் எல்லோரும் குறிச்சிபுக்க மானயினார். முதற்கூறிலுள்ள 'எழுத்து' என்பதும் பிற்கூறிலுள்ள 'எழுத்து' என்பதும் வேறு வேறு பொருளன.

முதற்கூறில் உள்ளது தமிழ் எழுத்திலக்கணத்தைச் சுட்டுகின்றது. பிற்கூறில் உள்ளது வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவாய ஒலி எழுத்தைச் சுட்டுகின்றது.

முதற்கண் 'நான்மறைமுற்றிய அதங் கோட்டாசான்' எனக்கூறுதலானும், பின்னர் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனக் கூறுதலானும், இடையிலகப்பட்ட 'மயங்கா மரபின் எழுத்துமுறைகாட்டி' என்பது வடமொழி எழுத்திற்கும் தமிழ் எழுத்திற்கும் பொதுவாகிய எழுத்து முறையின் இயல்பைச் சுட்டுகின்ற தென்பது போதரும். அவ்வியல்புதான் யாதோவெனிற் கூறுதும். ஆசிரியர் தொல்காப்பியனாருடைய நூலை முற்றவுங் கற்றுணர்ந்த பின்னரே பனம்பாரனார் சிறப்புப்பாயிரம் உரைத்தாரென்பதனைக் கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளால் உணரலாகும்.

"அவற்றுள்,
இயற் சொற்றாமே
**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்**
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே"
(சொல்லதிகாரம்—எச்சவியல் இரண்டாம் நூற்பா)

"எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை **அரில்தப நாடி**
அளபிற் கோடல் அந்தணர் **மறைத்தே**
அஃதிவண் நுவலா தெழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே."
(எழுத்ததிகாரம்—பிறப்பியல் இறுதிநூற்பா)

ஆசிரியர் தொல்காப்பியனாருடைய இந்நூற்பாக்களைச் சிறப்பாக உளத்திற்கொண்டு பனம்பாரனார் சிறப்புப்பாயிரமுரைத்துள்ளார் என்பதனைச் சிறப்புப்பாயிரத்துடன் இந்நூற்பாக்களை ஒப்புநோக்கின் உணரலாகும்:

வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்

தமிழ்கூறு நல்லுலகத்து
**வழக்குஞ்** செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு **நாடிச்**
**செந்தமி** ழியற்கை **சிவணிய நிலத்தொடு**
முந்து நூல்கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத்தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி னான்**மறை** முற்றிய
வதங்கோட் டாசாற் **கரிறபத்** தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

நூற்பாக்களிற் தடித்தெழுதிய ஏழுசொற்களும் பாயிரத்திற் தடித்தெழுதிய சொற்களேயாம் என்பது வெளிப்படை. அல்லதூஉம் சிறப்புப்பாயிரத்திற் பயின்ற **மறை, அரில்தப** என்ற இரு சொற்களும் தமிழ் மொழியிலும் வடமொழியிலும் பயில்கின்ற எழுத்துக்களின் ஒலிநுட்ப வேறுபாட்டினை விதக்கும் பிறப்பியல் புறனடை நூற்பாவிற் பயின்றிருக்கும் **மறை, அரில்தப** என்ற இரு சொற்களையும் சுட்டுகின்றன வென்பதனை யாரே மறுக்கவல்லார்!

இனி, தொல்காப்பியத்தில் 1610 நூற்பாக்கள் இருப்பவும் சிறப்புப்பாயிரத்துடன் ஒப்புநோக்குவதற்கு இவ்விரு நூற்பாக்களுக்கு மாத்திரம் உள்ள சிறப்பியல்புகள் யாவையெனிற் கூறுதும்: சொல்லதிகாரத்தில் முதல் எட்டு இயல்களிலும் கூறப்படாத சொல்லிலக்கணத்தை எச்சவியலில் ஆசிரியர் தொகுத்துக் கூறுகின்றார். எச்சவியலின் முதல் நான்கு நூற்பாக்களில், செய்யுள் செய்தற்கு வேண்டிய சொற்கள் இவையென்றும், தமிழ்கூறும் நல்லுலகம் இன்னதென்றும் ஆசிரியர் விதந்தோதுகின்றார். ஐந்தாம் நூற்பாவில் தமிழ்கூறும் நல்லுலகத்தைச் சாராதனவாயினும் ஆன்றோரால் செய்யுள் செய்தற்கு வடசொற்கள் தமிழில் ஆளப்படும் முறையை எடுத்துக் கூறுகின்றார். இவற்றைப்

பனம்பாரனுர் சிறப்புப்பாயிரத்தின் முதற்கூறில் குறித் துள்ளார்.

இனி, பிறப்பியல் புறனடை நூற்பாவின் பொருளை நோக்குதும்: நச்சினர்க்கினியர் உரைப்படி இதன் பொருள்:

"உந்தியிற் பிறந்தகாற்று எண்வகை நிலைக்களனுற்று எழுத்துருப்பெற்று வெளிப்படுதலை ஆசிரியன் கூறினன். யானும் அவ்வாறே கூறுகின்றேன். உந்தியினும் மூலா தாரத்தினும் தோன்றி எழுத்துருப்பெருக் காற்றினைக் கூறு படுத்தல் பார்ப்பாரது வேதத்தின்கண்ணே யுளது. அதனை இவண் கூறவில்லை. எழுத்துருப் பெறுகின்ற காற்றிற்கே அளவு கூறினேன்" என்பதாகும்.

இவ்வுரையிலிருந்து அறியக்கிடக்கும் உண்மைகள்: 'எழுத்திற்கேதுவாகிய காற்றினைக் கூறுபடுத்தல் தவருகா தென்பதும், இப்பொழுது வடமொழி நெடுங்கணக்கிற் காணப்படுவன எழுத்துக்களே யாதலால் ஆசிரியன் கூறிய ஒலியிலக்கணம் அவற்றிற்கும் பொருந்து மென்பதும், தொல்காப்பியர் இவ்வொலி யிலக்கணத்தை அகத்தியனுரைப் பின்பற்றியே கூறியிருக்கின்ருர் என்பதும், நான்மறை ஓது தலில் எழுத்துருப்பெருக்காற்றினைக் கூறுபடுத்தியுச்சரிக்கும் மரபினை எடுத்துச் சுட்டுதலால் தாம் ஐந்திரம் நிறைந்தவர் என்பதனைப் புலப்படுத்தியிருக்கின்ருர் என்பதுவுமாம்'.

இக்கருத்தினையே பனம்பாரனுர் சிறப்புப்பாயிரத்தின் பிற்கூறில் எடுத்துக்கூறினர். இதுகாறும் கூறியவற்றை உளத்திற் கொண்டு, "அறங்கரைநாவின்...............படிமை யோனே" என்ற அடிகளின் பொருளை விளக்குதும்:

'அறங்கூறும் நாவினையுடையோனும், நான்மறை முற்றுமுணர்ந்தோனும், அதங்கோடென்னும் ஊரில் வாழ் வோனுமாகிய ஆசிரியனுக்கு முந்து நூலாசிரியராகிய

அகத்தியனார் முதலியோர் கூறிய மரபுமாறாது தமது நூலின் பிறப்பியலில் தமிழ் எழுத்திற்கும் வடமொழி எழுத்திற்கும் பொதுவான பிறப்புமுறையைக் கூறியிருத்தலைக் குற்றமறத் தெளிவாக எடுத்துக்காட்டி அதனால் வடமொழி ஐந்திர முறையை முற்றுமுணர்ந்த தொல்காப்பியன் எனும் தம் இயற்பெயர் தமது நூலுக்கும் புலப்படும்படியாகச் செய்து அதனால் கடல் சூழ்ந்த வுலகில் பலவகையான புகழை நிலை நாட்டிய தவத்தோன்" என்பதே பொருளாகும். இது காறும் கூறியவாற்றால் 'எழுத்தும் சொல்லும் பொருளும்' என முதற்கண் கூறிய பனம்பாரனார் மீண்டும் 'எழுத்து முறைகாட்டி' எனக்கூறினமைக்கு உரையாசிரியர்கள் கூறிய உரைகளும், அமைதிகளும், பொருத்தமற்றன என்பதனைத் தெள்ளிதின் உணரலாகும். இனி நச்சினார்க் கினியர் ஆசிரியர் பெயர் திரணதூமாக்கினியார் எனக் கூறு கின்றாரே எனின், அது உண்மைவரலாற்றுக்குப் பொருந் தாத புராணகதை என மறுக்க. நச்சினார்க்கினியரும் அரசன் சண்முகனாரும் நான்மறை: தைத்திரியம், பௌடி கம், தலவாகாரம், சாமவேதம் என்பன என்று கூறுவர். இவர்கள் கருத்துப்படி, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன, தொல்காப்பியருக்கும் அதங்கோட்டாசிரியருக்கும் பிற்காலத்தினராகிய வியாச முனிவரால் நான்கு கூறாக வகுக்கப்பட்டவையாம். ஆயினும் புறனடை நூற்பாவிற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இவர்கள் கூறியிருக்கும் உரைகளைக் கூர்ந்துநோக்கின் நான்மறைகள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவே என்று கொள்ள வேண்டியிருக்கின்றது.

இனி ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ள பிறப் பிலக்கணம் உலகமொழிகள் எல்லாவற்றிற்கும் பொருந்து மாற்றை விளக்குவாம்.

### ஆய்தம்.

முப்பத்து மூன்றாய தமிழ் எழுத்துக்களில் ஆய்தமே

எல்லா எழுத்துக்களும் தோன்றுவதற்கு அடிப்படையாய் நிற்பதால் முதற்கண் அதனைப்பற்றிய ஆராய்ச்சியை நிகழ்த்துவாம். ஆய்தம் என்ற சொல் நுட்பமான ஒலியினை யுடைய எழுத்தெனப் பொருள்படும். தமிழகராதிகளும் இச்சொல்லுக்கு அஃகேனம், சிறுமை, நுண்மை எனப் பொருள் தருகின்றன. தொல்காப்பியத்தின் சொல்லதிகார உரியியலில் கூறப்பட்டுள்ள

ஓய்த லாய்த னிழத்தல் சாஅ
யாவயி னன்கு முள்ளத னுணுக்கம்

என்ற நூற்பா நுணுக்கமாகிய குறிப்புணர்த்தும் நான்கு சொற்களைக் குறிப்பிட்டுள்ளது. அவற்றுள் ஒன்று ஆய்தல் என்பது. இச்சொல்லினின்றே ஆய்தம் என்ற சொல் பெறப்பட்டிருத்தல்வேண்டும். தொல்காப்பியத்தின் முதல் இரண்டு நூற்பாக்கள் தமிழ் எழுத்துக்களின் பெயர்களைக் கூறுகின்றன :

எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே

அவைதாம்,
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன

என்பன நூற்பாக்கள். இவற்றுள், அகரம், னகரம், குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பன கரம் சாரியை பெற்றன. ஆய்தம் நீங்கிய எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் கரம், காரம் முதலிய சாரியை கூறிய தொல்காப்பியனார் ஆய்தத்திற்குச் சாரியை கூறாததன் காரணம் இது இயற்கையாகவே மகரவொற்றில் முடிந்திருப்பதுதான். இவ்வெழுத்திற்கு அஃகேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று என்ற வேறு நான்கு பெயர்களும் இலக்கணங்களில் பயின்றுள்ளன. புலவர் புராணம் பாடிய தண்டபாணி

சுவாமிகள் இதற்கு எஃகம் என்றதொரு பெயரையும் கொடுத்துள்ளார். தமிழ்மொழியில் அருகி வழங்கும் இவ் வெழுத்திற்கு இத்தனைப் பெயர்கள் எதற்காக ஏற்பட்டன என்பதனைத் தமிழறிஞர் இதுவரையிலும் ஆராயவில்லை. புலவர் புராணமுடையார் அகத்திய மகா முனிவர் சருக்கத்தில் தமிழ் எழுத்துக்களைக் குறித்து இரண்டு செய்யுட்கள் கூறியுள்ளார். அவை :—

ஆயுதவெழுத் தொன்றென்னு தவர்களுமையு மௌவும்
தோயு மாத்திரை யிரண்டாச் சொல்பவர்களும் போன்றுள்ள
பேயுணர்வின ரெல்லோரும் பெரும்புகழ்க் கும்பநாதன்
ஆயுமுன்றமிழ்ச் சீரோர்ந்து நவின்றமை வினவிலாரே.

கண்ணிகர் மெய்யுஞ் சென்னிக் கணமுறழ் சேர்க்கைச்சீரும்
திண்ணிய புயங்களேபோற் றிகழ்தரு முயிரும் வேறொன்
றெண்ணிடற் கரியதாகு மெஃகமு மியலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன் செவ்வேள் பொற்பதத் தடிமைதானே.

என்பன.

முதற் செய்யுளின் பொருள் :—

'ஆய்த எழுத்தை ஓர் ஒப்பற்ற எழுத்து என்று கொள்ளாதவர்களும் ஐகார ஔகாரங்களுக்கு இருமாத்திரை எனக் கூறுகின்றவர்களும், இவர்களைப்போன்ற அறிவிலாரும் புகழ்நிறைந்த அகத்திய மாமுனி முன்பு தமிழின் பெருமை யுணர்ந்து உரைத்தவற்றை ஆராயாதவர்' என்பதாகும்.

இரண்டாம் செய்யுளின் பொருள் :—

'முருகப் பெருமானுடைய பதினெண் கண்களைப் போன்ற பதினெட்டு மெய்களையும், அப்பெருமானுடைய ஆறு தலைகளைப்போல் மெய்கள் அவ்வாறாகப் பிரிந்துள்ள அழகையும் அவருடைய வலிமை பொருந்திய பன்னிரண்டு தோள்கள்போல் விளங்குகின்ற பன்னிரண்டு உயிர்களையும், வேறொரு எழுத்தினை நிகராக எண்ண முடியாத ஆய்தத்

தினையும் தன்னுடைய இலக்கண நூலிற்காட்டும் புண்ணியம் செய்த முனிவர்க்கரசனாகிய அகத்தியன் முருகவேளின் பொற்பாதங்களுக்கு அடிமை, என்பதாகும்.

'ஆயுத வெழுத் தொன்றென்றுதவர்க்ளும்' என்பதற்கு இந்நூலாசிரியரின் மகனாராகிய தி. மு. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள், 'ஆய்த வெழுத்தைச் சார்பாகக் கொள்வது விடுத்து தனித்த சுதந்தர எழுத்தாகக் கொள்ளாதோரும்' எனக் குறிப்புரை எழுதியுள்ளார். இவ்வுரை தவறானது. ஏனெனில் இங்குக் காட்டப்பெற்ற இரண்டாவது செய்யுளில் ஆய்தம் ஒப்பில்லாத எழுத்தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையின் 'ஒன்று' என்பதற்கு 'ஒப்பிலாத' என்பதே பொருள். தண்டபாணி சுவாமிகள் இயற்றியுள்ள இலக்கண நூலில், ஐ, ஔ, என்ற எழுத்துக்களைக் குறித்து,

"ஐ, ஔ, என்பவை குறினெடில் நடுவாம்,
இவற்றி னொன்றொன் றொன்றரை மாத்திரை"

என நூற்பா யாத்துள்ளார். இவ்வெழுத்துக்களைக் குறித்துப் பிறிதோரிடத்தில் ஆராய்வாம். மேற்காட்டிய இரு செய்யுட்களிலிருந்தும் அறியக்கிடக்கும் உண்மைகள் : அகத்தியர் இயற்றிய இலக்கண நூலைக் கற்றவராகத் தம்மை தண்டபாணி சுவாமிகள் காட்டிக்கொள்வதுடன் நில்லாது, தொல்காப்பியர் போன்ற இலக்கண நூலாசிரியர்களைக் கண்டித்திருக்கின்றார் என்பதும், ஆய்தத்தை ஒப்பிலா எழுத்தாக அகத்தியனார் கூறியிருக்கின்றார் என்பதுமாம். இக்கண்டனம் ஒருசிறிது பொருந்தும். ஏனெனில் தொல்காப்பியனார் தமது நூலில் ஆய்த வெழுத்தின் ஒலித் தன்மையை உய்த்துணர வைத்திருக்கின்றனரேயன்றி அஃதின்னதென வெளிப்படையாக விதக்கவில்லை. ஒருக்கால் ஆய்தத்தைக்குறித்த இரண்டொரு நூற்பாக்கள் தொல்காப்பியத்தின் இக்காலத்துப் படிகளில் விடுபட்டிருப்பினும் இருக்கலாம். இனி மேற் செல்லுதும்.

ஆய்தம் ஒப்பற்ற எழுத்து ஆதலின் அதற்குத் தனி நிலை என்ற பெயரும் ஏற்பட்டது. இக்காலத்தில் நாம் ஆய்தத்தின் ஒலி வடமொழி ஹ அல்லது ஆங்கில H போன்றது என்று கொண்டுள்ளோம். இவ்வொலி எஃகு என்ற சொல்லில் உளது. ஆனால் கஃசு, கஃபு, என்ற சொற்களில் இவ்வொலி பயின்றுள்ளது என்று கொள்வது தவறு. எஃகு என்ற சொல்லில் உள்ள ஒலி ஆங்கில H அல்லது வடமொழி ஹ இவற்றிற்கு நேரானதே. கஃசு என்ற சொல்லில் உள்ள ஒலி ஆங்கில S அல்லது வடமொழி ஸ ஒலியாகும். கஃபு என்ற சொல்லில் உள்ள ஒலி ஆங்கில F ஒலியாகும். ஆய்தம் தனிச் சொற்களில் பயிலுமாற்றை ஆசிரியர்

குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே

என்ற நூற்பாவில் விளக்குகின்றார். ஒரு குற்றெழுத்திற்குப் பிறகும் உயிரேறிய க ச ட த ப ற என்ற ஆறு வல்லெழுத்துக்களில் ஒன்றனுக்கு முன்னரும் ஆய்தம் வரும். மேலே காட்டிய எடுத்துக்காட்டுகளில் கு, சு, பு, இவற்றிற்கு முன்னர் ஆய்தம் வந்துளது. அஃது, இஃது, முப்பஃது என்ற சொற்களில் து என்ற எழுத்திற்கு முன்னர் ஆய்தம் வந்துளது. இதன் ஒலி NOTHING என்ற ஆங்கிலச் சொல்லில் உள்ள TH என்பதன் ஒலியாகும். ட, ற என்ற எழுத்துக்களுக்கு முன்னர் ஆய்தம் வருகின்ற தனிச்சொற்கள் இக்காலத்தில் வழக்கு வீழ்ந்தன. உரையாசிரியர்களும் எடுத்துக்காட்டுகள் தந்திலர். புணர்மொழிகளிலும் செய்யுளிலும் ட ற இவற்றின் முன்னர் ஆய்தம் வருகின்றது.

முள் + தீது = முஃடீது.
அல் + திணை = அஃறிணை.

இவற்றுள் ட கரத்தின் ஒலி What என்ற ஆங்கிலச் சொல்லின் ஈற்றெழுத்தின் ஒலிக்கு நேராகின்றது. ற கரம்

ஆய்தத்தின் சார்பால் தனக்கியற்கையாயுள்ள வல்லொலி யுடன் உயிர்ப்பொலியும் பெற்றது. இவ்வாறு ஆய்தச் சார்பால் க ச ட த ப ற என்ற ஆறு வல்லெழுத்துக் களும் மெலிந்து உயிர்ப்பொலியாய் மாறி ஒலித்துவருதலைத் தமிழறிஞர் பன்னூறு ஆண்டுகளாக உணர்த்தவறிவிட்டனர். இனி யாம் கூறுவதே ஆய்தத்தின் உண்மையான ஒலித் தன்மை என்பதனை நிலை நாட்டுதும்.

'அவைதாம்' என்று தொடங்கும் இரண்டாம் நூற்பா வுரையில் நச்சினார்க்கினியர் ஆய்தத்தைக் குறித்து 'இதற்கு வடிவு கூறினர், ஏனை ஒற்றுக்கள் போல உயிரேறாது ஓசை விகாரமாய் நிற்பதொன்றாகலின்' என்று கூறி யிருப்பதன் பொருளை நோக்க வேண்டும். 'மெய்யொற்றுக்கள்போல உயிரேறி உயிர்மெய்யாகாமல் சார்ந்த க ச ட த ப ற என்ற எழுத்துக்களின் ஒலியை அததற்குத்தகுந்த மெலிந்த உயிர்ப் பொலியாய் விகாரப்படுத்திச் செல்வதாகலின்' என்பது இவ்வுரையின் விளக்கமாகும். இதனைக் கீழ்க்காட்டிய வரிவிளக்கத்தால் தெளிக:

| | |
|---|---|
| க் + அ = க. | ஃ + அ = ? |
| ச் + ஆ = சா. | ஃ + ஆ = ? |
| ட் + இ = டி. | ஃ + இ = ? |
| த் + உ = து. | ஃ + உ = ? |
| ப் + ஊ = பூ. | ஃ + ஊ = ? |
| ற் + எ = றெ. | ஃ + எ = ? |

ஃ + க = ஹ, H. எஃகு.
ஃ + ச = S, ஸ. கஃசு.
ஃ + ட = T. முஃடீது.
ஃ + த = Nothing. அஃது, இஃது.
ஃ + ப = F. கஃபு.
ஃ + ற = ற்ற். அஃறிணை.

இதனாலேயே 'சார்ந்து வரினல்லது' என்று தொடங்கும் பிறப்பியல் நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரையில், 'ஏனை ஒத்தகாட்சியின் இயலும்' என்பதற்கு, 'ஒழிந்த ஆய்தம் **தமக்குப்** பொருந்தின நெஞ்சு வளியாற் பிறக்கும்' எனப் பொருள் கூறினார். ஆய்தம் தனக்குப் பொருந்தின என்று கூறாது 'தமக்குப் பொருந்தின' என ஆய்தத்தினைப் பன்மைப்படுத்திக் கூறினமையை நோக்கவேண்டும். க ச ட த ப ற என்ற ஆறு எழுத்துக்களுடனும் அததற்குப் பொருந்திய நெஞ்சுவளியால் ஆய்தம் பிறக்கின்றமையால் 'தமக்குப் பொருந்தின' எனக் கூறினார்.

வடமொழியிலுள்ள விசர்க்கம் ( : ) க, ப, ஆகிய இரண்டு எழுத்துக்களுக்கு முன்னர் ஆய்தத்தின் ஒலித் தன்மையைப் பெற்று நடக்கின்றது. ககரம் ஹ ஒலியாகவும், பகரம் **F** ஒலியாகவும் மாறுகின்றது :

ராம : + கரோதி = ராமஹரோதி.

ராம : + பஸ்யதி = ராம—பஸ்யதி.

ககரத்திற்கு முன் விசர்க்கம் வருவதற்கு ஜி—க்வா மூலியம் என்றும், பகரத்திற்கு முன் விசர்க்கம் வருவதற்கு உபத் மாநீயம் என்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பாணினீ இவற்றை பரா—ச் ரி தெள (அடுத்த பின்னெழுத்தைச் சார்பாக உடையன) என்றும், ஆ—ச் ரய—ச் |தாந [1]பா[U]கி ந—கா (சார்ந்த எழுத்தின் பிறப்பிடமே இவைகளுக்கும் பிறப்பிடம்) என்றும் கூறியுள்ளார்.

இனி ஆய்தத்தின் இவ்வாறாகிய ஒலித் தன்மையை இரண்டொரு எடுத்துக்காட்டுக்கள் மூலம் உறுதிப்படுத்துவாம்.

முள் + தீது = முஃடீது.

அல் + திணை = அஃறிணை.

இச்சொற்களில் முன்னதை மு—டீது என்று ஒலிப்பது இயற்கையே தவிர மு—க்டீது என்று ஒலிப்பது இயற்கையாகாது. பிறப்பிடத்தில் டகரம் ளகரத்திற்கும் தகரத்திற்கும் அண்மையில் உள்ளதால் இரண்டும் கெட்டு உயிர்ப்பொலி டகரம் தோன்றியது. பின்னதை அ—றிணை என்று ஒலிப்பது இயற்கையேயன்றி அ—க்றிணை என்று ஒலிப்பது இயற்கையாகாது. பிறப்பிடத்தில் றகரம் லகரத்திற்கும் தகரத்திற்கும் அண்மையில் உள்ளதால் இரண்டும் கெட்டு உயிர்ப்பொலி றகரம் தோன்றலாயது. எழுத்துக்களின் பிறப்பிடங்கள் குறித்தும் எமது குறியீடுகள் குறித்தும் பின்னர் விளக்குவாம்.

'கஃஃ றென்னும் கல்லதரத்தம்'
'சுஃஃ றென்னும் தண்டோட்டுப் பெண்ணை'

என்ற மேற்கோள்களில் ஆய்தம் சார்ந்த சொற்களை க—க் றென்னும், சு—க் றென்னும் என்று ஒலிப்பது தவறாகும். இவ்வாறொலித்தால் மேற்கோள்களின் பொருள்கள் சிறிதும் விளக்க முறா. இவற்றின் பொருள்கள்: மிகவும் இருண்ட கல் நிறைந்த வழியை யுடைய காடு, காற்றில் ஒலி செய்கின்ற குளிர்ச்சி பொருந்திய ஓலைகளையுடைய பனை என்பனவாகும். முன்னது நிறக்குறிப்பினை யுணர்த்திற்று. பின்னது ஒலிக்குறிப்பை உணர்த்திற்று. ஆய்தம் இம்மேற்கோள்களில் அளபெடுத்து நிற்றலால் றகரம் இருமடங்கு உயிர்ப்பொலியாய் மாறி ற்ற்ற் என்ற ஒலியுடையதாகின்றது. இவற்றை ஒலித்துக் காண்க.

'சார்ந்துவரினல்லது' என்று தொடங்கும் நூற்பாவிற்கு உரை செய்யுங்கால் நச்சினார்க்கினியர், 'ஏனை ஒத்தகாட்சியின் இயலும்' என்பதற்கு 'ஒழிந்த ஆய்தம் தமக்குப் பொருந்தின நெஞ்சுவளியாற் பிறக்கும்' என உரை கூறினார் என மேலே காட்டி 'தமக்கு' என்ற பன்மையினை வலியுறுத்தினோம். ஈண்டு அவ்வுரையில் 'நெஞ்சுவளி' என்ற தொடரை வலியுறுத்துகின்றோம். ஏனெனில் மேலே

கூறிய எடுத்துக்காட்டுகளில் க ச ட த ப ற என்ற வல்லெழுத்துக்களின் ஒலியை உயிர்ப்பொலிகளாய் மாற்றும் போது ஆய்தம் நெஞ்சிலிருந்து வெளிவரும் காற்றுயத் தொழில் புரிகின்றது. ஆனால் இது தமிழ் மொழியில் ஆய்தம் பயிலும் முறையே யாகும். உண்மையில் ஆய்தத்தின் ஒலித்தன்மை இதைப்போல் இன்னும் இருமடங்கு விரிவடைகின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய பிறப்பியல் வடவெழுத்துக்களுக்கும் பொருந்தும் என்று மேலே கூறினோம். அஃதெவ்வாறென்பதனை இனிக்காண்போம். ஈண்டு ஆய்தத்தின் வரிவடிவைப்பற்றிய ஆராய்ச்சி இன்றியமையாததாகின்றது.

அவை தாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத் தோரன்ன

என்ற நூற்பாவில் 'முப்பாற் புள்ளியும்' என்பதற்கு உரையாசிரியர்கள் இருவகையாகப் பொருள் கூறுகின்றனர்.

பேராசிரியர், 'முப்பாற்புள்ளி' என்பதற்கு, 'குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமும் என்ற முப்பாற் புள்ளிபெற்ற எழுத்துக்களும்' என்று பொருள் கூறினார். சிவஞானமுனிவர் சூத்திர விருத்தியுள் இதனையே வலியுறுத்தினார். ஆசிரியர் தொல்காப்பியனார் புணரியலில்

அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்

என்ற நூற்பாவிற்குப் • பின்னர், 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்ற நூற்பாவைக் கூறியிருத்தலால் இவர்கள் உரை வலியுடையதுபோலத் தோன்றுகிறது.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும்
மற்றவை தாமே புள்ளிபெறுமே

என்ற சங்க யாப்பு நூற்பா (யாப்—விருத்தி—27ம் பக்கம்) இதனையே வலியுறுத்துகின்றது. "தொல்லை வடிவின........ ........புள்ளி" என்ற நன்னூல் நூற்பாவுரையில் மயிலைநாதர் 'குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற்புள்ளி கொடுப்பாரும் உளரெனக்கொள்க" எனக்கூறியுள்ளார்: இவைகளுக்குப் புள்ளி கொடுக்கும் வழக்கு இன்றும் மலையாள மொழியில் உள்ளது.

ஆகவே 'முப்பாற்புள்ளி' என்பது சார்பெழுத்து மூன்றையும் குறிக்கின்றதென்றவுரை அசைக்கமுடியாத தாகத் தோன்றுகிறது.

நச்சினார்க்கினியர், 'முப்பாற் புள்ளி' என்பது ஆய்தத் தினையே குறிக்கின்றதென்பதனை வலியுறுத்துகின்றார். அவர் இதற்கு 'ஆய்தம் என்று சொல்லப்பட்ட மூன்று **கூற்றதாகிய** புள்ளிவடிவு' என்ற பொருள்கூறி 'ஆய்தம் என்ற **ஓசைதான்** அடுப்புக் கூட்டுப்போல (⸫) மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் என்றார்' எனக் காரணங் கூறித் தமதுரை நிறுவினர். 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்ற நூற்பாவிற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் 'குற்றியலுகரம் புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுக் கும்' என்ற பொருள் கூறுதலினால் இவர்களுக்கு, குற்றிய லிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் புள்ளியுண்டென்ற கொள்கை உடன்பாடன்றெனத் தெரிகின்றது. இக்காலத்து அறிஞர்களிற் சிலர் பேராசிரியர், சிவஞான முனிவர் இவர்கள் உரையே சரியெனக் கொள்கின்றனர். இனி எமது கருத்தினை யுரைப்பாம். இருதரப்பினர் உரை களும் ஓரளவில் சரியான உரைகள் என்பதும் ஓரளவில் தவறான உரைகள் என்பதும் எமது ஆய்வின் முடிவு.

குற்றியலிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் புள்ளி யுண்டா என்பது 'அவைதாம்' என்றுதொடங்கும் நூற்பா

வால் எழும் கேள்வியன்று. 'முப்பாற்புள்ளி' என்பது சார்பெழுத்து மூன்றையும் குறிக்கின்றதா அல்லது நச்சினார்க்கினியர் கருதுகிறபடி ஆய்தத்தை மாத்திரம் குறிக்கின்றதா என்பதே கேள்வி. ஆய்தத்தின் வரிவடிவென்ன? ஆய்தம் மூன்று புள்ளி வடிவுடையதென்பது மறுக்கவொண்ணா வுண்மையாகும். 'ஆய்தம் அடுப்புக்கூட்டுப் போல மூன்றுபுள்ளி வடிவிற்று' என்று கூறிய நச்சினார்க்கினியர், அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப' எனவும் விளக்கினார். இதனாற் பெறப்படுவது யாதெனில் நச்சினார்க்கினியர் காலத்தில் ஆய்தம் மூன்று சுன்னமாக எழுதப்பட்டதென்பதும், அதன் உண்மை வடிவான ∴ அடுப்புக்கூட்டு போன்ற முப்பாலதான புள்ளி வடிவை அவர் உணர்ந்திருந்தார் என்பதுமாம். புள்ளி என்றசொல் பண்டைக்காலத்தில் செங்குத்தாக எழுதப்படும் ஒரு சிறு கோட்டினையே குறித்தது. இக்காலத்தும் 'கிட்டிப்புள்' என்ற ஊர்ப்புற விளையாட்டில் கிட்டி என்பது குறுந்தடியையும், புள் என்பது அதனால் உந்தியெறியப்படும் விரல் நீட்டமுள்ள கட்டையையும் குறிக்கின்றன. பறவை பறப்பதுபோல உந்தியெறியப்பட்ட கட்டை பறப்பதால் அதற்குப் புள் என்றபெயர் வந்தது. இஃதெவ்வாறாயினும் புள்ளி என்பது செங்குத்தாக எழுதப்படும் சிறுகோடு என்பது அறியக்கிடக்கின்றது. ஆய்தத்தின் வரி வடிவு மூன்று புள்ளியே என்பதற்குக் கல்வெட்டுச் சான்றும் உளது. திருவாலங்காட்டுச் செப்பேடு ஒன்றில் ஆய்தம் ∴ இவ்வாறாகப் பொறிக்கப்பட்டுள்ளது. காஞ்சி கல்வெட்டு ஒன்றில் வேகவதியாற்றின் பெயர் வெ∴கா என்று பொறிக்கப்பெற்றுள்ளது. ஆய்தத்தின் இவ்வரி வடிவில் தலையில் புள்ளியும் அடியில் புள்ளிகளுக்குப் பதிலாக இருசுன்னங்களும் காணப்படுகின்றன. ஆகவே இது புள்ளி சுன்னமாக மாறி வரும் நிலைமையைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும் ஆய்தத்தின் வரிவடிவு அடுப்புக்கூட்டுப்போல மூன்று கூற்றதாக அமைந்த புள்ளிகளே. இனித் தொல்காப்பியம் முழுமையும் ஆராயின் புள்ளி என்ற

பெயர் மெய்யெழுத்திற்கும் ஆய்த வெழுத்திற்கு மாத்திரம் பயின்றிருத்தலைக் காண்போம். குற்றியலிகரக் குற்றிய லுகரங்களைப் பற்றிய எத்தனையோ நூற்பாக்கள் தொல் காப்பியத்தில் உள்ளன. அவ்வாறிருந்தும் ஆசிரியர் தொல் காப்பியனார் அவைகளுக்குப் புள்ளி என்ற பெயர் கொடுக்க வில்லை. ஆனால் ஆய்தத்தைப் புள்ளி என்ற பெயரால் கீழ்வரும் நூற்பாக்களில் ஆசிரியர் வழங்கியிருக்கின்றார் :

குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே

பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி
நிற்றல் வேண்டும் ஆய்தப்புள்ளி

முன்உயிர் வருமிடத் தாய்தப்புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழியான.

ஆகவே 'முப்பாற் புள்ளி' என்பது ஆய்தம் ஒன் றனையே குறிக்கின்றதென்பது ஒருதலை. பேராசிரியரும் சிவஞான முனிவரும் கொண்ட வுரை தவறானதென்பது வெள்ளிடைமலை. 'முப்புள்ளி' என்றற்குப் பதிலாக 'முப்பாற் புள்ளி' என்ற தொடர் அமைந்தது இவர்களை மயங்க வைத்தது. இவர்கள் கொண்டவுரை தவறான தென்பதற்கு வேறு சான்றுகளும் காட்டுதும். 'முப்பாற் புள்ளி' என்பது சார்பெழுத்து மூன்றையும் குறிக்குமாயின், முதல் நூற்பாவில் 'சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே' என அவ்வெழுத்துக்களின் தொகை மூன்றெனக் குறிப்பிட்டவர் அடுத்த நூற்பாவிலேயே தொகை மூன் றெனக் குறிப்பிடுதல் மிகையாமன்றோ? அற்றன்று, அவை மூன்றும் புள்ளி பெறுவதைக் குறித்தற்கே மீண்டும் தொகை கூறினாரெனின், ஆய்தம் தனிநிலை என்ற பெயர் பெற்றதாகலின் புள்ளிபெறாத அதன் வரிவடிவென்ன என்றகேள்வி பிறக்கின்றது. மேலும் 'முப்புள்ளியும்' என்று கூறுவதே சாலுமன்றோ? முப்பாற்புள்ளி' என்

பதன் பொருள், மூன்று கூற்றதாகிய, அல்லது மூன்று பகுதியினதாகிய புள்ளி என்பது அன்றோ? சார்பெழுத்து மூன்றாயினும் அவை ஒரே அடியிற் றோன்றிய மூன்று கிளை என எவ்வாறு கூறவியலும்? குற்றியலிகரவுகரங்கள் மெய்ம் மேல் ஊர்ந்துவருவன. ஆய்தம் மெய்யைச்சார்ந்து அதன் ஒலியைத்திரிப்பது. ஆகலின் இவை ஒரே தன்மையன அல்ல.

ஆய்தத்தினை முப்பாற்புள்ளி எனக் கூறியது எற்றுக் கென்பதனை இனி ஆராய்தும். நச்சினார்க்கினியர் கருத்துப் படி ஆய்தத்தின் வெறும் வரிவடிவைக் குறிப்பதற்கு மாத்திரம் அமைந்ததன்று முப்பாற்புள்ளி. முக்கூற்றதாகிய பொருள் வேறுபாட்டினையும் உணர்த்தற்கு அமைந்தது முப்பாற்புள்ளி. 'முப்பால்' என்பது மூன்றுபகுதிகளைக் குறிக்கின்ற தென்பது தொல்காப்பியத்தின் மூன்றாம் நூற்பாவாலும் உறுதியாகின்றது.

> அவற்றுள்,
> அ, இ, உ, எ, ஒ என்னும்
> அப்பால் ஐந்தும்
> ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.

இதில் 'அப்பால் ஐந்தும்' என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள 'அப்பகுதிகளைந்தும்' என்ற பொருளன்றி வேறு பொருள் காண்டல் அரிது. ஆகலின் 'முப்பாற் புள்ளி' என்பது ஆய்தம் ஒன்றையே குறிக்கின்ற தென்பது அசைக்க வொண்ணாத உண்மையாம். இதனை மேலும் வலி யுறுத்துவாம்.

'தமிழ் நெடுங்கணக்கும் அதன் மந்திரப் பொருளும்' ('Tamil Alphabet—Its Mystic Aspect') என்ற நூலில் தமிழ் எழுத்துக்களை காலஞ்சென்ற தமிழ்ப் பேரறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் கீழே காட்டியவாறு பாகுபாடு செய்துள்ளார்:

> ஆய்தம்—பதி (கடவுள்)

உயிர்—பசு (ஆன்மா)

வல்லினம்—ஆணவம்
இடையினம்—மாயை } பாசம் (கட்டு)
மெல்லினம்—காமியம்

இவற்றுள் ஆய்தம் பதியாகின்றது. தனிநிலை என்ற பெயருக்கு இது மிகவும் பொருத்தமான பொருளாகின்றது. மூன்று புள்ளிகளில் ஒன்று பதியில் பதி என்றும், மற்றொன்று பதியில் பசு என்றும், மூன்றும்புள்ளி பதியில் பாசம் என்றும் அறிஞர் நாயக்கர் கூறியுள்ளார். மேலும் மூன்று புள்ளிகளையும் சிவபெருமானுடைய மூன்று கண்களுக்கு ஒப்பிட்டு இவை, தீ, ஞாயிறு, மதி, ஆகிய மூன்றனை யும் குறிப்பிடுகின்றன வென்றும் கூறியுள்ளார். ஆகவே மூன்று புள்ளிகளையும் முப்பாலதாகப் பிரித்தல் தவறுகாமை காண்க.

எனினும் பேராசிரியரும் சிவஞானமுனிவரும் குற்றிய லிகரத்திற்கும் குற்றியலுகரத்திற்கும் புள்ளியுண்டென்று கொண்டமை தவறுகாது. 'முப்பாற்புள்ளி' என்பது சார் பெழுத்து மூன்றையும் குறிக்கின்றதெனக் கொண்டது தான் தவறு. மேலே எடுத்துக்காட்டிய சங்க யாப்பு நூற் பாவும், 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்ற தொல்காப்பிய நூற்பாவும், இன்றைய மலையாள வழக்கும் இவைகளுக்குப் புள்ளியுண்டென்பதனையே காட்டுகின்றன. இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' என்ற நூற்பாவிற்குக் கூறியுள்ள பொருள் தவறு என்பது வெளிப்படை. இவர்கள் மயக்கத் திற்குக் காரணம் கூறுவாம்.

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'
'எகர ஒகரத்தியற்கையு மற்றே'

என்ற இரு நூற்பாக்களும் தொல்காப்பியத்தில் நூன் மரபிலும்,

'அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்'

'குற்றியலுகரமும் அற்றென மொழிப'

என்ற இரு நூற்பாக்களும் தொல்காப்பியத்தில் புணரியலி லும் வந்துள்ளன.

நூன்மரபு நூற்பாக்களின் பொருள்:

தனி பதினெட்டு மெய்களின் இயற்கை வரிவடிவு புள்ளிபெற்று நிற்றல். எகர ஒகரங்களும் அவ்வாறே என்பதாம்.

புணரியல் நூற்பாக்களின் பொருள்:

சொற்களின் ஈற்றிலுள்ள மெய்கள் புள்ளிபெற்று நிற்கும். அவை வருமொழி முதலில் உயிர்வருமானல் அஃதேற இடங்கொடுத்து புள்ளி யிழந்து நிற்கும். சொற்களின் ஈற்றிலுள்ள குற்றியலுகரமும் புள்ளிபெற்று நிற்கும். வருமொழி முதலில் உயிர் வருமானல், மெய்யீறுபோல உயிர் ஏற இடங்கொடுத்து புள்ளி யிழந்து மெய்யின் தன்மை பெற்றுநிற்கும் என்பதாம். 'ஈற்றுக்குற்றிய லுகரமும் புள்ளி யீறுபோல உயிரேற இடங்கொடுக்கும்' என்று உரை கூறிய இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் முதற்கண் 'ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளிபெற்று நிற்கும்' என்று உரை கூற மறந்தனர். 'எகர ஒகரத்தியற்கையுமற்றே' என்ற நூற்பா வால் எகர ஒகரங்களும் புள்ளி பெறுதலைக் கண்டோம். ஆய்தம் முப்பாற் புள்ளி வடிவுடையது. குற்றியலிகரம், குற்றியலுகரம், எகரம், ஒகரம் இவை நான்கும் புள்ளிபெறு கின்றன. பண்டை மூதறிஞர் இவைகளுக்குப் புள்ளி கொடுத்ததன் நோக்கம் யாதாயிருந்திருக்கவேண்டும்? குற்றியலிகரத்தையும் குற்றியலுகரத்தையும் இகர வுகரங் களிலிருந்து வேறுபடுத்திக்காட்ட அவைகளுக்குப் புள்ளி கொடுக்கப்பட்டன. எகர ஒகரங்களை அவற்றின் நெடில்

களிலிருந்து வேறுபடுத்திக்காட்ட அவைகளுக்குப் புள்ளி கொடுக்கப்பட்டன. அக்காலத்தில் எகர ஒகர நெடில்கள் குறில்கள் போலவே எழுதப்பட்டன. மேலும் ஆய்தம் குற்றியலிகரம், குற்றியலுகரம், எகரம், ஒகரம் ஆகிய ஐந் தெழுத்துக்களும் உயிர் வரிசையில் வடமொழியில் காணப் படாத சிறப்பெழுத்துக்கள். ஆய்தத்தின் வரிவடிவைப் பற்றிய ஆராச்சியை இத்துடன் நிறுத்தி அதன் மூன்று வகையான ஒலியியல்பைப்பற்றிய ஆராய்ச்சியை இனி நிகழ்த்துவாம் :

உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினு மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறு வேறியல
திறப்படத் தெரியுங் காட்சியான

என்பது பிறப்பியல் முதல் நூற்பா. இது எழுத்துக் கள் பிறக்குமாற்றைப் பொதுவகையில் உணர்த்துகின்றது. இந்நூற்பாவின் பொருளை உற்றுநோக்குமிடத்துத் தமிழ் எழுத்துக்களுக்கு ஆசிரியர் கூறியுள்ள பிறப்புமுறை உலக மொழிகளின் எழுத்துக்களுக்கெல்லாம் பொருந்துமென் பதை யுணரலாம். இதன்பொருள் : 'உந்தியில் தொடங்கி வெளிவருகின்ற காற்று தலை, மிடறு, நெஞ்சு, இவற்றில் நிலைபெற்றுப்பின் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் இவற்றைச் சார்ந்து எண்வகை முறைமையாக அவ்வுறுப்புக் களோடு ஒன்றுற்று எழுத்துக்கள் எல்லாவற்றின் தோற் றத்தை யுண்டுபண்ணுகின்றது. அத்தோற்றத்தைத் திறமை யுடன் ஆய்வோமாயின் எழுத்தின் வேறுபாடுகள் எல்லாம் கூறுபட விளங்கும்' என்பதாம்.

எழுத்துக்களின் பிறப்பினைக் குறித்து அண்மையில்

ஓர் ஆங்கில ஒலியிலக்கண வல்லார் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார் :—

The sounds we make in speech are the vibrations produced by the air leaving the lungs—which act as bellows—and setting the vocal cords in motion. These sounds are modified and enlarged by the chest, the mouth, and the head, all of which serve as resonance boxes.

இதன் பொருள் :—"நாம் பேசும்போது உண்டாகும் ஒலிகள் காற்றுத்துருத்தியாகச் செயல்புரியும் மூச்சுப் பைகளிலிருந்து புறப்பட்ட காற்று (மிடற்றிலுள்ள) ஒலிக் கயிறுகளை துடிக்கச் செய்தலால் உண்டாகின்றன. இவ்வொலிகள் ஒலிவிளம்பியாகச் செயல் புரியும் நெஞ்சு, வாய், தலை, இவற்றால் மாறுதலும் மிகுதலும் பெறுகின்றன."

மிகமிகப் பழங்காலத்தே தமிழ்ப் பேரறிஞர் கூறிய எழுத்துத் தோற்ற முறைக்கும் இற்றைநாள் ஆங்கில அறிஞர் கூறியுள்ள தோற்றமுறைக்கும் வேறுபாடு சிறிதே. எனினும் ஆங்கில அறிஞர் எல்லா எழுத்துக்களுக்கும் மிடற்றின் ஒலிக் கயிறுகள் துடிக்கின்றன என்று கொண்டது தவறு. S. F. H. போன்ற உயிர்ப்பொலிகளை ஒலிக்கும்போது ஒலிக்கயிறுகள் துடிப்பதில்லை. ஆங்கில அறிஞர் கூற்றில் உள்ள வாய் என்ற இடத்தில் தொல்காப்பிய நூற்பாவிற் காணப்படுகின்ற வாயினுறுப்புக்களாய, பல், இதழ், நா, அண்ணம் இவற்றையும், மூக்கினையும் கொள்ள வேண்டும். ஆங்கில அறிஞர் கூற்றில் காற்று மூச்சுப் பையிலிருந்து புறப்படுவதாகக் கூறப்பெற்றுளது. ஆனால் நுண்மாண் நுழைபுலத்தராய தமிழறிஞர் காற்று உந்தியில் இருந்து புறப்பட்டு நெஞ்சு, மிடறு, தலை, இவற்றை அடைகின்றதெனக் கூறியுள்ளார். இயற்கை தழுவிய பேச்சொலி யிலக்கணத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு

முன்னரே தமிழறிஞர் தலைசிறந்தோராய்த் திகழ்ந்தனர் என்பதற்குப் பிறப்பியல் முதல்நூற்பா வொன்றே போதிய சான்ருகும்.

பிறப்பியல் முதல் நூற்பாவில் எழுத்துக்கள் பிறக்கு முறையைப் பொதுவகையால் விளக்கிய ஆசிரியர், அவை பிறக்கும் சிறப்பியல்புகளைப் பின்வரும் நூற்பாக்களில் கூறு கின்ருர். பன்னீருயிரும் மிடற்று வளியான் பிறக்கு மென்ருர். இது இற்றைநாள் மேனுட்டு ஒலிநூல் வல்லா ருக்கும் உடன்பாடு. 'மெல்லெழுத்தாறும்' என்று தொடங் கும் நூற்பாவில் மெல்லெழுத்துக்களுக்கு மூக்கின் வளி சிறப்புடையதெனக் கூறப்பட்டது. இந்நூற்பாவிற்கு நச்சினர்க்கினியர் கூறியுள்ள சிறப்புரையால் வல்லெழுத் தாறும் தலைவளியானும், இடையெழுத்தாறும் மிடற்றுவளி யானும் பிறக்குமென்பதனை யறிகின்ருேம். இவ்வுரை சரியான உரையே. நன்னூலார் வல்லினம் நெஞ்சுவளியாற் பிறக்குமெனக்கூறியது தவறு. நெஞ்சு என்ற சொல்லுக்கு உரம், வன்மை, என்ற பொருள்கள் இருத்தலால் வல்லினம் நெஞ்சுவளியாற் பிறக்குமென மயங்கினர் பவணந்தி முனிவர். வல்லெழுத்துக்களுக்கு ஆசிரியர் தொல்காப்பிய ஞரால் கூறப்பெற்றுள்ள இடம், முயற்சி, இவற்றினை ஊன்றிப்பார்த்தாலும், அல்லது அவைகளை மெய்யெழுத்துக் களாக ஒலித்துப் பார்த்தாலும் உண்மை விளங்கும். இதனைப் பின்னர் ஓரிடத்து விளக்குவாம்.

பிறப்பியல் முதல் நூற்பாவில் எழுத்துக்கள் தலை, மிடறு, நெஞ்சு வளிகளாற் பிறக்கும் என்று கூறிய ஆசிரியர், உயிர்கள் மிடற்று வளியால் பிறக்கு மென்றும், யகரம் மிடற்று வளியாற் பிறக்கு மென்றும், மெல் லெழுத் துக்கள் மூக்கின்வளி சிறப்புறத் தோன்றும் என்றும் கூறி ஞர். வல்லெழுத்துக்கள் தலைவளியால் பிறக்கு மென்பதனை அவற்றிற்கு இடம் கூறலால் உய்த்துணரவைத்தார். யகரத் திற்கு மிடற்று வளி கூறினமையால் ஏனை இடையெழுத்துக்

களுக்கும் மிடற்றுவளி என்பதனை உய்த்துணர வைத்தார். ஆனால் நெஞ்சுவளி உயிர்களைக் குறித்தோ, மெய்களைக் குறித்தோ யாண்டும் கூறப்படவில்லை.

'தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ' என்று கூறிய ஆசிரியர், பின் ஒரு நூற்பாவிலேனும் நெஞ்சு வளியாற் பிறக்கும் எழுத்து இன்னதென விளக்காமையேனோ? ஒருக்கால் யாம் முன்னர் ஐயுற்றவாறு இரண்டொரு நூற்பாக்கள் பிறப்பியலில் விடுபட்டுளவோ? 'சார்ந்து வரும்' என்று தொடங்கும் நூற்பாவில் ஆசிரியர் சார்பெழுத்து மூன்றின் பிறப்பினைக் கூறுகின்றார். ஆனால் இந்நூற்பாவில் வளியென்ற சொற்றானும் காணப்படவில்லை. நெஞ்சுவளி யாண்டும் கூறப்படவில்லை என்பதனையுணர்ந்த நச்சினார்க்கினியர், இந்நூற்பாவிற்குக் கொண்டு கூட்டிப் பொருளுரைத்து, காட்சி என்ற சொல்லுக்கு நெஞ்சு என்ற பொருள் கொண்டு 'ஆய்தம் தமக்குப் பொருந்தின நெஞ்சு வளியாற் பிறக்கும்' என்று கூறியுள்ளார். இவ்வாறு கூறலோடு அமையாமல், 'ஆய்தம் தலைவளியானும், மிடற்று வளியானும் பிறக்கும் என்பாரும் உளர்' எனப் பிறர் கொள்கையினையும் எடுத்துக்காட்டி அதற்கு மறுப்புக்கூறாது விடுத்தார். கூறாமைக்குக் காரணம் ஆய்தம் பிறக்கும் வளியைப்பற்றிய ஐயமே. இளம்பூரணரும் பேராசிரியரும் ஆய்தம் முறையே தலைவளியானும் மிடற்றுவளியானும் பிறக்கும் என்று கூறியுள்ளனர். நன்னூலார் ஆய்தத்திற்குத் தலைவளி கூறுகின்றார். இத்தடுமாற்றத்தின் காரணம் என்னெனிற் கூறுதும்.

சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியின் தம்மியல் பியலும்.

என்பது சார்பெழுத்துக்கள் பிறக்கு மாற்றைக் கூறும் தொல்காப்பிய நூற்பா. இதற்கு நச்சினார்க்கினியர் கூறி

யுள்ள உரை வருமாறு :—

சார்ந்துவரினல்லது—சில எழுத்துக்களைச் சார்ந்து தோன்றி னல்லது.

தமக்கு இயல்பு இல என—தமக்கெனத் தோன்றுவதற்கு ஓரியல் பில வென்று.

தேர்ந்து வெளிப்படுத்த தம்மியல்பு மூன்றும் — ஆராய்ந்து வெளிப்படுக்கப் பட்ட எழுத்துக்கள் தம் முடைய பிறப்பியல்பு மூன்றினையுங் கூறுங்கால்.

தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி இயலும் — தத்தமக்குரிய சார்பாகிய மெய்களது சிறப்புப் பிறப்பிடத்தே பிறத்தலோடு பொருந்தி நடக்கும்.

ஏனை ஒத்தகாட்சியின் (இயலும்) — ஒழிந்த ஆய்தம் தமக்குப்பொருந் தின நெஞ்சுவளியாற் பிறக்கும்.

இவ்வுரையில் நச்சினார்க்கினியர் 'ஏனைமூன்றும்' என்ற சொற்றொடரிலிருந்து 'ஏனை' என்பதனைப் பிரித்தெடுத்து காட்சி யென்பதனுடன் சாரவைத்துப் பொருள் கூறி யுள்ளார். இவ்வாறு கூறியதன் காரணம் என்ன? பின் வருமாறு:—தொல்காப்பியத்தின் முதல் நூற்பாவில் சார் பெழுத்து மூன்று என்றும் இரண்டாம் நூற்பாவில் அவற் றின் பெயர்கள் இவையென்றும் ஆசிரியர் கூறிவிட்ட படியால், இந்நூற்பாவில் 'மூன்றும்' என்று கூறினாற் போதும், 'ஏனை' என்பது மிகையாம் எனக் கொண்டு இவ்வாறு அதனைப் பிரித்தெடுத்தார். இரண்டாவதாகப் பிறப்பியல் முதல் நூற்பாவில் கூறப்பட்ட நெஞ்சுவளி யாண்டும் காணப்படவில்லையாகலின் ஆய்தம் நெஞ்சுவளி யாற் பிறக்கின்றதெனக் கொண்டு 'ஏனை' என்ற சொல் ஆய்தத்தைச் சுட்டுவதாக வைத்துப் பொருள்கொண்டார். காட்சி என்ற சொல்லுக்கு நெஞ்சு எனவும் பொருள் கொண்டார். இவ்வுரையில் உள்ள குறைகள் வருமாறு :

ஏனை எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் ஆசிரியர் பிறப்பு கூறிவிட்டமையாலும் இந்நூற்பா வரையில் சார்பெழுத்து மூன்றிற்குமாத்திரம் பிறப்பு கூறுமயிலிருந்ததனாலும் ஈண்டு 'ஏனை' என்ற சொல் மிகையாகாது. 'சார்பாகிய ஏனையெழுத்து மூன்றும்' என்று பொருள் கொள்வதே சரியாகும். இவ்வாறே இளம்பூரணர் கொண்டுள்ளார். காட்சி என்ற சொல்லுக்கு நெஞ்சு என்ற பொருள் கொண்டது தவறாகும். அகராதிகளில் இப்பொருள் கூறப்படவில்லை. இவ்வுரையில் மூன்று எழுத்துக்களுக்கும் பிறப்பிடமும், ஆய்தத்திற்கு மாத்திரம் வளியும் கூறப்பட்டுள்ளது. ஆகவே இவ்வுரை முழுதும் பொருத்தமானதன்று. இளம்பூரணர் ஆய்தத்திற்குத் தலைவளி கூறியதன் காரணத்தை அவரே விளக்கியுள்ளார். வல்லெழுத்திற்குத் தலைவளியாகலின் அதனைச் சார்ந்துவரும் ஆய்தத்திற்கும் தலைவளியெனக் கொண்டார். தலைவளி ஆய்தத்தின் சார்பால் நெஞ்சுவளியாதலை உரையாசிரியர் உணரவில்லை. பேராசிரியர் ஆய்தத்திற்கு மிடற்றுவளி கூறியதன் காரணம் ஆய்தம் உயிரினத்துடன் சேர்ந்ததெனக் கொண்டமை போலும்.

'சார்ந்து வரினல்லது' எனத்தொடங்கும் சார்பெழுத்துக்களின் பிறப்பை விளக்கும் நூற்பாவின் நேரிய பொருள் வருமாறு:—

'பிற எழுத்துக்களைச் சார்ந்து வந்தாலன்றித் தாமே தனித்து வருவதற்குரிய இயல்புகள் இல்லாதனவென்று முன்பு ஆராய்ந்து கூறப்பட்ட சார்பாகிய ஏனை மூன்று எழுத்தும் தமக்கு மேலே கூறப்பட்ட மெய்களது சிறப்பாகிய பிறப்பிடத்தே பொருந்திநின்று தத்தமக்கு ஒத்தனவாகிய வரி வடிவுடனும் ஒலி வடிவுடனும் தம்முடைய அரைமாத்திரை அளவிற் பொருந்தி நடக்கும்' என்பதாம்.

வரிவடிவுடனும் ஒலிவடிவுடனும்—குற்றிய லிகரமும்

குற்றியலுகரமும் புள்ளிபெற்றுத் தம்முடைய சிறப்பொலி யுடன் வருதல்; ஆய்தம் மூன்று கூற்றதாகிய புள்ளி பெற்று, தலை, மிடறு, நெஞ்சு, ஆகிய மூன்று கூற்றதாகிய வளிபெற்று வருதல்.

தலை, நெஞ்சு, மிடறு, என்ற மூன்று வளியாலும் இயலும் எழுத்தாக ஆய்தம் அமைந்திருப்பதாற்றான் உரை யாசிரியர்கள் மூன்றுவளிகளில் தத்தமக்குத் தோன்றிய தொன்றை அதன் வளியாகக் கூறினர். உண்மை யாதெனில் ஆய்தத்தின் ஒலி எல்லா எழுத்துக்களும் பிறப் பதற் கேதுவாகிய, உந்திமுதலாகத் தோன்றி வாயின் வழி வெளிப்படுகின்ற, காற்றென்பதும், அக்காற்று தலையிலோ, மிடற்றிலோ, நெஞ்சிலோ நிலைபெற்றுத் தன்னைச்சார்கின்ற மெய்யெழுத்தின் ஓசையை விகாரப்படுத்திச் செல்கின்ற தென்பதுமாம். தமிழ் மொழியில் ஆய்தம் வல்லெழுத் தொலிகளை மாற்றுதல் ஆசிரியரால் 'குறியதன் முன்னர்' என்ற நூற்பாவிற் கூறப்பட்டது. இது நெஞ்சுவளி ஆய்தம். இதன் விவரம் மேற்காட்டினும். தமிழ் மொழியைப் பொருத்தமட்டில் ஆய்தத்தின் நெஞ்சுவளியே தொழில் புரிகின்றது. தலைவளியானும், மிடற்றுவளியானும் செயல்புரியும் ஆய்தம் தமிழிற்கு வேண்டியதின்றாயினும் பிறமொழி எழுத்துக்களைத் தமிழில் எழுதுவதற்குள்ள ஆற்றல் உடையதாகின்றது. இவண் பிறப்பியல் புறனடை யாக இறுதியிற் கூறப்பெற்றுள்ள 'எல்லா வெழுத்தும்' என்று தொடங்கும் நூற்பாவின் பொருளைக்கருத்திற் கொள்வது இன்றியமையாததாகின்றது.

எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி விளியிசை அளவுநு வன்றிசினே.

என்பது நூற்பா.

இதற்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள உரை வருமாறு :—

எல்லா எழுத்துங் கிளந்து வெளிப்பட—ஆசிரியன் எல்லா எழுத்துக்களும் பிறக்குமாறு முந்து நூற்கண்ணே கூறி வெளிப்படுக்கையினாலே; சொல்லிய பள்ளி பிறப்பொடு விடுவழி—யானும் அவ்வாறே கூறிய எண்வகை நிலத்தும் பிறக்கின்ற பிறப்போடே அவ்வெழுத்துக்களைக் கூறுமிடத்து; எழுதருவளியின் உறழ்ச்சிவாரத்தின் அளபு கோடல்—யான் கூறியவாறன்றி உந்தியில் தோன்றும் காற்றினது திரிதருங் கூற்றின்கண்ணே மாத்திரை கூட்டிக் கோடலும், அகத்து எழு வளி யிசை அரில்தப நாடிக்கோடல்—மூலாதாரத்தில் எழுகின்ற காற்றின் ஓசையைக் குற்றமற நாடிக் கோடலும்; அந்தணர் மறைத்தே—பார்ப்பாரது வேதத்து உளதே, அந்நிலைமை ஆண்டுணர்க; அஃதிவண் நுவலாது—அங்ஙனம் கோடலை ஈண்டுக் கூறலாகாமையின் இந்நூற்கட்கூறாதே; எழுந்து புறத்து இசைக்கும்—உந்தியிற் றோன்றிப் புறத்தே புலப்பட்டு ஒலிக்கும்; மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே—பொருள் தெரியும் காற்றினது துணிவிற்கேயான் மாத்திரை கூறினேன். அவற்றினது மாத்திரையை உணர்க.

இவ்வுரையில் குறைபாடுகள் உளவெனக் கூறுதற்கில்லை. எனினும் ஆசிரியன் கூறினான், அவ்வாறே யானும் கூறினேன் என்று கொள்வதற்கு வேண்டிய மூலம் இந்நூற்பாவில் இருப்பதாகத் தோன்றவில்லை. 'உறழ்ச்சி வாரம்' என்ற சொற்றொடரின் பொருள் (காற்றின்) 'திரிதருங் கூற்று' என்று நச்சினார்க்கினியர் கூறி அதனைச் சிறப்புரையில்; 'உந்தியில் எழுந்த காற்று முன்னர்த்தலைக்கட் சென்று பின்னர் மிடற்றிலே வந்து, பின்னர் நெஞ்சிலே நிற்றலை உறழ்ச்சி வாரத்து என்றார்' என விளக்கியுள்ளார்.

இப்பொருள்தான் சிறப்புடையதும் இன்றியமையாததும் ஆகும். இதுதான் ஆய்தத்திற்குரிய மூன்று கூற்றதாகிய காற்றினை விவரிக்கின்றது. அன்றியும் வடமொழியில் மிகுதியாகப் பயிலும் மூன்றுவகை வளிகளையும் சுட்டு கின்றது. 'பார்ப்பாரது வேதத்தில் பொருள் தெரியாத வெறும்காற்றினைக் கூறுபாடு செய்து மாத்திரைக் கூட்டிக் கொள்ளும் வழக்கம் உள்ளது.' 'ஆனால் யான் அவ்வாறு செய்யாது எழுத்துருப்பெற்ற பொருள்தெரியும் காற்றிற்கே அளவு கூறியுள்ளேன்' என ஆசிரியர் கூறி யிருத்தலால் வடமொழி எழுத்துக்களுக்கும் ஆசிரியர் கூறியுள்ள ஒலி யிலக்கணம் பொருந்தும் என்பது பெற்றும்.

இனி இந்நூற்பாவில் உள்ள 'பள்ளி' என்ற சொல்லைப் 'புள்ளி' என்னும் பாடமாகக் கொள்ளின் நச்சினார்க்கினிய ருடைய உரையினும் சிறந்தவுரை தெற்றென விளங்கு கின்றது :

எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய புள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி—முற்கூறிய ஆய்தத்தின் மூன்றுகூற்ற தாகிய காற்றினால் எல்லா எழுத்துக்களும் பிறக்குமாற்றை யான் தெளிவாக எடுத்துக் கூறுங்காலை

அகத்தெழு உறழ்ச்சி வாரத்து வளியிசை—உந்தியில் தோன்றி தலை, மிடறு, நெஞ்சு, ஆகிய மூவிடத்தும் செல்லும் காற்றின் ஒலியினை

அரில்தப நாடி அளபிற் கோடல்
அந்தணர் மறைத்தே—குற்றமற நாடி மாத்திரைக் கூட்டல் பார்ப்பாரது வேதத்தில் உளது

அஃதிவண் நுவலாது எழுந்து புறத்து
இசைக்கும் மெய்தெரி வளியிசை
அளவு நுவன் றிசினே—அதனை ஈண்டுக் கூறாது எழுத்தாகப் புறப்பட்டு வெளிவருங் காற்றிற்கே யான் அளவு முதலியன கூறினேன்.

இந்நூற்பாவில் உள்ள ‘பள்ளி’ என்ற சொல்லைப் ‘புள்ளி’ என்ற பாடமாகக் கொள்ளின் மேற்கூறிய எமது உரை பொருந்தும். ஆய்தம் தலைவளியானும், மிடற்றுவளியானும், நெஞ்சுவளியானும், செயல் புரிகின்றதென்ற எமது கொள்கைக்கு ஆசிரியருடைய நூற்பாவில் நேரான அடிப்படையும் உளதாகின்றது. ‘பள்ளி’ என்பதே பாடமாயின், ஆசிரியர் ஆய்தத்திற்கு வளிகூறாது விட்டார் என்று கோடல் வேண்டும். புலவர் புராண முடையார் குற்றச்சாட்டும் பொருத்த முடையதாகும். அல்லது ஆய்தத்தைக் குறித்த இரண்டொரு நூற்பாக்கள் தொல்காப்பியத்தின் இக்காலப்படிகளில் விடுபட்டுள்ளன என்று கொள்ளவேண்டும்.

இனி ஆய்தத்தின் சார்பால், வடமொழி, ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ள கலப்பு மெய் யெழுத்துக்கள் உண்டாகு மாற்றை விளக்குவாம். முதற்கண் ஒவ்வொரு எழுத்தும் பிறப்பதற்குக் காற்று, இடம், முயற்சி ஆகிய மூன்றும் கருவிகளாய் நிற்கின்றனவென்பதை யுணர வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியனார் வல்லினத்திற்குத் தலைவளி என்பதனை உய்த்துணரவைத்தார். மெல்லெழுத்திற்குத் தலைவளியுடன் மூக்கின்வளி சிறப்பாக வரும் என்பதனை யுணர்ந்தோம். இடையினத்திற்கு மிடற்றுவளி யென்பதனையும் உணர்ந்தோம். மெய்யெழுத்துக்களுக்குக் கூறியுள்ள வளிமுறை சரியானதென்பதனை இரண்டு கைகளாலும் இரண்டு காதுகளையும் மூடிக்கொண்டு அவற்றை ஒலித்தறிக. மெய்யெழுத்துக்களின் பிறப்பு முறையை ஆசிரியருடைய நூற்பாக்களின் துணைகொண்டு கீழ்க் கண்ட படங்கள் மூலம் விளக்குவாம்.

1



2




3




இப்படங்களில் வில்வளைவான மூன்றுகோடுகளும் வாயின் அண்ணத்தைக் குறிக்கின்றன. கோடுகளின் நுனியில் உள்ள சிறுவளைவு இதழைக் குறிப்பதாகும். இதழின் பக்கம் உள்ளே இருக்கும் சதுரம் பல்லைக் குறிப்பது. அண்ணத்தின் உள்ளே காட்டப்பெற்ற சிறு கோடுகள் மெய்கள் பிறக்கும் இடங்களைக் குறிக்கின்றன.

இவற்றுள் முதற்படத்தை நோக்கின் க, ச, ட, த, ப ஆகிய ஐந்து வல்லெழுத்துக்களும் முறையாக முதலண்ணம், இடையண்ணம், நுனியண்ணம், பல்மருங்கு, இதழ், இவ்விடங்களில் அமைந்திருத்தலைக் காணலாம். இவை தலைவளியாற் பிறக்கின்றன. இவற்றின் இனமாகிய ஐந்து மெல்லெழுத்துக்களும் மேற்குறித்த இடங்களிலேயே அமைந்துள்ளன. ஆனல் இவை தலைவளியுடன் மூக்கின் வளி சிறப்பாகத் தோன்ற பிறக்கின்றன. இரண்டாவது படத்தைப் பார்த்தால் ஆறுவது வல்லெழுத்தாகிய றகரமும் அதன் இனமாகிய னகரமும் தகர நகரங்கள் பிறக்கின்ற இடத்திலேயே பிறக்கின்றன என்பதை உணரலாம். ஆனல் முயற்சி வேறுபாட்டால் இவை வேறு எழுத்துக்கள் ஆகின்றன. தகர நகரங்கள் பிறக்கும்போது நாநுனி பரந்து (பட்டையாக) பல் மருங்கில் அண்ணத்தை ஒற்றுகின்றது. றகரனகரங்கள் பிறக்கும்போது நாநுனி மேனோக்கிச் சென்று பல் மருங்கில் அண்ணத்தை ஒற்று

கின்றது. மூன்ருவது படத்தை நோக்கின் இடையெழுத்துக்களில் யரலவ ஆகியநான்கும் முறையே இடையண்ணம், பல்மருங்கு, பல்லடி, இதழ் ஆகிய விடங்களிற் பிறப்பதைக் காணலாம். ழகரம், ரகரம் பிறக்கு மிடத்திலேயே அமைந்துள்ளது. மேலும் இவையிரண்டும் தநக்களும் றனக்களும் பிறக்குமிடத்திலேயே அமைந்துள்ளன. இடம் ஒன்ருயிருந்தும் இவை ரகர ழகரங்களாக ஒலிப்பதற்கு முயற்சிவேற்றுமையே காரணம். இவை பிறக்கும்போது நாநுனி மேனேக்கிச் சென்று பல் மருங்கில் அண்ணத்தைத் தடவுகின்றது. அவ்வாறு தடவும்போது மிடற்றுவளியும் சேர்கின்றது. மெய்யெழுத்துக்களின் பிறப்பிடங்களையும், காற்றினையும், முயற்சியினையும் நுண்ணிதின் ஆய்ந்து கூறிய ஆசிரியர் தொல்காப்பியனர் ரகர ழகரங்கள் பிறப்பதற்கு வேண்டிய முயற்சியை வேறு பிரித்துக் காட்டாது

நுனிநா அணரி அண்ணம் வருட
ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்

என இரண்டிற்கும் ஒரே முயற்சி கூறிவிட்டார். மிகமிக நுணுக்கமாக வேறுபடுத்திக் காட்டவேண்டியதில்லை என ஆசிரியர் நினைத்தனர் போலும். எனினும் இரண்டிற்குமுள்ள வேறுபாடு இதுவாகும்: ரகரம் பிறக்கும்போது நாநுனி மேனேக்கிச் சென்று பல்மருங்கில் அண்ணத்தைத் தடவுகின்றது. ழகரம் பிறக்கும்போது நாநுனிமேனேக்கிச் சென்று பரந்து (பட்டையாக) பல்மருங்கில் அண்ணத்தைத் தடவுகின்றது. லகரம் ளகரம் இரண்டும் பல்லடியிலேயே பிறக்கின்றன. லகரம் பிறக்கும்போது நாநுனி பல்லடியண்ணத்தை ஒற்றுகின்றது. ளகரம் பிறக்கும்போது நாநுனி பரந்து பல்லடி யண்ணத்தை ஒற்றுகின்றது. மூன்று படங்களையும் சேர்த்து நோக்கின், பகரம், மகரம், வகரம் ஆகிய மூன்றும் இதழ்களிடத்தே பிறப்பது தெரிகின்றது. பகரம் மகரம் இரண்டும் இரண்டிதழ்களும் கூடுதலினுலுண்டாகின்றன. பகரம் தலைவளியால் பிறக்

கின்றது. மகரம் பெரும்பாலும் மூக்குவளியால் பிறக்கின்றது. வகரம் மேற்பல்லும் கீழிதழும் கூட உண்டாகின்றது.

உலகமொழிகளின் எழுத்தொலி இருவகையுள் அடங்கும்: அவை (1) முதல் (தனி,) அல்லது அடிப்படை ஒலி. (2) கலப்பொலி என்பனவாகும். அடிப்படை ஒலிகள் தமிழ் உயிரெழுத்துப் பன்னிரெண்டானும், மெய்யெழுத்துப் பதினெட்டானும் குறிக்கப்படும் முப்பதேயாகும். இவ்வெண்ணிற்கு மேல் உலகமொழிகளில் காணப்படும் உயிர்களும் மெய்களும், கலப்பொலி யெழுத்துக்களாம். அடிப்படை ஒலி அல்லது கலப்பொலி என்பதை அறுதியிடுவது காற்றே. தமிழ் உயிர் எழுத்துக்களும், மெய்யில் இடையின எழுத்துக்களும் மிடற்றுக்காற்றினுல்மாத்திரம் உண்டாவன. வல்லெழுத்துக்கள் தலைக்காற்றால் மாத்திரம் உண்டாவன. மெல்லெழுத்துக்கள் தலைக்காற்றுடன் மூக்கின் காற்றும் சேர்தலால் உண்டாகின்றன. ஆகையின் இவைகள் ஒரு வகைக் கலப்பொலிகளாகி வல்லெழுத்துக்களுக்கு இனமாகி நிற்கின்றன. நெஞ்சு வளியாய்தம் வல்லெழுத்துக்களோடு சாரும்போது வல்லெழுத்துக்களும் சிறிது கலப்பொலிகளாகின்றன. கலப்புயிர்களும் மிகச்சிறிய அளவில் தமிழில் உண்டு. அவை குற்றியலிகரக் குற்றியலுகரங்களாகும். ஆனல் உலக மொழிகள் பிறவற்றில் கலப்பொலி உயிர்களும், கலப்பொலி மெய்களும் மிக அதிகமாயுள்ளன. அவ்வெழுத்துக்கள் உண்டாகும்போது, தலை, மிடறு, நெஞ்சு ஆகியவளிகள் பலவாறக ஒன்ருேடொன்று கலக்கின்றன. தமிழ் வல்லெழுத்துக்களுடனும், சிறிய அளவில் இடையெழுத்துக்களுடனும், மூன்று கூற்றதாகிய ஆய்தத்தினைத் தனித்தனியோ அன்றி இரண்டு சேர்த்தோச் சார வைத்தலால் உலகமொழிகளில் காணப்படும் கலப்பு மெய்யெழுத்துக்களை யெல்லாம் உண்டுபண்ணலாம். இவ்வாறே தமிழ் உயிர் எழுத்துக்களுடன் குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகிய சார்பெழுத்துக்களைச் சார வைத்தலால் உலகத்தின்

பிறமொழிகளில் காணப்படும் கலப்புயிர் எழுத்துக்களை யுண்டுபண்ணலாம். முதற்கண் பிறமொழிகளின் கலப்பு மெய்களை யெழுது மாற்றை விளக்குவாம் :

மூன்று கூற்றதாகிய ஆய்தத்தின் தனித்தனிக் குறியீடுகள் :

| | |
|---|---|
| ஆய்தத்தின் பண்டைய உரு | ı¦ı |
| ,, இடைக்கால உரு | ¦ ∘∘ |
| ,, தற்கால உரு | ஃ |

யாம் மேற்கொண்டுள்ள குறியீடுகள் :

| | | |
|---|---|---|
| தலைவளியாய்தம் | | \| |
| நெஞ்சுவளியாய்தம் | | ⊥ |
| மிடற்றுவளி யாய்தம் | | ∪ |
| தலை + மிடறு | ,, | ⊥ |
| நெஞ்சு + மிடறு | ,, | ⊃ |
| அரைநெஞ்சுவளி | ,, | ⊥ |
| கால் நெஞ்சுவளி | ,, | o |
| அரை மிடற்றுவளி | ,, | ɹ |
| கால் மிடற்றுவளி | ,, | ɹ |

(க). எஃகு (எ—கு). இச்சொல்லில் தலைவளியால் பிறக்கும் ககரம் நெஞ்சுவளியாய்தத்தின் சார்பால், **H**, ஹ, ஒலியாக மாறிற்று. பந்தய ஓட்டம் ஓடிவந்து நின்ற ஒருவன் மூச்சுவிடும்போது வெளிப்படுகின்ற காற்று மிடற்றில் தடைப்படாது மேல்வாயின் முதல் அண்ணத்தைத் தழுவி வெளிவருகின்றது. இதன் ஒலிதான் ஹ.

(ச). கஃசு. (க—சு) இச்சொல்லில் உள்ள சகரம் (தலைவளியாற் பிறப்பது) நெஞ்சுவளி ஆய்தத்தின் சார்பால் வடமொழி श ஒலியாக மாறிற்று. காற்று இடை

யண்ணத்தைத் தழுவிச் சிறிது தடைப்பட்டு வெளிவருவதால் அரை நெஞ்சு வளியே உண்டாகின்றது.

(ட). முஃடீது. (மு—டீது) இதில் டகரம் ஆங்கில T (Thought) ஒலியாக மாறுகின்றது. நெஞ்சின் காற்று நுனி அண்ணத்தைத் தழுவி வெளிவருகின்றது.

(த). அஃது. (அ—து) இதில் தகரம் ஆங்கில Th (Nothing, Breath) ஒலியாக மாறுகிறது. நெஞ்சின் காற்று பல் மருங்கினைத் தழுவி வெளிவருகின்றது.

(ப). கஃபு. (க—பு) இச்சொல்லில் பகரம் ஆங்கில F ஒலியாக மாறுகின்றது. நெஞ்சின் காற்று இதழைத் தழுவி வெளிவருகின்றது.

(ற). கஃறென்னும். (க—றென்னும்) நெஞ்சுவளியால் றகரம் மாறி ஒலிப்பது பிறமொழிகளில் இல்லை; றகரம் தமிழுக்கே உரிய எழுத்தாகலான்.

(S, स). தமிழ் சகரமானது நெஞ்சுவளியால் மாறி அண்ணத்தில் தடைபடாது பல்லையும் நுனி நாவினையும் தழுவி வெளிவருதலால் இவ்வொலி உண்டாகின்றது. அண்ணத்தில் தடைபடாமல் வருவதால் முழு நெஞ்சுவளி பெறுகின்றது, (See, —சீ).

(ष, SH). இவ்வொலி மிடற்றுவளியுள்ளதாகிய தமிழ் ழகரத்தை நெஞ்சுவளி சார்தலினுல் உண்டாகின்றது. (Shy, — ழை)

வடமொழி வல்லெழுத்துக்களின் முதல் வர்க்க எழுத்துக்கள் தமிழ் வல்லெழுத்துக்களுக்கு நேராகும்.

வடமொழி வல்லெழுத்துக்களின் இரண்டாவது வர்க்க எழுத்துக்கள், தமிழ் வல்லெழுத்துக்களை தலைவளியாய்தம்

சார்தலினால் உண்டாகின்றன. தலைவளியாற் பிறக்கின்ற தமிழ் வல்லெழுத்துக்களுடன் மீண்டும் தலைவளி சார்தலினால் இவ்வெழுத்துக்கள் இருமடங்கு வன்மைபெறுகின்றன.

|க = ख, Kh. |ச = छ. |ட = ठ.
|த = थ. |ப = फ.

தமிழ் வல்லெழுத்துக்களை மிடற்றுவளி ஆய்தம் சார்தலினால் வடமொழி வர்க்கத்தின் மூன்றாம் வரிசை எழுத்துக்கள் உண்டாகின்றன.

ᵁக = ग, G. ᵁச = ज. ᵁட = ड.
ᵁத = द. ᵁப = ब.

தமிழ் வல்லெழுத்துக்களைத் தலைவளியாய்தமும் மிடற்று வளியாய்தமும் ஒருசேரச் சார்தலினால் வடமொழி நான்காம் வர்க்க எழுத்துக்கள் உண்டாகின்றன.

ⁱக = घ. ⁱச = झ. ⁱட = ढ.
ⁱத = ध. ⁱப = भ.

Much, Chin, Pleasure, John என்ற சொற்களில் உள்ள Ch, S, J, என்ற ஒலிகளை இந்தியராகிய நாம் சரியாக ஒலிப்பதில்லை. இவற்றில் Ch என்ற ஒலி நெஞ்சு வளி ஆய்த டகர ஒற்றுடன் நெஞ்சுவளியாய்த ழகரம் ஒன்று சேர்வதால் உண்டாகிறது. (ம-ட்-ழ், -ட்ழின்). Pleasure என்ற சொல்லில் உள்ள S ஒலி ழகரத்தை நெஞ்சு வளியும் மிடற்றுவளியும் ஒருசேரச் சார்தலினால் உண்டாகிறது (ப்ளெᴰழர்). John என்ற சொல்லில், உள்ள J ஒலி வடமொழி ஜ ஒலிக்கு நேராகாது. இதன் ஒலியில் மிடற்றுவளி டகர ஒற்றுடன், நெஞ்சுவளி, மிடற்று வளி ழகரம் சேர்கின்றது. (ᵁட்ᴰழான்). வடமொழி (க்ஷ) क्ष இரட்டையெழுத்து. இதில் ககர ஒற்றுடன்

நெஞ்சுவளி ழகரம் சேர்கிறது. (ல க்—ழு மி)

அரபி மொழியில் மிகக்கடினமான கலப்பு மெய்கள் உண்டு. ககரத்தில் ஆறுவகை யுண்டு.

| | | |
|---|---|---|
| (1) | தமிழ் ஃ க. | (கலாம் = பேச்சு) |
| (2) | வடமொழி ஹ (நெஞ்சுவளி ககரம்) | (—காயில் = அஞ்சக்கூடிய) |
| (3) | அரை மிடற்றுவளி ககரம் | (ᒧகலத் = தவறு) |
| (4) | கால் மிடற்றுவளி | (ᒧகௌம் = சமூகம்) |
| (5) | அரைக்காரல் ககரம். இதனை ஒலிக்கும்போது நெஞ்சுவளி அண்ணத்தில் உராய்ந்து அரைப்பங்கு தடைப்பட்டு வெளிவருகிறது | (ᐨகாᵁசி = மக்கா யாத்திரை செய்தவன்) |
| (6) | முழுக்காரல் ககரம். அண்ணத்தில் உராய்ந்த நெஞ்சுவளி அதிகம் தடைப்பட்டு வருகிறது. | ($_{0}$கத் = கடிதம்) |

சகர வரிசையில் அரபியில் ஐந்து எழுத்துக்கள் உண்டு. இவைகளில் மூன்று வடமொழி ஸ, ஷ, ஜ. ஒன்று ஆங்கில Z. இவ்வொலி சகரத்துடன் நெஞ்சுவளியும் மிடற்றுவளியும் சார்தலால் உண்டாகிறது. இவ்வொலி இந்தி மொழியிலும் உண்டு.

(இந்தி: ᗜசமீந் = நிலம்; அரபி: ᗜசகாத் = அறம்) ஐந்தாவது எழுத்து வடமொழி ஷ கரத்தில் அரை ஒலி பெறுகிறது. அதாவது தமிழ் ழகரம் அரை நெஞ்சுவளி பெறுகின்றது. (–ழுᵁப்ர் = பொறுமை) தகர வரிசையில்

அரபியில் நான்கு எழுத்துக்கள் உண்டு :

| | | |
|---|---|---|
| (1) | தமிழ் த | (தா^U^சிர் = வணிகன்) |
| (2) | நெஞ்சு வளிபெற்றது | (—தமர் = பழம்) |
| (3) | மிடற்றுவளிபெற்றது | (^U^தலீஸ் = சான்று) |
| (4) | அரை மிடற்று வளி பெற்றது | (^J^தலீல் = கேவலமான) |

அரபியில் அகரத்தில் இரண்டு உண்டு. ஒன்று தமிழ் அகரம். ஏனையது மிடற்றுவளி இருமடங்கு பெற்றது. (^U^அய்ன் = கண்). சில இந்திச் சொற்களின் ஈற்றில் ஞகர மெய்யும் ஙகர மெய்யும் வருகின்றன. (—கைஞ் = இருக்கின்றன). (—காங் = ஆம்).

## குற்றியலிகரம், குற்றியலுகரம்.

இதுகாறும் தமிழ்ச் சார்பு எழுத்துக்கள் மூன்றில் ஒன்றாகிய ஆய்தத்தின் சார்பால் பிறமொழிகளில் உள்ள மெய்க்கலப் பொலிகள் உண்டாதல் விளக்கப்பட்டது. இனிக் குற்றியலிகரக் குற்றியலுகரங்களின் உதவியால் பிறமொழிகளில் உள்ள கலப்புயிர்கள் உண்டாகுமாற்றை விளக்குவாம். வடமொழியிலும் அதனைச்சார்ந்த வட நாட்டு மொழிகளிலும் மெய்க்கலப்பொலிகள் மிகுந்திருப்பதைப்போல், ஆங்கிலத்திலும் பிற ஐரோப்பிய மொழிகளிலும் கலப்புயிர்கள் மிகுந்துள்ளன. இவைகளை விளக்கு முன் தமிழ் உயிரெழுத்துப் பன்னிரெண்டையும் விளக்குதல் இன்றியமையாததாகின்றது.

உயிர் பன்னிரெண்டும் மிடற்றுவளியால் பிறப்பவை. இவைகளை ஒலிக்கும்போது பெரும்பாலும் இதழ்களே தொழில்புரிகின்றன. உயிர்களில் முதல் நிற்பது அகரம். அகரத்தில் ஏனைய எல்லா உயிர்களும் அடங்குகின்றன. அகரம் இன்றேல் வேறு உயிர்களும் இல்லை. இதனாலேயே

திருவள்ளுவர் அகரத்தை ஆதிபகவனுக்குவமையாகக் கூறினார். கண்ணனும் கீதையில் எழுத்துக்களில் அகரமாய் நிற்கின்றேன் எனக்கூறியதும் இதுகுறித்தே. வாய் திறந்தவுடனேயே அகரம் தோன்றிவிடுகிறது. ஆனால் அது செவிப்புலனாக வேண்டுமானால் மிடற்றுவளிபெறவேண்டும். அகரமே வாயைத்திறக்கின்றது என்றுகூறினும் பொருந்தும். வாய்திறவாமல் ஏனைய எழுத்துக்கள் உண்டாவது எங்ஙனம்? வாய்திறவாமல் உண்டாகும் ஓர் எழுத்து மகரமெய்யாகும். உலக மொழிகளில் எல்லாம் அகரமே முதல் எழுத்தாய் நிற்பதனை நாம் உணர்வோம். ஆகாரம் அகரத்தின் நீட்டமே. இவையிரண்டும் அங்காந்து கூறு முயற்சியால் பிறக்குமென ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார். அங்காத்தலாவது வாயைத் திறத்தலே. அதாவது இதழ்களாகிய கதவுகள் திறத்தல்.

அவற்றுள்,
அ, ஆ, ஆயிரண்டங் காந்தியலும்

என்பது தொல்காப்பிய நூற்பா.

வாய் திறந்தபிறகு, இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் அடிப்பற்களை நாவிளிம்பு உறலால் பிறக்கும் என ஆசிரியர் கூறியுள்ளார்.

இ, ஈ, எ, ஏ, ஐ, யென இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவற்றோரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய

இந்நூற்பாவில் அண்பல் என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் நாவிளிம்பு அணுகும்பல் எனப் பொருள் கொண்டனர். ஆனால் அடிப்பற்கள் என்று கூறுவதே விளக்கமான உரையாகும். அடிநாவின் விளிம்பு அடிப்பற்களைச் சாரும்போது இதழ்கள் விரிதலைக் காண

லாம்.

உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் இதழ்கள் குவிதலால் பிறக்கின்றன என ஆசிரியர் கூறியுள்ளார்.

உ, ஊ, ஒ, ஓ, ஔ வென விசைக்கும்
அப்பா லைந்து மிதழ்குவிந் தியலும்

ஆகவே உயிர் எழுத்துக்கள் எல்லாம் இதழ்கள் திறத்தலாலும், விரிதலாலும், குவிதலாலும் பிறக்கின்றன என்பது அறியக்கிடக்கின்றது.

உயிர்கள் பிறக்குமாற்றை இன்னணம் மூன்று நூற்பாக்களில் கூறிய பிறகு ஆசிரியர்

தத்தந் திரிபே சிறிய வென்ப

என்ற நூற்பாவைக் கூறியுள்ளார். இதன் பொருளை உய்த்துணர முடியாமையால் நச்சினார்க்கினியர், "இது முற் கூறிய உயிர்க்கும் மேற்கூறும் மெய்க்கும் பொதுவிதி கூறிச் சிங்க நோக்காகக் கிடந்தது" எனத் தோற்றுவாய் செய்வித்துப் பொருள் கூறுகின்றார். இவ்வாறே இளம் பூரணரும்,

"இது முன்கூறிய உயிர்க்கும் மேற்கூறிய மெய்க்கும் ஓர் புறனடை கூறுதல் நுதலிற்று" எனத் தோற்றுவாய் கூறிப் பொருள் கூறுகின்றார். கூறும் பொருள் இதுவாகும்: "உயிர்கள், மெய்கள் ஆகிய எழுத்துக்கள் ஒவ்வொரு தானங்களில் கூடிப் பிறப்பனவாயினும், உயிர்களுக்கும் மெய்களுக்குமுள்ள வேறுபாடுகள் மிகச் சிறியவே." இது ஒருசிறிதும் பொருந்தா வுரையாகும். உயிர்களுக்கும் மெய்களுக்கும் பிறப்பில் உள்ள வேறுபாடு மிகச்சிறியதெனக் கூறுவது மிகப் பெருந்தவறு. உரை விளங்காமையால் இவ்வாறு மயங்கினர்.

இந்நூற்பா உயிர் எழுத்துக்களின் பிறப்பை முற்கூறிய மூன்று நூற்பாக்களையே சுட்டுகின்றது. பதினெட்டு மெய்களின் பிறப்புமுறையை பதினொரு நூற்பாக்களில் மேலே கூறும் ஆசிரியர், பன்னிரெண்டு உயிர்களின் பிறப்பு முறையை மூன்றே நூற்பாக்களில் அடங்க வைத்தார். ஏனெனில் உயிர்கள், இதழ்கள் திறத்தல், விரிதல், குவிதல் ஆகிய மூன்றே முயற்சிகளில் பிறக்கின்றன. எனினும், அங்காத்தல் முயற்சியில் கூறப்பட்ட அ, ஆ, இரண்டிற்கும் சிறிய வேறுபாடு உண்டென்பதனையும், விரிதல் முயற்சியில் கூறப்பட்ட இ, ஈ, எ, ஏ, ஐ, இவைகளில் ஒவ்வொன்றிற்கும் சிறிய வேறுபாடு உண்டென்பதனையும், குவிதல் முயற்சியில் கூறப்பட்ட, உ, ஊ, ஒ, ஓ, ஔ, இவைகளில் ஒவ்வொன்றிற்கும் சிறிய வேறுபாடு உண்டென்பதனையும் குறித்தற்கே 'தத்தந்திரிபே சிறியவென்ப' என்ற நூற்பா, உயிர்கள் பிறப்பினைக் குறித்த மூன்று நூற்பாக்களுக்குப் பின் கூறப்பட்டது. இனி, பன்னிரெண்டு உயிர்களில் ஒன்றற்கும் மற்றொன்றற்கும் உள்ள தொடர்பினை ஆராய்வாம்.

சிவஞான முனிவர் முதற் சூத்திர விருத்தியுள் உயிர் எழுத்துக்களின் முறைவைப்பினை நுண்ணிதின் ஆய்ந்து கூறியுள்ளார். ஈண்டு அவரால் கூறப்படாத சில செய்திகளையும், அவர் ஆய்வுரையில் யாம் தவறெனக் கண்டவற்றையும் விளக்குவாம்.

அ, இ, உ, மூன்றும் முறையே இதழ்களைத் திறத்தலானும், திறத்தலுடன் விரிதலானும், திறத்தலுடன் குவிதலானும் உண்டாகின்றனவாகலின் இவ்வாறு முறையாக வைக்கப்பட்டன. இதழ்களின் இம்மூன்று முயற்சிகளும் திறந்தவாயின்; அகலத்தையும், நீட்டத்தையும், உயரத்தையும் காட்டுகின்றன :

அ— ; இ— ; உ—O

கட்புலனாகும் எப்பொருளுக்கும் இம்மூன்று அளவுகளும்

உண்டென்பது வெளிப்படை. கட்புலனாகும் எப்பொருளும் மூன்று அளவுடன் அமைந்திருப்பது போலவே, செவிப்புலனாகும் உயிர் எழுத்துக்கள் எல்லாம் ஒலிக்கப்படும் போது திறந்தவாய் உருவின் மூன்று அளவுகளால் அமைகின்றன. மெய்யெழுத்துக்கள் தமிழ் இலக்கணப்படி உயிரின் உதவியாலன்றி ஒலிக்கப்படா எழுத்துக்கள் ஆகலின் வாயின் இவ்வளவுகள் அவற்றிற்கு வேண்டப்படா. அகலம் என்ற சொல்லில் அகரம் முதலாக நிற்பதையும், நீட்டம் என்ற சொல்லில் உள்ள முதல் எழுத்தில் இகரம் அடங்கியிருத்தலையும், உயரம் என்ற சொல்லில் உகரம் முதலாக நிற்பதையும் காண்கின்றோம். இது தமிழ் எழுத்தொலி நுணுக்க மாண்பாகும். தமிழ் இலக்கணப்படி அ, இ, உ, மூன்றும் சுட்டெழுத்துக்களாகும். இவை சைவ சித்தாந்த முப்பொருள் உண்மையினை விளக்கும் எழுத்துக்களாம். அகரம் தொலைச்சுட்டு ஆதலால் அவனை (பதியை)க் குறிக்கின்றது. 'அவனன்றி ஓரணுவு மசையாது'. இகரம் அண்மைச் சுட்டு ஆதலால் இவன் என்னும் (பாசத்தால் வந்த) இவ்வுடம்பைக் குறிக்கின்றது. உகரம் இவ்வுடம்பில் (பாசத்தில் கட்டுண்டு நிற்கும் பசுவாகிய) கட்புலனாகாது மறைந்து நிற்கும் உயிரைக்குறிக்கின்றது. வடமொழியாளர் இம்மூன்று எழுத்துக்களையும் மூல எழுத்துக்கள் என்பர்.

அகரத்தில் ஏனை உயிர்கள் அடங்கிநிற்றல் எவ்வாறெனின், வாய்திறந்த பிறகு விரிதல், குவிதல் முயற்சிகளால் இகரமும் உகரமும் தோன்றலின் இவை அகரத்தில் அடங்குகின்றன. பின்னர் அகர இகரச் சேர்க்கையாலும், அகர வுகரச் சேர்க்கையாலும் ஏனை உயிர்கள் தோன்றலின் இவைகளும் அகரத்தில் அடங்குகின்றன. இவற்றினை சிவஞான முனிவர் மிக நுட்பமாகக் காட்டியுள்ளார்: 'எகரமாவது அகரக்கூறும் இகரக்கூறும் தம்முள் ஒத்திசைப்பது, ஒகரமாவது அகரக்கூறும் உகரக்கூறும் தம்முள் ஒத்திசைப்பது. இவற்றுள் அகரக்கூறு குறைந்தும், இகர

வுகரக் கூறுகள் மிகுந்தும் உள்ளன' இவ்விளக்கம் முற்றிலும் பொருத்தமானது. கண்ணாடியுட் பார்த்துக் கொண்டு இவ்வெழுத்துக்களைத் தனித்தனி ஒலித்துப்பார்த்தால் எகரத்தை ஒலிக்கும்போதுண்டாகும் வாயின் உருவம், அகரத்தாலும் இகரத்தாலும் உண்டாகும் உருவங்கள் ஒன்றுசேர்ந்த உருவமாகத் தோன்றுதலைக் காணலாம். இவ்வாறே ஒகரத்தின் உருவம், அகரவுருவமும் உகரவுருவமும் சேர்ந்த உருவமாகத் தோன்றுதலைக் காணலாம்:




மேலே கூறியவாற்றால், அ, இ, உ, எ, ஒ, இவற்றின் வைப்பு முறையின் காரணத்தை உணரலாகும். ஆ, ஈ, முதலியன நெடிலானமையின் அவ்வக் குறிலின் பின்வைக்கப்பட்டன. எகாரத்தின் பின் ஐகாரமும் ஒகாரத்தின் பின் ஔகாரமும் வைக்கப்பட்டதற்குச் சிவஞான முனிவர் கூறும் காரணம் சரியானதெனினும், ஐகார ஔகாரங்களின் ஒலித்தன்மையைப் பற்றிக்கூறும் விளக்கம் அத்துணைச் சரியானதன்று.

அகரக்கூறும் இகரக்கூறும் தம்முள் ஒத்திசைத்து எகரமாவதற்குச் சிவஞான முனிவர் கூறும் நரமடங்கல் என்ற உவமை பொருந்தாதாகும். ஏனெனில் எகரம் இரட்டை ஒலியுள்ள எழுத்தன்று. இதழ்களின் இரு முயற்சிகள் எகரத்தை ஒலிக்கும்போது ஒரே முயற்சியாக மாறிவிடுகின்றன. இவ்வாறே ஒகரத்திற்கும் நரமடங்கல் என்ற உவமை பொருந்தாது. நீரும் உப்பும் சேர்ந்து ஒரேமுகத்தல் அளவாய் நிற்றல்போல அகரமும் இகரமும் சேர்ந்து ஒருமாத்திரை யளவே உள்ள எகரமாகவும், அகரமும் உகரமும் சேர்ந்து ஒருமாத்திரை யளவே உள்ள ஒகர

மாகவும் நிற்கின்றன. சிவஞான முனிவர், "அகரமும் யகரமும், இகரமும், தம்முள் ஒத்திசைத்து நிற்ப தோன்றுக லின், எகர ஏகாரங்களின் பின்னர் ஐகாரமும், அகரமும், வகரமும், உகரமும் தம்முள் ஒத்திசைத்து நிற்பதொன்று கலின், ஒகர ஓகாரங்களின் பின்னர் ஔகாரமும் வைக்கப் பட்டன" எனக்கூறுவது பொருந்தாது. ஐகார ஔகாரங் களின் ஒலிக்கூறுபாட்டினை வடமொழி பயிற்சிகாரணமாகத் தவருக உணர்ந்து மயங்கினர் மாதவச் சிவஞான முனிவர். மயங்கினதுடன் நில்லாது தொல்காப்பிய நூற் பாக்களுக்கு நேரிய பொருள் கூறியுள்ள உரையாசிரியர், நச்சினர்க்கினியர் இருவரையும் வடமொழி யுணராமையால் மயங்கினர் எனவும் குற்றம் கூறியுள்ளனர். தமது மயக் கத்தைப் பிறர்மேல் வைத்தனர். 'வடநூற் கடலை நிலை கண்டறிந்த சேனவரையர் எழுத்திற்கு உரைகூறி யிருந்தால் சரியாகக் கூறியிருப்பார்' என்பது முனிவரது தருக்கம். இவ்வாறு தருக்கி முனிவர் மேலும் கூறுகின்றார்: 'அவர் சொல்லதிகாரம் போலப் பெரும் பயன் படாமைகருதி எழுத்திற்கு உரை செய்யா தொழிந்தார்'. என்னே தருக்கம்! எழுத்ததிகாரம் சொல்லதிகாரம்போலப் பெரும் பயன்படாது என்று யாரே கூறுவர்? எழுத்தின்றிச் சொல்லேது? "வடநூலுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது என்பது முணர்ந்து கோடற்கன்றே பாயிரத் துள் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்றதூஉ மென்க" என முனிவர் வெற்றி முரசுடன் தமதுரையை முடிக்கின்றார். எனினும் சிவஞான முனிவர் தமது கொள்கைக்கு ஆதரவாகப் பாணிணீயத்திற்குரை செய்த பதஞ்சலியாரையே காட்டுகின்றார். பாணிணிக்கு முந்திய வர் தொல்காப்பியர் என்பதைச் சிவஞான முனிவர் அறிந் திலரோ, அறிந்துளரோ, அறியேம். எனினும் இவர் மயக்கத்தின் காரணத்தை அறிவோம்.

அகரக்கூறும் இகரக்கூறும் தம்முள் ஒத்திசைத்தலால் உண்டாகும் எகரம் ஒருமாத்திரை யளவிற்று. அவ்வாறே

ஒகரமும். ஆகையின் இருமாத்திரை யளவினதாகிய ஐகாரமும் அகரக்கூறும் இகரக்கூறும் ஒத்திசைத்தலால் உண்டாகிறதெனக் கூறினுல் சிவஞான முனிவருடைய கருத்திற்குப் பொருந்தாது. ஆகையின் அகரம், யகரம், இகரம் ஆகிய மூன்றும் தம்முள் ஒத்திசைத்து ஐகாரம் உண்டாகின்றதெனக் கூறுகின்ருர். இவ்வாறே ஒளகாரம் இருமாத்திரை யளவிற்ருதலின், அகரம், வகரம், உகரம் ஆகிய மூன்றும் தம்முள் ஒத்திசைத்து அது பிறப்பதாகக் கூறியுள்ளார். இவ்வெழுத்துக்களின் ஒலி நுட்பத்தை ஓர்ந்தால் அகர இகரக் கூறுகளாலேயே ஐகாரம் பிறக்கின்றதென்பதனையும், அகர வுகரக் கூறுகளாலேயே ஒளகாரம் பிறக்கின்றதென்பதனையும் அறியலாம். எகரம் பிறக்கும்போது அகர இகரமுயற்சிகள் நீரில் உப்புகலந்தாற்போல ஒன்ருகி விடுகின்றன. ஐகாரம் பிறக்கும்போது அம்முயற்சிகள் தனித்துநின்று ஒன்றுசேர்கின்றன. இவ்வாறே ஒளகாரத்திற்கும். நரமடங்கல் என்ற உவமை இவற்றிற்குப் பொருந்தும். அவ்வாருயின் இவை இரட்டை எழுத்துக்கள் ஆகாவோ எனின், ஆகா. இதனுலன்றே ஆசிரியர் இவைகளுக்குக் குறுக்கம் கூறியதென்க. இப்பெற்றி யுணராத சிவஞான முனிவர், "இவ்வாருதல்பற்றி, ஏ, ஓ, ஐ, ஒள என்னும் நான்கினையும் வடநூலார் சந்தியக்கரம் என்ப" என்று கூறித் தமது ஐகார ஒளகாரக் கொள்கையை நிலைநிறுத்த முயலுகின்ருர். வடமொழியில் ஐகார ஒளகாரக் குறுக்கங்களில்லை. 'அவனையா கூறினுன்' என்ற வாக்கியத்தில் முதற்சொல் வினவாயின் னை ஒருமாத்திரையாகும். வாக்கியத்தை அவன் + ஐயா + கூறினுன் எனப் பிரித்தால் னை இருமாத்திரையாகும். ஐ என்ற ஓர் தனி எழுத்து வேண்டியதின்று, அய், என்று எழுதிக்கொள்ளலாம் என்று இக்காலத்துச்சிலர் கூறுகின்றனர். இது இயலாது என்பதனை மேற்கூறிய எடுத்துக்காட்டு விளக்குகின்றது. ஐ, ஒள, ஆகிய எழுத்துக்கள் இயற்கையில் இருமாத்திரையும், குறுக்கத்தில் ஒருமாத்திரையும் பெறுதலை ஒப்பாது

புலவர் புராணமுடையாராகிய தண்டபாணி சுவாமிகள் தமது இலக்கண நூலில்

"ஐ, ஔ, என்பவை குறினெடில் நடுவாம்
இவற்றின்றொன் றொன்றரை மாத்திரை"

என இவற்றிற்கு ஒன்றரை, ஒன்றரை மாத்திரைக் கூறிச் சென்றார்.

1. அகரம் இகரம் ஐகாரமாகும்
2. அகரம் உகரம் ஔகாரமாகும்
3. அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்
4. இகரம், யகரம் இறுதி விரவும்

ஆகிய நான்கு நூற்பாக்களும் எழுத்ததிகாரத்தில் மொழிமரபில் உள்ளன. இவற்றுள் முதல் மூன்று நூற்பாக்களும், அகரத்தின் பின்னர் இகரம் அல்லது யகரம் வந்து ஐகாரமாக எழுதப்படும் போலியையும், அகரத்தின் பின்னர், உகரம் அல்லது வகரம் வந்து ஔகாரமாக எழுதப்படும் போலியையும், குறிப்பன. இவற்றுள் மூன்ருவது நூற்பாவில் ஔகாரப்போலிக்கு இடமின்மையால் நச்சினார்க்கினியர் உரையிற் கொண்டார். காலஞ்சென்ற தமிழறிஞரும் வெள்ளையரை எதிர்த்துக் கப்பலோட்டிய வீரரும் ஆகிய வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் தாம் பதிப்பித்த தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் (இளம்பூரணர் உரை) மேலே காட்டிய மூன்ரும் நூற்பா,

"அகரத்திம்பர் யவகரப் புள்ளியும்
ஐ யௌ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்றிருத்தல் வேண்டும் என்று கூறியிருத்தல் சரியாகும். நூற்பா இவ்வாறிருந்தால் உரையிற் கோடற்கு ஏதுவில்லை.

இந்நூற்பாக்களுக்குச் சிவஞான முனிவர் கூறுவதே உண்மை யுரையாயின் ஆசிரியர் இவற்றை மொழி மரபிற் கூருது பிறப்பியலிற் கூறியிருப்பர். இவ்வெழுத்துக்களின் ஒலித்தன்மையை விளக்காது போலியாக எழுதப்படு முறையினை விளக்கவந்தமையாற்ருன் ஆசிரியர் இந்நூற்பாக்களை மொழிமரபில் கூறினர். அகரத்தின் பின்னர் இகரம் எழுதும் போலியும், அகரத்தின் பின் உகரம் எழுதும் போலியும் இக்காலத்து வழக்கு வீழ்ந்தன. யகரம் வகரம் எழுதும் வழக்கு இன்றுமுளது. ஆயின் இது அறியாதார் மாட்டே பயில்கின்றது. 'அகரத்திம்பர் யகரப் புள்ளியும்' என்ற நூற்பாவிற்கு, 'அகரத்தின் பின்னர் இகரமே யன்றி யகரப்புள்ளி வந்தாலும் ஐ என்ற நெட்டெழுத்தெனக் கொள்ளப்படும்' என்பதே நேரிய பொருளாகும்.

'இகரம் யகரம் இறுதிவிரவும்' என்ற நூற்பா ஒரு சொல்லின் இறுதியில் (அகரத்தின் பின்னர் அன்று) யகரத்திற்கு இகரம் போலியாய் நிற்பதைக் குறிக்கின்றது. (நாய்: நாஇ). இப்போலியும் இப்பொழுது வழக்கு வீழ்ந்தது. விரவும் என்ற சொல்லைக்கொண்டு ஐகாரத்தில் அகரத்தின் பின்னர் யகரமும், அதன் பின்னர் இகரமும் வந்து ஒத்திசைக்கின்றன என்று சிவஞான முனிவர் பொருள் கொள்வது சற்றும் பொருந்தாது. இந்நூற்பாவும் மொழிமரபில் இருத்தலின்.

இதுகாறும் கூறிய வாற்ருல் எல்லா எழுத்துக்களும் பிறப்பதற்கு வழியாகிய வாய்திறத்தலையும் அதன் அகலத்தையும் காட்டி நிற்பதால் அகரம் முதலில் வைக்கப்பட்டதென்றும், இகரம், உகரம் இரண்டும், வாயின் நீட்டத்தையும் உயரத்தையும் காட்டி நிற்றலால் அகரத்தின் பின்னர் முறையாக வைக்கப்பட்டன வென்றும், ஆ, ஈ, ஊ மூன்றும் நெடில்களாதலால் முற்கூறிய குறில்களுக்குப் பின்னர் முறையாக வைக்கப்பட்டன வென்றும், அகரம் இகரம் தம்முள் ஒத்திசைத்து நீரில் உப்புபோல் கலத்தலால் உண்

டாகும் எகரம் அவற்றின் பின்னர் வைக்கப்பட்டதென்றும், ஏகாரம் நெடிலாதலால் எகரத்தின் பின்னர் வைக்கப்பட்டதென்றும், அகரம் இகரம் ஒன்றுசேர்ந்து விட்டிசைத்தலால் உண்டாகும் ஐ கா ர ம் அதன்பின்னர் வைக்கப்பட்டதென்றும், அகரமும் உகரமும் தம்முள் ஒத்திசைத்து நீரில் உப்புபோல் கலத்தலால் உண்டாகும் ஒகரம், ஐகாரத்தின் பின்னர் வைக்கப்பட்டதென்றும், ஓகாரம் நெடிலாதலால் ஒகரத்தின் பின்னர் வைக்கப்பட்டதென்றும், அகரமும் உகரமும் ஒன்றுசேர்ந்து விட்டிசைத்தலால் உண்டாகும் ஔகாரமும் ஈற்றில் வைக்கப்பட்டதென்றும் எடுத்துக் காட்டி உயிர் எழுத்துக்களின் வைப்பு மு றை யி ன் காரணத்தை ஒருவாறு நிலைநிறுத்தினேம். இனிக் குற்றிய லிகரக் குற்றியலுகரங்களினுதவியால் பிறமொழிக் கலப்புயிர் எழுத்துக்கள் பிறக்கு மாற்றை விளக்குவாம்.

முதற்கண் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் குறுகிய இகரம் குறுகிய உகரம் என்ற பொருளன என்னும் எண்ணத்தை அறவே மறத்தல்வேண்டும். இவை குறுகிய இகர வுகரங்களின் வேருன ஒலிகள். இதனாலேயே ஆசிரியர் தொல்காப்பியனார் இ வ ற் றை எழுத்தெண்ணிக்கையில் ஆய்தத்துடன் சேர்த்துச் சார்ந்துவருமரபின் மூன்றெழுத் துக்களென நூலின் முதல் இரண்டு நூற்பாக்களில் விதந் தோதினர். குறுகிய இகர வுகரங்களாயின் இவை நூன் மரபில் கூறப்படாமல் மொழிமரபில் ஐகார ஔகாரக் குறுக் கங்களுடன் கூறப்பட்டிருக்கும். சிவஞான முனிவர் முதல் நூற்பாவிருத்தியில் இவை தனி ஒலிகள் என்பதனைச் செவ் வனே நிலைநிறுத்தியுள்ளார். நூலின் தொடக்கத்தில் இவற்றை எழுத்தெண்ணிக்கையில் சேர்த்துக் கூறியதுடன் நில்லாது ஆசிரியர் பிறப்பியலில் இவற்றைச்

சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த எனை மூன்றும்

எனக்கூறி இவற்றின் சார்ந்து வரும் ஒலித்தன்மையையும்

ஸ்ணிக்கையையும் அறுதியிட்டுக் கூறினர். இவ்வாறு கூறியும் பவணந்தி முனிவர் போன்ற பிற்கால இலக்கண நூலாசிரியர்கள் சார்பெழுத்தின் தன்மையினை ஒருசிறிதும் ஓராது, உயிர்மெய், அளபெடை, குறுக்கம், இவற்றுடன் குற்றிய லிகர வுகரங்களைச் சேர்த்துச் சார்பெழுத்துப் பத்தெனக் கூறிச் சென்றனர். இஃதறியாமையின்பாற் பட்டதே.

நூன்மரபில் எழுத்துவகையும் அவை தம்முள் தொடரு மாறும் கூறிய ஆசிரியர் மொழிமரபில் அவ்வெழுத்துக்கள் மொழிகளில் பயிலுமரபினை எடுத்துக் கூறுகின்றார். கூறப் போந்தவர் முதற்கண் எழு நூற்பாக்களில் சார்பெழுத்துக் கள் மூன்றும் மொழிகளில் நிற்குமாற்றை விளக்குகின்றார். இக்காரணம் ஒன்றுகொண்டே சார்பெழுத்துக்கள் மூன்றே என்பதனையும், அவற்றின் இன்றியமையாத்தன்மையினையும் ஒருவாறு ஊகித்தறியலாம்.

குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகரமூர்ந்தே.

புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்

ஆகிய இரண்டு நூற்பாக்களும் குற்றிய லிகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் கூறுகின்றன. முதல் நூற்பா ஒரு சொல்லில் குற்றிய லிகரம் பயிலுதலையும், இரண்டாம் நூற்பா இருசொற்கள் புணரும்போது பயிலுதலையும் குறிக்கின்றன. இவற்றில் முதல் நூற்பாவிற்கு உரை யாசிரியர் உரைக்கும் நச்சினார்க்கினியர் உரைக்கும் சிறிய மாறுபாடு உளது. இவற்றில் எது உண்மையாயினும் வெளிப்படையான பொருள் ஒருவரை முன்னிலைப்படுத்தி, கேள், செல் என்ற சொற்களைக் கூறும்போது வருகின்ற மியா என்னும் சொல்லில் உள்ள மகரத்தில் ஏறிய இகரமே குற்றிய லிகரம் என்பதாகும்.

கேண்மியா, சென்மியா.

இரண்டாம் நூற்பாவின் பொருள், குற்றிய லுகரம் ஏறிய சொற்களோடு யகரமுதற் சொற்கள் புணரும்போது திரிகின்ற குற்றியலுகரத்தின் மீதேறிய இகரம் குற்றிய லிகரமாகும் என்பதாகும்.

நாகியாது, வரகியாது, எஃகியாது.

நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றுங்
குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே.

என்ற நூற்பா குற்றியலுகரம் வருமிடத்தையும் வல்லெழுத்தாகிய பற்றுக் கோட்டையும் அறிவிக்கின்றது.

இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான

என்ற நூற்பா இருசொற்கள் புணரும்போது குற்றியலுகரம் தன் அரைமாத்திரையினும் குறுகும் என்பதனைத் தெரிவிக்கின்றது.

செக்குக்கணை, சுக்குக்கோடு

குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்

என்ற நூற்பா நுந்தை என்ற சொன் முதலில் உள்ள நகரத்தில் ஏறிய உகரம் குற்றிய லுகரம் எனத் தெரிவிக்கின்றது.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் உயிரெழுத்துக்களாயினும் அடிப்படையான நேரியஉயிரெழுத்துக்கள் ஆகா. இவற்றைக் குறுகிய இகரவுகரங்களாக ஒலிப்பது தவறு.

எனினும் இவற்றின் மாத்திரை அரை அரையே. செக்குக் கணை போன்ற புணர்ச்சியில் மாத்திரை அரையிலும் குறைகின்றது. இவற்றின் ஒலிகள் வேறு ஆகலின் இவற்றை ஆசிரியர் சார்பெழுத்தெனக் கொண்டு நூலின் தொடக்கத்திலேயே விதந்து கூறினார். இவ்வொலிகள் ஆங்கிலம்போன்ற ஐரோப்பிய மொழிகளில் உள்ள கலப்புயிர்களை யாங்ஙனம் உண்டுபண்ண உதவுகின்றன என்பதனை இனிக்காண்பாம். முதற்கண் முன்னர்க்கூறிய உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டின் முறை வைப்பிற்குக்காரணமாகிய தொடர்பினை நினைவிற்குக் கொண்டுவருதல் வேண்டும்.

அகரம் எல்லா வெழுத்திற்கும் முதற் காரணமாகிய எழுத்தென்பதனையும், அகர இகரச்சார்பாலும், அகரவுகரச் சார்பாலும் ஏனைய உயிர் எழுத்துக்கள் உண்டாகின்றன வென்பதனையும் முன்புகண்டாம். தமிழ் உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டும் வாயின் நேரிய முயற்சியால் உண்டாகும் கலப்பில்லாத உயிர் எழுத்துக்கள் ஆகும். இவற்றைவிட அதிகமான நேரான உயிர் எழுத்துக்களை உண்டுபண்ண வாயிதழ்கள் இடங்கொடா. இதழ்களின் முயற்சியால் வேறு உயிர் எழுத்துக்கள் உண்டாக்கப்படுமாறல் அவை கலப்பற்ற தனி உயிர்கள் ஆகா. ஆங்கிலம் போன்ற மொழிகளில் காணப்படும் 'கலப்புயிர்களைக் கூறுபடுத்தினல் அவை தமிழ் உயிர் எழுத்துக்களுடன் குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகிய இரண்டும் தனித்தனி சார்தலினல் உண்டாகின்றன என்ற உண்மை வெளிப்படுகின்றது.

அ + இ = எ, ஐ
அ + உ = ஒ, ஔ
அ + கு, இ = ?
அ + கு, உ = ?

அகரத்துடன் குற்றியலிகரம் சேர்ந்தால் எகரம்

உண்டாகாது. ஆனால் சிறிது வேறுபட்டு ஒலிக்கும் எகரம் உண்டாகும். இவ்வாறே அகரத்துடன் குற்றியலுகரம் சேர்ந்தால் ஒகரம் உண்டாகாது. ஒகரத்தினும் சிறிது வேறுபட்டு ஒலிக்கும் ஒகரம் உண்டாகும். இனி ஆங்கிலத்தினுள்ள கலப்புயிர்களைச் சோதிப்போம். இச்சோதனையின் உண்மையை உள்ளவாறுணர மேற்கூறிய அடிப்படையை மறத்தல் கூடாது.

| | |
|---|---|
| குற்றியலிகரக் குறியீடு : | ( ୨ ) |
| குற்றியலுகரக் குறியீடு : | ( $_2$ ) |
| கால் மாத்திரைக் குற்றியலுகரக் குறியீடு : | ( L ) |
| ஔகாரக்காலின் அடையாளம் : | ( ள ) |

Man என்ற சொல்லில் உள்ள உயிரெழுத்து தமிழ் ஆகாரத்தின் கூறும் குற்றியலிகரத்தின் கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகின்றது.

M a n — மா୨ன்

There என்ற சொல்லின் நடுவில் உள்ள உயிரெழுத்து தமிழ் ஏகாரத்தின் கூறும் குற்றியலிகரக் கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகிறது.

T h e r e — $^{u}$தே୨ர்

Long என்ற சொல்லில் உள்ள உயிரெழுத்து தமிழ் அகரத்தின் கூறும் குற்றியலுகரக்கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகிறது.

L o n g — ல$_2$ங்

Saw என்ற சொல்லில் உள்ள உயிர் எழுத்து தமிழ் ஆகாரத்தின் கூறும் குற்றியலுகரக்கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகின்றது.

S a w — –சா$_2$

Above என்ற சொல்லில் முதலில் உள்ள உயிரெழுத்து தமிழ் எகரத்தின் கூறும் குற்றியலுகரத்தின் கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகிறது.

**A**bove — எ$_{2}$$^{U}$பவ்

Bird என்ற சொல்லில் உள்ள உயிரெழுத்து தமிழ் ஏகாரத்தின் கூறும் குற்றியலுகரக்கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகின்றது.

B**i**rd — $^{U}$பே$_{2}$$^{U}$ட்

Go என்ற சொல்லில் உள்ள உயிர் எழுத்து தமிழ் ஓகரத்தின் கூறும் குற்றியலுகரக் கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகின்றது.

G**o** — $^{U}$கொ$_{2}$

More என்ற சொல்லின் நடுவில் உள்ள உயிர் எழுத்து தமிழ் ஓகாரத்தின் கூறும் குற்றியலுகரக் கூறும் சேர்ந்திசைத்தலால் உண்டாகின்றது.

M**o**re — மோ$_{2}$ர்

மேற்காட்டிய ஆங்கில உயிரெழுத்துக்களை ஒலிக்கும்போது வாய் திறப்பின் உருவங்கள் தமிழ் உயிரெழுத்துக்களை ஒலிக்கும்போதுண்டாகின்ற ஒழுங்குள்ள உருவங்கள் போலாகாமல் சிறிது மாறுபட்ட கோடிய உருவங்களாகத் தோன்றும்.

ஆங்கிலத்திலுள்ள இரட்டை யுயிர்களும், மூவுயிர்களும் தமிழ் உயிரெழுத்துக்கள் ஒன்றோடொன்று சேர்தலானும், உயிரெழுத்துக்களும் கலப்புயிர் எழுத்துக்களும் சேர்தலானும் உண்டாகின்றன.

Boy என்ற சொல்லில் உள்ள உயிரொலிகளை இரட்டை

யுயிர் என்பர். இவை தமிழ் ஆகாரத்துடன் குற்றியலுகரம் சேர்தலானும் பின்னர் யகர ஒற்று சேர்தலானும் உண்டாகின்றன.

$^{u}$பா$_{2}$ய்

Play என்ற சொல்லில் உள்ள உயிரெழுத்துக்கள் தமிழ் எகரத்துடன் யகர வொற்றுச் சேர்தலால் உண்டாகின்றன.

ப் ளெ ய்

Poor என்ற சொல்லில் உள்ள உயிர் எழுத்துக்கள் தமிழ் உகரத்துடன் வகர உயிர் மெய்யும் குற்றியலுகாரமும் சேர்தலால் உண்டாகின்றன.

பு வ$_{2}$

ஆங்கில எழுத்தாகிய W என்பதற்கமைந்த $^{u}$ட$^{u}$ப்ள்யு என்ற பெயர் அதன் ஒலிக்குப் பொருந்தாப் பெயராகும். தமிழ் ஒலியிலக்கணப்படி அதன் ஒலியுருவம் குற்றிய லுகரத்துடன் சேர்ந்த வகர மெய்யாகும்.

2வ்

இதனாலேயே Will என்ற ஆங்கிலச் சொல் தமிழில் உயில் என்று மருவி வழங்குகிறது. உயில் என்ற சொல்லின் உகரத்தைக் குற்றியலுகரமாக ஒலித்தாற்றான் ஆங்கில ஒலிப்பிற்கு நேராகும். Will முதலில் உவில் என்று மருவிப் பின்னர் உயில் என்று மாறியிருத்தல் வேண்டும். இச்சொல்லின் நேரான ஒலியுருவம் 2வில் என்பதாகும்.

வடமொழியில் உயிர்களுடன் சேர்த்து ऋ, ॠ, ऌ ஆகிய மூன்று எழுத்துக்களும் கூறப்பட்டுள்ளன. இவை உயிர் எழுத்துக்கள் ஆகா. இவற்றுள் முதல் எழுத்து தமிழ் ரகர மெய்யின்மேல் ஏறிய கால்மாத்திரைக் குற்றியலுகரம். இரண்டாம் எழுத்து ரகர மெய்யின்மேல் ஏறிய குற்றிய

லுகரம். மூன்றும் எழுத்து லகர மெய்யின்மேல் ஏறிய குற்றியலுகரம்.

ர்$_L$, ர்$_2$, ல்$_2$

நுந்தை என்ற சொல்லில் குற்றியலுகரம் முதலில் நகர மெய்யில் ஊர்ந்து வருவதுபோல Will என்ற ஆங்கிலச் சொல்லில் முதற்கண் குற்றியலுகரம் வந்தது. செக்குக் கணை என்ற சொல்லில் கால் மாத்திரை குற்றிய லுகர மிருப்பதுபோல வடமொழி ऋ என்ற எழுத்தில் கால் மாத்திரை குற்றியலுகரம் சேர்ந்துளது.

வேறு எம்மொழியிலும் காணப்படாத ஒலி மாண்பு ஒன்றும் தமிழ் மொழியில் உண்டு. அதுதான் அளபெடை யென்பதாகும். அது தற்காலத்தில் செய்யுளுக்கே உரிய தாய் வரினும் வேறு மொழிகளைத் தமிழில் எழுதிக்காட்ட பெரிதும் பயன்படும். மேனாட்டுக் கணக்கு முறையில் ஓரெண்ணை அதனைக்கொண்டே பன்முறை பெருக்கு வதற்குக் கையாளப்படும் $4^3$ போன்ற குறியீட்டு முறையை அளபெடைக்கு உதவியாகக் கொண்டால் பேச்சொலி யில்லா ஒலிகளையும் தமிழால் எழுதிக்காட்டவியலும். ஆனால் இதற்குக் கூர்மையான செவிப்புலன் வேண்டும். எடுத்துக் காட்டாக இரண்டு கூறுதும். அடுப்பூதும் போதுண் டாகும் காற்றின் ஒலியை உ–ப்–ப்$^{10}$ என எழுதலாம். கணையால் இருவரிசைப் பற்களுக்கும் இடையில் நாவினை வைத்து வாயினால் காற்றை வெளிவிடும்போதுண்டாகும் ஓசையை –ச்–ச்$^{10}$ என எழுதலாம். இவ்வாறே வேறு ஒலிகளையும் எழுதிக்காட்டவியலும். வடமொழியில் மெய் யெழுத்திற்கு அளபெடை கூறப்படவில்லை. உயிர் எழுத் திலும் மூல எழுத்துக்களாய அ, இ, உ, இவற்றிற்கே இரண்டின் மேற்பட்ட மூன்றும் மாத்திரை யுண்டெனக் கூறப்பெற்றுளது. இது அளபெடையாகாது. இவ் வெழுத்துக்கள் இரண்டு மாத்திரை பெற்று நெடில்கள் ஆகின்றமைபோல மூன்று மாத்திரை பெற்று நெடில்கள்

ஆகின்றன. இம்முறை தமிழ் மொழிக்கொவ்வா தெனக் காட்டுவதற்கே ஆசிரியர் தொல்காப்பியனார்

'மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே'

எனக் கூறினார். எனினும் நீட்டம் வேண்டின் செய்ய வேண்டுவதென்ன என்பதனைப்பற்றி அடுத்த நூற்பாவில் கூறினார் :

'நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்'

அளபெடையை விளக்கவந்த நூற்பாவிலேயே அளபெடையை அமைத்துள்ள அழகைக்காண்க. இத்துடன் இது தொன்றுதொட்டுவந்த வழக்கு என்பதனைக் காட்டுவதற்கு 'என்மனார் புலவர்' என்றுங் கூறியுள்ளார். இவ்வாறே ஆசிரியர் எழுத்தின் பெயரும் தொகையும் கூறவந்த முதல் நூற்பாவிலேயே ஆய்தத்தின் இன்றியமையாத் தன்மையைக்காட்ட அதனை அந்நூற்பாவில் அமைத்தனர் :

எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.

'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய' எனக் கூறினமையால் வேண்டிய அளவு நீட்டி எழுதலாம் என்பது பெறப்படுகின்றது. உலக வழக்கில் அளபெடை இசை, விளி, பண்டமாற்று இவற்றுள் பயில்கின்றது.

'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்'

என்ற நூற்பா இசைத்தமிழில் உயிர், மெய், உயிர்மெய்

யாகிய எழுத்துக்கள் அளபிறந்து நீட்டம்பெற்று வருதலைக் குறிக்கின்றது.

தமிழ் மொழியில் உள்ள மகரமெய் ஓர் தனிச்சிறப் புடையது. வாய்திறவாமலே மூக்கின்காற்றால் உண்டாகும் ஒலி இது. இதனாலேயே பிரணவத்தின் இரண்டாம் எழுத் தாக இது அமைந்துள்ளது. பிரணவத்தின் முதல் எழுத் தாகிய ஓகாரத்தின் வரிவடிவம் தமிழ் ஓகாரத்தின் வரி வடிவமே என்பதனைப் பேரறிஞர் பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்கள் தமது Tamil Alphabet and Its Mystic Aspect என்ற நூலில் நிலைநாட்டியுள்ளார். ஓகாரத்தை உச்சரிப்பதற்கு வாயை முழுதும் திறக்கவேண்டும். மகர மெய்யை உச்சரிப்பதற்குத் திறந்த வாயை மூடியாக வேண்டும். ஆகவே பிரணவத்தின் இரண்டு எழுத்துக் களும் உலகத்தோற்றத்தினையும் ஒடுக்கத்தினையும் காட்டி நிற்கின்றன. இப்பெற்றியுள்ள மகர மெய்குறுகியும் வரும் என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார்.

1 அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங்காலை

3 உட்பெறு புள்ளி உருவா கும்மே

ஆகிய நூற்பாக்களில் முதல் நூற்பா மகரக் குறுக்கம் வரும் இடத்தைக் குறிக்கின்றது.

போன்ம், வரும்வண்ணக்கன்

இரண்டாவது நூற்பா குறுகிய மகரத்திற்கு வரிவடிவம் கூறுகின்றது. உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் இரண்டாம் நூற்பாவிற்குக் கூறிய பொருள் பொருந்தாது. இருவரும் பகர மகரங்களிடை உருவ வேற்றுமை காட்டு வதற்காக மகரத்திற்கு உட்பெறுபுள்ளி கூறப்பட்டதென்

கின்றனர். முதற்கண் பல்வேறு உருவுடன் கூடிய தமிழ் எழுத்துக்களை எழுதிவந்த பண்டைத்தமிழ் அறிஞர்களுக்கு இவ்விரு எழுத்துக்களை உருவவேறுபாட்டுடன் எழுதத் தெரியவில்லை என்று கொள்வது பொருந்தாதாகும். இரண்டாவதாக ஒரு அடைப்பிற்குள்ளிருந்தாலொழிய புள்ளியை உட்பெறுபுள்ளி என்று கூறுவது பொருந்தாது. மூன்றாவதாகப் பகரத்தின் நடுவே புள்ளி வைத்தால் அது யகரமாகத் தோன்றும். (ய) நான்காவதாக **13, 14, 15**-ம் நூற்பாக்களின் வைப்பு முறையையும் **15**-ம் நூற்பாவின் பொருளையும் நோக்கின் உட்பெறுபுள்ளி மகரக் குறுக்கத்தைக்காட்ட வந்ததென்பது தெளிவாம். **15**-ம் நூற்பா மகரம் உள்ளிட்ட பதினெட்டு மெய்களுக்கும் மேற்புள்ளி உண்டென்பதனை விளக்குகின்றது. ஆகலின் குறுகிய மகரமெய்க்கு அடைப்பிற்குள் புள்ளி வைக்கப்பட்டு வந்ததென்பது தெளிவாகின்றது. தற்போதுள்ள மகரவுருவே பண்டுமிருந்த தென்பது தேற்றம். குறுகிய மகரமெய்யின் உருவம்  இவ்வாறு இருந்திருத்தல் வேண்டும். குறுகிய மகர மெய் வேறு பல மொழிகளைத் தமிழில் எழுதுவதற்குப் பயன்படலாம். Prism போன்ற சொற்களில் உள்ள மகர மெய் குறுகிய ஒலி உள்ளதே.

இனி உலக மொழிவேறொன்றிலும் காணப்படாத தனிச் சிறப்புடைய ழகரத்தைப் பற்றிச் சிறிது விளக்குவாம். பிற மொழிகளில் காணப்படாததாயும் பிறமொழியாளரால் எளிதில் உச்சரிக்கக் கற்றுக்கொள்ளப்படாததாயும் உள்ள இவ்வெழுத்துத் தமிழ்க்குழந்தைகளால் எளிதில் உச்சரிக்கக் கூடியதாயும், தமிழ்மொழியில் பெரு வழக்காய்ப் பயின்று வருவதாயுமிருப்பது பெரிதும் இறும்பூது எய்துவிக்கின்றது. மேற்கூறிய வாக்கியத்திலேயே ஏழு ழகரம் பயின்றுள்ளது. தமிழ், எழுத்து, மொழி, உலக வழக்கு, செய்யுள்வழக்கு, சொற்பொழிவு முதலாகிய இலக்கியச் சார்பான சொற்களிலும் இவ்வெழுத்துப் பயில்கின்றது. பிரஞ்சு மொழி

யில் இவ்வொலியைச் சிறிது ஒத்துள்ள ஒலியுள்ளது. அது Pleasure என்ற ஆங்கிலச் சொல்லில் உள்ள S எழுத்தின் ஒலியே.

தமிழ் என்ற சொல்லில் முதல் இரு உயிர்களும் மூவின மெய்களும் அமைந்திருத்தல் கண்கூடு. ஒருவகையில் தமிழ் நெடுங்கணக்கைக் கருவாகக் காட்டும் இச்சொல்லில் மகரமும் ழகரமும் சேர்ந்திருத்தல் கருத்தக்கது. இச் சொல்லின் பொருள் ஒப்பற்ற இனிமை என்பதாகும். தமி என்ற சொல்லுக்கு ஒப்பின்மை என்பது பொருளாதலால் இனிமை என்ற பொருளைக் கொடுப்பது ழகரமே. ஐம்புல நுகர்ச்சிக்கும் ஆறுவது அறிவிற்கும் இனிமை பயக்கும் சொற்களில் ழகரம் பயில்வது இறும்பூதளிக்கின்றது :

கண்—அழகு, எழில், பொழில், குழந்தை, குழவி

செவி—குழல், யாழ், மழலை

வாய்—பழம், வாழைப்பழம், அமிழ்தம்

மூக்கு—தாழை, மகிழப் பூ, கமழ்தல்

மெய்—வழவழப்பு, தழுவுதல், நழுவுதல், உழைப்பு

ஆறும் அறிவு—புகழ், மகிழ், அழு, எழு, பிழை, விழை, தொழு, விழுமியது, தொழும்பு, கெழுதகை, உழுவலன்பு, கழிபேருவகை, விழுப்புண், கிழமை, தோழமை.

இன்னும் இவ்வாறுன எத்தனையோ சொற்கள் உள்ளன. ழகரம் பயின்றுள்ள பலசொற்களைச் சோதித்தால் ஒன்றெற் கொன்று மாறுபாடான பொருளைத் தருகின்ற சொற்களும் உள்ளன என்பதறிகின்றோம். மாறுபாட்டிற்குக் காரணம், ஒன்றன் முதிர்ச்சி அல்லது மிகுதிப் பாடாகத் தோன்றுகிறது.

பழுத்தது × அழுகியது
மகிழ்ச்சி × அழுகை
புகழ் × இகழ்
வாழ்வு × தாழ்வு
காழ் × பாழ்
ஒழுக்கம் × இழுக்கம்.

இவைபோன்ற இன்னும் எத்தனையோ மாறுபாடான சொற்கள் உள்ளன. பழம் அதிகமாகப் பழுத்தால் அழுகி விடுகின்றது. வரம்புமீறிய மகிழ்ச்சியில் அழுகை ஏற்படு கின்றது. வரம்புமீறிப் புகழ்ந்தால் இகழ்ச்சியாம். வரம்பு மீறி வாழ முற்படுகிறவன் தாழ்வான்.

தொல்காப்பியச் செய்யுளியலில் எண்வகை வனப்பின் ஒன்ருகிய தோல் என்பதனை விளக்கும்

'இழுமென் மொழியான் விழுமியது நவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும்
தோலெனமொழிப தொன்னெறிப் புலவர்'

என்ற நூற்பாவிலேயே ழகரம் மிகுந்து வருதலை நோக்குக. கீழ்க்காட்டிய செய்யுளில் ழகரம் மிகுதியாகப் பயின்று அச்செய்யுளின் ஓசைக்கு இனிமை பயப்பதைக் காண லாம்:

தொடுக்குங் கடவுள் பழம்பாடற் றொடையின் பயனே
நறைபழுத்த துறைத்தீந் தமிழின் ஒழுகும் நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோ யிற்கேற்றும்
விளக்கே வளர்சிமைய இமையப் பொருப்பில்
விளையாடு மிளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங்கடந்து நின்றதோர் ஒருவன்
திருவுள்ளத்தில் அழகுஒழுக எழுதிப்பார்த் திருக்கும்

உயிரோவியமே மதுகரம் வாய்
மடுக்குங் குழற்காடேந்து இளவஞ்சிக் கொடியே
வருக வருகவே மலயத் துவசன்
பெற்ற பெருவாழ்வே, வருக வருகவே.

ழகர ஆராய்ச்சியை இத்துடன் நிறுத்தி மேற்செல்லு வாம். தமிழ்மொழியில் பேச்சுக்கருவிகளின் இயற்கை யான எளிய முயற்சியாலுண்டாகும் எழுத்துக்களும், அவற்றால் ஆகிய சொற்களுமே மிகுந்துள்ளன. பழந் தமிழ்ச்சொற்கள் பெரும்பாலும் இவ்வாறே அமைந் துள்ளன. இதழ், பல், நா, வாய், மூக்கு ஆகிய சொற் களை ஒலியிலக்கண முறைப்படி ஆய்ந்தால் இதன் உண்மை வெளியாகும். இதழ் என்ற சொல்லில் இகரம் இதழ் விரி தலால் உண்டாகிறது. பல் என்ற சொல்லில் பகரம் இதழிலும், லகரம் பல்லடியிலும் தோன்றுகின்றன. நா என்ற எழுத்து பல் மருங்கில் தோன்றுகின்றது. வாய் என்ற சொல்லில் வகரம் கீழிதழில் உண்டாகிறது. மூக்கு என்ற சொல்லில் உள்ள மகரத்திற்கு மூக்குவளி இன்றி யமையாததாயிருக்கின்றது. இவ்வாறே பழந்தமிழ்ச் சொற்கள் பலவற்றை ஆய்ந்து காணலாம். இத்தகைய சொற்கள் வேறு மொழிகளிலும் உளவேனும் தமிழ்மொழி யிற்போல் மிகுதியாகக் காணப்படவில்லை.

தற்காலத் தமிழ் மக்கள் வல்லெழுத்துக்களை வலித் தொலிப்பதில்லை. யாழ்ப்பாண மக்களும், திருநெல்வேலி வட்டத்தில் உள்ள மக்களும், தமிழ்நாட்டில் சிற்சில பகுதி களில் உள்ள சிற்றூர்களில் வாழுமக்களும் வல்லெழுத்துக் களை ஒருவாறு வலித்தே உச்சரித்துவருகின்றனர். பெரும் பாலான மக்கள் வலித் தொலிப்பதில்லை. கடைச்சங்க காலத்திற்குச் சற்று பிற்பட்ட காலத்தில் தமிழ் மக்கள் ஆய்தத்தின் உண்மை யொலியை அறியாது போனமை யாலும், தமிழ் மொழியில் வடமொழி நூல் மொழி பெயர்ப் பும், புராணங்களும் உண்டான காலத்தில் வடமொழிச்

சொற்கள் தமிழொடு கலந்து பெரிதும் பயிலத் தொடங்கின மையாலும் தமிழின் தூயதன்மை கெடாமலிருக்க ஆசிரியர் தொல்காப்பியனார் எடுப்பித்த அணையை பவணந்தி முனிவர் போன்றபிற்கால இலக்கண நூலாசிரியர் தகர்த்தெறிந்தமை யாலும் தமிழ்மக்கள் வல்லெழுத்துக்களின் வன்மை யொலிப்பைக் கைவிடத்தொடங்கினர். வல்லெழுத்தாறின் முன்னர் ஆயுதந் தோன்றுங்காலே அவற்றை உயிர்ப்பொலி யாய் உச்சரித்தது போலவே, ஆய்தந் தோன்றாக்காலேயும் உச்சரிக்கத் தொடங்கிவிட்டனர். க, த, ப, ஆகிய மூன்றும் சொற்களின் முதலெழுத்துக்களாய் நிற்கும்போதும் இரட்டிக்கப்படும்போதுமாத்திரம் வலித்துச் சரிக்கப்படு கின்றன. சொற்களின் இடையிலும், ஈற்றிலும் வரும் போது இவை உயிர்ப்பொலிகளாய் உச்சரிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| நாகம் | காதம் | கோபம் |
| போக | காது | சால்பு |

மொழி முதல்வராத ச, ட, ற மூன்றும் இரட்டிக்கப்படும் போதே வலித்துச் சரிக்கப்படுகின்றன. தனியாக இடை யிலோ கடையிலோ வரும்போது இவை மெல்லொலியாக அல்லது உயிர்ப்பொலியாக உச்சரிக்கப்படுகின்றன :

காசு, ஓடம், அறம்.

எங்கு, பஞ்சு, வண்டு, வந்து, அம்பு, கன்று என்ற சொற்களில் உள்ள வல்லெழுத்துக்களை இக்காலத் தமிழ் மக்கள் வலித்துச்சரிப்பதில்லை. இனச்சார்பால் வல்லெழுத் திற்கும் சிறிது மூக்குவளிகொடுத்து உச்சரித்துவருகின் றனர். இதனால் கால்டுவெல் போன்ற ஆங்கில அறிஞர் ஏமாந்து மெல்லெழுத்தைச் சார்ந்துவரும் வல்லெழுத்தை வடமொழி வல்லெழுத்து வர்க்கத்தின் மூன்றும் எழுத்துக் களுக்கு நேர் என்று கொண்டுவிட்டனர். இது தவறு. பஞ்சு என்ற சொல்லில் ஞ்சு என்ற ஒலியில் மூக்கின்

காற்றும் தலைக்காற்றும் சேர்கின்றன. ஐ என்ற ஒலி தலைக்காற்றுடன் மிடற்றுக்காற்று சேர்வதால் உண்டாகின்றது.

தமிழ் எழுத்துக்களின் தொகை தொல்காப்பியரால் கூறப்பெற்ற முப்பத்து மூன்றே. உயிர்மெய்களையும் எழுத்துக்களாகக் கொள்வோமானால் தொகை 249 ஆகும். நச்சினார்க்கினியர் அளபெடை ஏழு சேர்த்துத் தொகை 256 என்பர். இது பொருந்தாதென்பதனைப் பல நூற்பாக்களுக்கு அவர் கூறும் உரைகளிலிருந்தே அறியலாம். ஆசிரியர் கருத்தும் இதற்கு முரணாகும். தற்கால எழுத்துருவின்படி எழுத்துக்கள் 48 குறியீடுகளில் அடங்கும் :

| | | | |
|---|---|---|---|
| உயிர் | — | 12 | |
| மெய் | — | 18 | |
| மெய்ப்புள்ளி | — | 1 | ( • ) |
| குறுங்கொம்பு | — | 1 | ( ெ ) |
| நெடுங்கொம்பு | — | 1 | ( ே ) |
| இரட்டைக்கொம்பு | — | 2 | ( ை , ை ) |
| கால் | — | 1 | ( ா ) |
| ஔகாரக்கால் | — | 1 | ( ள ) (ளகரத்தினின்று வேறுபடுத்திக் காட்டுவதற்காக இவ்வாறு எழுதப்படுகின்றது). |
| ஆ வளைவு | — | 1 | ( ா ) |
| இகர விசிறி | — | 1 | ( ி ) |
| ஈகார விசிறி | — | 1 | ( ீ ) |
| உகர மடிப்பு | — | 2 | ( சு, து ) |
| ஊகார மடிப்பு | — | 2 | ( சூ, தூ ) |
| உகர வளைவு | — | 1 | ( கு ) |
| ஊகார வளைவு | — | 1 | ( ூ ) |

| | | | |
|---|---|---|---|
| ஊகாரக்கோடு | — | 1 | ( ூ ) |
| ஆய்தம் | — | 1 | ( ஃ ) |
| | | 48 | |

இக்காலத்துச் செய்தித்தாள்கள் சில உயிர்மெய் ஐகாரங்களுக்கெல்லாம் இரட்டைக்கொம்பு (ை) கொடுத்தும் உயிர்மெய் நெடில்களுக்கெல்லாம் (ா) கால் கொடுத்தும் அச்சிட்டு வருகின்றன. இவ்வாறு அச்சிடுவதில் தவறு ஒன்றுமில்லை. இரு குறியீடுகள் குறைகின்றன. கல்வெழுத்தில் இருப்பதுபோல இரட்டைக்கொம்பை இரட்டையாகவே எழுதினால் (ெகெ) மேலும் ஒரு குறியீடு குறையும் ஆனால் இம்மாறுதல் அச்செழுத்திற்குச் சிக்கனமேயொழிய கையெழுத்திற்குச் சிக்கனமாகாது. பழைய முறையே கையெழுத்திற்குச் சிக்கனமாகும்.

மேற்காட்டிய குறியீடுகளுடன் தமிழ் எழுத்து கொண்டு பிறமொழிகளை எழுதுவதற்கு யாம் கொடுத்துள்ள குறியீடுகள் கீழ்வருபவை :—

| | | | |
|---|---|---|---|
| குற்றியலிகரம் | — | 1 | ( ˀ ) |
| குற்றியலுகரம் | — | 1 | ( ₂ ) |
| கால்மாத்திரைக் குற்றியலுகரம் | | 1 | ( ‚ ) |
| நெஞ்சுவளி ஆய்தம் | — | 3 | ( —, –, • ) |
| தலைவளி ஆய்தம் | — | 1 | ( \| ) |
| மிடற்றுவளி ஆய்தம் | — | 3 | ( ᵁ, ⱼ, ⅃ ) |
| மிடற்றுவளியும் தலைவளியும் சேர்ந்த ஆய்த உரு | — | 1 | ( ⊥ ) |
| மிடற்றுவளியுடன் நெஞ்சுவளி சேர்ந்த ஆய்த உரு | — | 1 | ( ᗜ ) |

ஆகக் குறியீடுகள் மொத்தம் — 60

தமிழ் மொழியில் நாம் வழங்கிவருவது நெஞ்சுவளி யாற் பிறக்கின்ற ஆய்தம். இதற்கு நாம் மூன்றுபுள்ளி அடையாளத்தையே எழுதிவருகின்றோம். பிறமொழிகளை எழுதும்போது மூன்றுவளி ஆய்தத்தையும் தனித்தனி பிரித்து ஒவ்வொன்றிலும் மொழிக்குத்தக்கவாறு உட்பிரிவு கொள்ளவேண்டியிருக்கிறது. ஏறக்குறைய 60 குறியீடு கள் கொண்டு உலக மொழிகள் அனைத்தையும் சிறிதும் ஒலிவழுவின்றி எழுதலாம்.

பேரறிஞர்களாகிய அகத்தியனார், தொல்காப்பியனார் முதலாயினோர் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த காலத் தில் தமிழ் எழுத்தால் உலக மொழிகளை எழுத வியலும் எனக் கருதினரோ, அல்லரோ, யாமறியேம். யாம் இது காறும் கூறிவந்துள்ள ஆராய்ச்சி யுரைகளைக்கொண்டும், கீழே கொடுக்கப்படும் மற்றொரு குறிப்பினைக் கொண்டும் தீர்ப்பளிப்பது தமிழறிஞர் கடன். தமிழ் மொழிக்கு வேண்டப்பெறாத எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் கொள்ளப்பட்டதேன்? ஔவை மூதாட்டியார் 'ஙப்போல் வளை' என்று கூறுவதற்கா? ஙகர வரிசையில் ஙகர உயிர் மெய் நீங்கிய பதினொரு உயிர்மெய்களாற் றமிழுக்குப் பய னென்ன? ஔகார உயிர்மெய்கள் சிலவற்றால் பய னென்ன? ஞகர வரிசையில் இன்னணம் சில வெழுத்துக் கள் பயன்படுவனவல்ல. இவை பண்டைத் தமிழிலும் பயிலவில்லை; இற்றைத் தமிழிலும் பயிலவில்லை. பின் இவற்றால் பயனென்? பண்டைக்காலத்தே இப்பொழுது உலகிற்பேசப்படும் பலமொழிகள் இருந்தனவல்ல. பின் பிறந்தவை. மொழியியலும், மொழியின் ஒலியியலும் துறை போகக் கற்றுணர்ந்த பண்டைப் பெரியார் எதிர்காலங் குறித்துத் தமிழ் நெடுங்கணக்கில் தமிழ் மொழிக்கு வேண்டப்பெறாத எழுத்துக்களையும் கொண்டிருந்தனர் எனக் கருதுவது தவறாகாது என்பது எமது கருத்து.

உலக மொழிகளைத் தமிழ் எழுத்தால் எழுதுவதாற்

போதரும் பயனென்ன? அவை தமிழில் எழுதப்படுமானல் ஒருவர் பலமொழிகளை எளிதிற்கற்கலாம். தமிழ் எழுத்து மாத்திரம் உணர்ந்த ஒருவர் பிறமொழிகளைக் கற்காவிடினும் அவற்றைப்படிக்கும் ஆற்றலைப் பெறுவர். தனது தாய் மொழியைப் படிக்கத் தெரியாத பிறமொழியாளன் ஒருவனுக்கு இவ்வெழுத்தை மாத்திரம் உணர்ந்த ஒருவன் அவனது தாய்மொழி நூலைப்படித்துக்காட்ட இயலும். ஆங்கிலத்திலும், வேறு ஐரோப்பிய மொழிகளிலுமுள்ள ஒலிக்குப் பொருந்தா எழுத்து, எழுத்திற்குப் பொருந்தா ஒலி ஆகிய குழப்பங்கள் நீங்கும். உலகெங்கணும் ஒரே வகையான அச்சுப் பொறிகள் உண்டாகும். சுருங்கக் கூறின் யாரும் எம்மொழியையும் எளிதிற்கற்கும் வாய்ப் புண்டாகும்.

பேச்சுக்குக் காரணமாகிய காற்றையும், பேச்சுக்கருவிகளின் அமைப்பையும், எழுத்தொலிகளின் நுட்பங்களையும் நுண்மாண்நுழைபுலஞ் செலுத்திக் கூறுபடுத்திக்கண்டறிந்த பண்டைமூதறிஞர் இவ்வெழுத்துக்களுக்கு உயிர் என்றும் மெய் என்றும் சார்பு என்றும் பெயர் கொடுத்தமை எம்மொழியிலும் எக்காலத்திலும் காணப்படாத வியப்புறு செய்தியாகும். வடமொழியாளர் உயிரை அச் என்றும் மெய்யை ஹல் என்றும் கூறி வழங்குகின்றனர். பாணிணீயத்தின் உயிரெழுத்துச் சூத்திரத்தின் முதல் எழுத்து அகரம், இறுதி எழுத்து ச். மெய்யெழுத்துச் சூத்திரத்தின் முதல் எழுத்து ஹ, இறுதி எழுத்து, ல். இவையே அச், ஹல் என்ற பெயர்களுக்குக்காரணம். இவற்றைவிடப் பொருத்தமான ஸ்வரம், வியஞ்சனம் என்ற பெயர்களும் வடமொழியில் வழங்கிவருகின்றன. ஆங்கிலப் பெயர்களாகிய Vowel, Consonant என்ற சொற்கள் இவற்றைத் தழுவியவை எனத் தோன்றுகிறது. Vowel என்ற சொல்லுக்கு ஒலிப்பது என்பதும், Consonant என்ற சொல்லுக்கு ஒத்தொலிப்பது என்பதும் பொருளாகும். காலஞ்சென்ற தமிழ்ப்பேரறிஞர் பா. வே.

மாணிக்க நாயக்கர் அவர்கள் தமிழ் மொழியில் எழுத்துக்களுக்கு உயிர், மெய், உயிர்மெய், சார்பு, வல்லினம், இடையினம், மெல்லினம், உடம்படுமெய் எனப் பெயர்கள் வைக்கப்பட்டிருத்தலையும், சில நூற்பாக்களின் பொருளையும் எடுத்து விளக்கி தமிழ்நெடுங்கணக்கும் இலக்கணமும் தத்துவநூற்பொருள் அடிப்படை கொண்டிருக்கலை **Tamil Alphabet, Its Mystic Aspect** என்ற நூலில் தெளிவாக நிலைநாட்டியுள்ளார். நெடுங்கணக்கே தத்துவ நூலாயின் பண்டைத் தமிழ் மூதறிஞரின் பேரறிவை எத்தகைய அளவு கோல் கொண்டு அளக்க வல்லேம்!

அறிவியல், மருத்துவம், வானநூல், முதலாய பல துறைகளில் வியக்கத்தக்க முன்னேற்றமடைந்துள்ள ஆங்கிலேயர் எழுத்தொலி ஆராய்ச்சியில் மிகமுயன்றும் தவறான முடிவுடையவர்களாகவும், ஆங்கில எழுத்தொலியின் தன்மையினைச் சரியாக அறிந்துகொள்ள முடியாதவர்களாகவும் இருக்கின்றார்கள். இதற்குக் காரணம் ஆங்கில மொழியின் மிகக் குழப்பமான நிலையே. உரோமன் எழுத்து என்று சொல்லப்பெறும் ஆங்கில எழுத்துக்களில் ஐந்து உயிர் எழுத்துக்களும் இருபத்தொரு மெய்யெழுத்துக்களும் உள்ளன. உயிர் எழுத்துக்களில் ஒன்றிற்காவது வரையறுக்கப்பட்ட ஒலி இன்மையால், ஒன்றே குறிலாகவும் நெடிலாகவும், ஒன்று மற்றொரு ஒலியாகவும், ஒன்று பல ஒலியாகவும் இன்ன பலவாறாக வரும். இவ்வாறே பல மெய் யெழுத்துக்களின் ஒலிகளும் உள்ளன. ஆங்கில மொழியின் குழப்ப நிலையை விளக்க எடுத்துக்காட்டுகள் கூறுவோமாயின் அவை பல நூறுகளாக விரியுமாகலின் இரண்டே கூறுவோம்:

**F** என்ற ஒலி **Father, Enough, Philosophy, Lieutenant,** என்ற சொற்களில் பலவாறான எழுத்துக்களாக அமைந்திருத்தலைக் காண்க.

Queue — இச்சொல்லின் உச்சரிப்பைக்காண்க. (க்யு)

தமிழ்க் குழந்தை எழுத்தறிந்தால் படிக்கக் கற்றுக் கொள்ளும். ஆங்கிலக் குழந்தை எழுத்தறிந்தால் படிக்கக் கற்றுக்கொள்ள முடியாது. அது சொற்களின் உச்சரிப்பைத் தனித்தனியாகக் கற்ருல்தான் படிக்கும் ஆற்றலைப்பெறும். ஆங்கில அறிஞரும் சில சொற்களின் உச்சரிப்பு குறித்து அகராதியைப் புரட்டியாக வேண்டும். ஆங்கில அகராதி ஆசிரியர்களுக்கும், ஒலி நூலறிஞர் Dr. Jones போன்றவர்களுக்குமே ஆங்கில எழுத்துக் களின் ஒலித்தன்மை சரியாக விளங்கவில்லை எனின் மற்றவர் களைப்பற்றிக் கூறவேண்டுமோ ?

Webster (வெப்–ச்–டர்) உள்ளிட்ட பல அகராதி ஆசிரியர்களுக்கு U என்ற எழுத்தின் சரியான ஒலி இன்ன தென்று விளங்கவில்லை. Webster அகராதியில் Tube (–ட்யூ$^{u}$ப்), Use (யூ–ச்), Cube (க்யூ$^{u}$ப்), Pure (ப்யூர்) என்ற சொற்களில் உள்ள U ஒலி தனி ஊகார ஒலி யென்றும், Rude (ரூ$^{u}$ட்), Rumour (ரூமர்), Rural (ரூரல்), Crude (க்ரூ$^{u}$ட்) என்ற சொற்களில் உள்ள U ஒலி கலப்பூகார ஒலி என்றும் எழுதப்பட்டுளது. உண்மை நேர்மாருனது என்பதனை ஆங்கிலமறிந்த இந்தியராகிய நாமறிவோம். Ogilvie எழுதிய Imperial Dictionary என்ற அகராதி யில் Cube (க்யூ$^{u}$ப்), Tube (–ட்யூ$^{u}$ப்), Use (யூ–ச்), Rude (ரூ$^{u}$ட்), Rumour (ரூமர்), Rural (ரூரல்), என்ற சொற் களில் உள்ள U ஒலி ஒன்றே என்று கூறப்பட்டிருக்கிறது. உண்மை என்னெனில் முதல் மூன்று ஒலிகளும் தமிழ் யூ ஒலிகள், இறுதி மூன்றும் தமிழ் ஊ ஒலிகள். எனினும் தமிழ் ஒலி யிலக்கண முறைப்படி ஆய்வோமாளுல் Ogilvie கூற்று சரியெனக் காண்போம். எடுத்துக்காட்டுகளில் உள்ள ஊகாரங்கள் எல்லாம் தமிழ் ஊகாரங்களே. இவற் றுள் சில் யகரமேறிய ஊகராங்கள். சில வேறு மெய் கள் ஏறிய ஊகாரங்கள். ஆங்கில L எழுத்தின் ஒலியைப் பற்றி Dr. Jones அவர்களும் வேறு ஒலி நூலறிஞர்களும் எழுதியிருக்கின்றனர். இவர்களுடைய கருத்தின்படி

மூன்றுவகை L எழுத்துக்கள் ஆங்கிலத்தில் உள்ளன :

| | | |
|---|---|---|
| 1. | Silent L<br>ஒலியில்லா L | Calm; Palm. |
| 2. | Dark L<br>தெளிவில்லா L | Fill, Will, Kill, Till, |
| 3. | Clear L<br>தெளிவான L. | Clear, Clean, Please<br>Long, Lull, Love, Lean. |

இப்பாகுபாட்டில் இரண்டாம் பிரிவில் உள்ள L தமிழ் லகர வொற்று என்பதும், மூன்ரும் பிரிவில் உள்ள L தமிழ் ளகர லகர உயிர்மெய்கள் என்பதும் விளங்குகின்றன.

(—பில், கில், க்ளீயர், க்ளீன், ப்ளீ—ச், லா$_2$ங், லல், லவ், லீன்).

ஆனல் இவற்றில் புலப்படும் லகர ளகர வேற்றுமை Dr. Jones அவர்களுக்கு என் புலப்படவில்லை என்பது நமக்குத் தெரியவில்லை: வானெலியில் ஆங்கிலேயர் பேச்சை அடிக்கடி கேட்டுவருகின்ருேம். இச்சொற்களை லகர ளகர வேற்றுமையுடன்தான் உச்சரிக்கிருர்கள். எனினும் ஒலி வேறுபாடு அவர்களுக்குப் புலனுகவில்லை. அண்மையில் காலஞ்சென்ற ஆங்கில நாடகப் பேராசிரியரும் பேரறிஞருமாகிய ᵇபெர்ஞᵇட்—ஷா Bernad Shaw ஆங்கில எழுத்துமுறையைச் சீர்திருத்தியே யாகவேண்டும் என்று எழுதிப்போயிருப்பது எமக்கு வியப்பில்லை. எனினும், தமிழையும் பிற இந்திய மொழிகளையும் ஒருசிறிதும் உணராமலும், ஆங்கில மொழியெழுத்துக்களின் தன்மையையுமுணராமலும் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்ற சில ஆங்கிலேயர்கள் உரோமன் எழுத்துகொண்டு இந்திய மொழிகளை யெல்லாம் எழுதவேண்டுமென்று செய்துவரு

கின்ற கிளர்ச்சிதான் எமக்கு வியப்பூட்டுகின்றது.

உலகப் பொது தமிழ் எழுத்தொலி நூலை முடிக்குமுன் நமது இந்திய நாட்டு மொழியாகப் பேசப்படுகின்ற இந்தி மொழியைப்பற்றி ஒருசொற் கூறி முடிப்பாம். நமது இந்திய அரசாங்கத்தினர் இந்தி மொழியை இந்நாட்டு மொழியாக்குவதென முடிவுசெய்துள்ளனர். இத்துறையில் முயற்சியும் செய்து வருகின்றனர். நோக்கம் போற்றற் குரியதே. இந்திமொழி எல்லாராலும் எளிதில் கற்றுக்கொள்ளப்படுவதற்காகப் பல்வேறு மொழிகளிலிருந்தும் சொற்களை இம்மொழியில் ஏற்றப்போகின்றனர். இத்தகைய முயற்சியை உண்மை மொழிநூலறிவும், மொழிகளின் ஒலிநூலறிவுமுள்ளார் ஒப்பார் என்பது எமது கருத்து. பல மொழிச் சொற்களை ஒருமொழியில் வரையரையின்றிப் புகுத்தினுல் அம்மொழி தனது பழைய உருவம் திரிந்து செத்துப்போய்விடும் என்பது திண்ணமாகும்.

நாட்டில் பெரும்பான்மையோரால் பேசப்படுகின்றதென்ற ஒரே காரணத்தால் ஒருமொழியை இந்திய நாட்டின் பொது மொழியாக்குவது பழம்பெருமை வாய்ந்த இந்திய நாட்டிற்கு ஒரு சிறிதும் பெருமையைத்தாராது. ஆங்கிலேயர் 'எமதுமொழி ஆங்கிலம்', சருமானியர் 'எமது மொழி சருமானியம்', பிரஞ்சுக்காரர் 'எமது மொழி பிரஞ்சு' என்று பெருமையுடன் கூறிக்கொள்வதுபோல இந்திய மக்கள் 'இது எமது மொழி' என்று மார்தட்டிச் சொல்லிக்கொள்ள வேண்டுமானுல் அம்மொழி நிறைந்த இலக்கியங்கள் உள்ள மொழியாயும், சொல்வளமும் பொருள் வளமும் உள்ள மொழியாயும், பேச்சிற்கோ உரை நடைக்கோ, செய்யுளுக்கோ எவ்வகையிலும் ஏற்றதொரு மொழியாயும், காலப்போக்கில் விரைவில் சாகாத இலக்கண வரம்புடைய மொழியாயும் எடுக்க எடுக்கக் குறையாத சொற்களையுடைய பழம்பாடற் கருவூலங்கள் நிறைந்ததொரு மொழியாயும் இருத்தல் வேண்டும். இன்

ணம் பார்க்கும்போது இந்திமொழி இந்திய நாட்டின் எழிலுக்கும் பாரத நாட்டின் பழம் பண்பிற்கும் ஏற்ற தொரு மொழியாகத் தோன்றவில்லை. இத்தகைய மொழி கள் இரண்டே பாரத நாட்டில் உண்டு. ஒன்று வடமொழி; ஏனையது தன்னேரிலாத தமிழ். வடமொழி பேச்சு வழக்கில் இல்லை. நாகரி எழுத்துருவும் எளிமையுடைய தன்று. ஒரே வர்க்கத்திலுள்ள நந்நான்கு எழுத்துக் களுக்கும் வெவ்வேறு உருவம் அமைந்துள்ளது. பல கூட்டுருவங்கள் உடையதாயும், கோட்டில் இன்றி எளிதில் எழுதமுடியாததாயும், கையை எடுத்தெடுத்து எழுத வேண்டிய எழுத்துக்கள் உடையதாயுமுள்ளது. நமது பாரத அரசாங்கத்தார் தமிழ் எழுத்துருவையாவது மேற் கொண்டால் இந்திய மொழிகளையெல்லாம் ஒரே எழுத் துருவிற் காணலாம்.

---

## வடமொழி.

### 1

1. ந்ர்ருபோ ᵁசயதி—அரசன் வெல்கின்றான்.
2. ᵁசநா வᵁதந்தி—மக்கள் பேசுகின்றார்கள்.
3. மேᴵக-க -சிஞ்சதி—மேகம் பெய்கின்றது.
4. ᵁது-க் |கம் பீᵁடயதி—துக்கம் துன்புறுத்துகின்றது
5. ᵁக்ர்₂-காணி ரக்-ழந்தி—வீடுகள் காப்பாற்று கின்றன.
6. -சு|கம் ப்ரீணயதி—உடல்நலம் மகிழ்விக்கின்றது.
7. நேத்ரே ப-ச்யத-க—இருகண்களும் பார்க்கின்றன.
8. ᵁசலம் -சு-ழ்யதி—தண்ணீர் சுருங்குகின்றது.
9. அ-ச்வா வுத்பதத-க—இருகுதிரைகள் தாண்டு கின்றன.
10. ᵁபுᴵதௌ முஞ்சத-க—இரு அறிஞர் விட்டுச் செல்கின்றனர்.

### 2

1. விᵁத்வத்வம் ச ந்ர்ருபத்வம் ச நைவ துல்யம் கᵁதாசந—புலமை நிலையும் அரச நிலையும் ஒரு போதும் நேராகா.
2. -ச்வᵁதே-சே பூᵁச்யதே ராᵁசா விᵁத்வாந் -சர்வத்ர பூᵁச்யதே—அரசன் தனது நாட்டில் பூசிக்கப்படு கின்றான், புலவன் யாண்டும் பூசிக்கப்படுகிறான்.
3. ஏகே நாபி -சுவ்ர்₂க்-ழேண பு-ழ்பிதேந -சுᵁகந்ᴵதிநா வா-சிதம் தᵁத்வநம்-சர்வம் -சுபுத்ரேண குலம் ய|தா—ஒருகாடு முழுதும் ஒரு நல்ல மரம் பூத்தால்

நறுமணம் பெறுகின்றது. ஒருநல்ல மகனால் ஒரு குடும்பம் முழுதும் இவ்வாருகின்றது.

4. உத்–சவே வ்ய–சநே சைவ $^{U}$துர்$^{1}$பிக்—ஷே –சத்ரு விி$^{U}$க்ர–கே ரா$^{U}$ச$^{U}$த்வாரே –ச்ம–சாநே ச ய–ச்தி–ஷ்–|டதி –ச $^{U}$பாந்$^{1}$தவ–க:– திருநாளிலும், துக்கத்திலும், பஞ்சத்திலும், பகைவரோடு போரிலும், அரண்மனை வாயிலிலும், சுடுகாட்டிலும் கூடநிற்கிறவன் உறவாகும்.

5. $^{U}$துர் $^{U}$சந–க ப்ரியவா$^{U}$தீ ச நைத$^{U}$த்வி–ச் வா–ச காரணம், ம$^{1}$து தி–ஷ்|டதி $^{U}$ஜி–க் வா$^{U}$க்ரே–க்ர்$_{L}$$^{U}$தயே து–கலா–கலம். — இனிமையாகப் பேசுகிற கொடியோன் நம்பிக்கைக்குக் காரணமாகான், ஏனெனில் அவனது நாநுனியில் தேன் இருக்கிறது; உள்ளத்தில் கொடிய கடு உள்ளது.

6. –சு$^{U}$சந–ச்ய கீர்திர்லோகே ப்ர–சரதி—நல்லவனுடைய புகழ் உலகில் பரவுகிறது.

7. –சங்கடே $^{1}$தீரோ$^{1}$த்ர்$_{L}$திம் நமுஞ்சதி—வீரன் இடையூறு வருங்கால் தைரிய மிழக்கிறதில்லை.

8. ராம–க ப்ரீத்யா புத்ரமா–ச்லி–ஷ்யதி—இராமன் அன்புடன் மகனைத் தழுவுகிறான்.

9. முக்தயே $^{U}$தேவம் $^{1}$ப$^{U}$சதி—வீடுபேற்றிற்காக கடவுளை துதிக்கிறான்.

10. $^{U}$பு$^{U}$த்$^{1}$தே–க ப்ரகர்–ஷ–க கீர்தயே $^{1}$பவதி—திறமையின் பெருமையினால் புகழ் உண்டாகிறது.

## இந்தி.

*ஈ-ச்வர் சந்$^{ப}$த்ர் வி$^{ப}$த்யா—சா$^{ப}$கர்.*

ல$^{ப}$ட்$_2$கோ! க்யா, தும் ஈ-ச்வர் சந்$^{ப}$த்ர் வி$^{ப}$த்யா—சா$^{ப}$கர் கா நாம் $^{ப}$சாந்தே—கோ?—பையா, நீ ஈசுவர சந்தர வித்யா சாகரருடைய பெயரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிருயா?

வே ஏக் $^{ப}$ப$^{ப}$டே வி$^{ப}$த்வாந் ஆ$^{ப}$த்மீ |தே—அவர் ஒரு பெரிய வித்துவான் (ஆக இருந்தார்)

வே கல்கத்தே ர—க்நேவாலே |தே—அவர் கல்கத்தாவில் வசித்து வந்தார்.

வே $^{ப}$ப$^{ப}$டே தயாலு $^{1}$பி |தே—அவர் மிகவும் இரக்கமுள்ளவராகவும் இருந்தார்.

ஏக் ரோ$^{ப}$ச் ஏக் ல$^{ப}$ட்$_2$கா வி$^{ப}$த்யா—சா$^{ப}$கர் கே பா—ச் ஆயா ஔர் க—கா—ஒருநாள் ஒரு பையன் வித்யா சாகரரிடம் வந்து கூறியதாவது:

"$^{ப}$பா$^{ப}$பூ, ஏக் பை—சா $^{ப}$தீ$^{ப}$சியே"—"ஐயா, ஒரு பைசா கொடுங்கள்"

ல$^{ப}$ட்$_2$கா $^{ப}$ப—குத் $^{ப}$கரீ$^{ப}$ப் |தா—பையன் மிக ஏழை.

உ—ச்கோ $^{ப}$தே|க்கர் வி$^{ப}$த்யா—சா$^{ப}$கர்கோ ர—கம் ஆயீ—அவனைப் பார்த்து வித்யா சாகரருக்கு இரக்கம் வந்தது.

உந்—கோநே உ—ச்—சே பூ|சா—அவர் அவனிடம் (இவ்வாறு) கேட்டார்.

"ஏக் பை—சா லேகர் க்யா கரோ$^{ப}$கே?"—"ஒரு பைசாவைப்பெற்று என்ன செய்வாய்?"

ல$^{ப}$ட்$_2$கேநா க—கா—பையன் (இவ்வாறு) பதில்

சொன்னான்.

"காநே கே லியே குச் கரீ^ப தூங்^பகா"—கொஞ்சம் உணவு வாங்குவேன்."

வி^பத்யா சா^பகர்நே க-கா—வித்யா சாகரர் (இவ்வாறு) கூறினார்.

"மைஞ் ^பதோ பை-சே ^பதூங்^பகா, ^பதப் க்யா கரோ ^பகே?"—"நான் இரண்டு பைசா கொடுப்பேன் (கொடுத்தால்) என்ன செய்வாய்"

ல^பட்$_2$கேநே ^பசவா^பப் ^பதியா—பையன் (இவ்வாறு) விடை கூறினான்.

"ஏக் பை-சா ஆ^பச் காவூங்^பகா ஔர் ஏக் பை-சா கல்"—ஒரு பைசாவுக்கு இன்று உண்பேன், மற்றொரு பைசாவுக்கு நாளை.

வி^பத்யா -சா^பகர்நே க-கா—வித்யாசாகரர் (இவ்வாறு) கூறினார்.

"சார் பைசா ^பதூங்^பகா தோ க்யா கரோ^பகே?"—"நான்கு பைசா கொடுத்தால் என்ன செய்வாய்?"

ல^பட்$_2$கேநே க-கா—பையன் (இவ்வாறு) கூறினான்.

"^பபா^பசார்மேஞ் சார் பைசேகே ஆம் கரீ^பத் கர் ^பபைசூங்^பகா"—"கடைத்தெருவில் நான்கு பைசாவுக்கு மாம்பழம் வாங்கி விற்பேன்".

"^பசோ லா^1ப்-கோ^பகா உ-ச்-சே காவூங்^பகா ஔர் ^பபாகீ-சே பிர் வ்யாபார் கரூங்^பகா—"இலாபம் கிடைத்தால் அதனால் சாப்பிடுவேன், மீதியைக்கொண்டு மறுபடியும் வியாபாரம் செய்வேன்."

லட்$_2$கே கீ ^பபாத் -சுந்கர் வி^பத்யா-சா^பகர் ^பப-குத் கு-ச்-குயே—பையன் பேச்சைக்கேட்ட வித்யாசாகரர்

மிக மகிழ்ச்சியடைந்தார்.

உந்–கோநே லᵁட்₂கே கோ ஏக் ருப்யா ᵁதியா— அவர் பையனுக்கு ஒரு ரூபாய் கொடுத்தார்.

லᵁட்₂கா உ–ச்ருப்யே–சே வ்யாபார் கர்நே லᵁகா— பையன் அந்த ரூபாயைக்கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கினன்.

குச்–ஹீ ᵁதிநோங்மேஞ் வ–க் ஏக் |சோட ᵁதூகாந் கா மாலிக் ᵁபந்ᵁகயா—சிலநாட்களில் அவன் ஒரு சிறு கடையின் சொந்தக்காரன் ஆகிவிட்டான்.

விᵁத்யா–சாᵁகர் கீ ᵁதயா–சே ᵁகரீᵁப் லᵁட்₂கா [1]தந்வாந் –கோᵁகயா—வித்யாசாகரருடைய இரக்கத்தால் ஏழைப் பையன் பணக்காரன் ஆனன்.

தும்[1]பீ விᵁத்யா–சாᵁகர்கே ᵁசை–சே ᵁதயாலூ ᵁபநோ—நீயும் வித்யாசாகரரைப்போல் இரக்க முள்ளவனுக வேண்டும்.

---

## அரபி.

## 1

**அரபி**
**எழுத்துக்கள்.**

அ  அᵁதᵁப் = மரியாதை; அ–சா–ச் = அடிப்படை
ᵁப்  ᵁபரகத் = விருத்தி; பாதில் = தவறு.
த்  தாᵁசிர் = வணிகன்; திᵁசாரத் = வணிகம்.
—த்  —தமர் = பழம்; தொᵁப் = துணி; —தவாᵁப் = கூலி.
ᵁச்  ᵁசில்த் = தோல்; ᵁசன்னத் = தோட்டம்.

-காUசி = மக்கா சென்று வந்தவன்; -கUச் = மக்கா யாத்திரை.

°கத் = கடிதம்; °காலி = வெறும் இடம்.

Uதலீல் = சான்று, மேற்கோள்; Uதால் = அறி; Uதலாலத் = அறிவிப்பு.

Jதலீல் = கேவலமான; Jதில்லத் = கேவலம்.

ற-க்மத் = அருள்; ரு-சு = தலை.

▽சகாத் = அறம்; ▽ச-க்மத் = சிரமம்.

-சலாம் = நலம், சுகம்; இ-ச்லாம் = வழிபாடு; மு-ச்லீம் = வழிபடுகிறவன்.

-ழராUப் = குடிநீர் பானம்.

-ழ-ஹீUத் = தியாகி; -ழா-கிUத் = சாட்சி.

-ழUப்ர் = பொறுமை; -ழUதாJகத் = உண்மை..

வ$_2$ர்Uப் = அடித்தல்; வா$_2$ரிUப் = அடிக்கிறவன்.

த்வ$_2$ரீUக் = வழி, பாதை; த்வா$_2$Jகத் = வலி, பலம்.

2வாலிம் = அநியாயக்காரன்; 2வுல்ம் = அநியாயம்.

Uஅய்ன் = கண்; UஅUதாUப் = தண்டனை; Uஅக்லு புத்தி; UஅUப்Uதுல்லா = ஆண்டவன் அடிமை.

Jகலத் = தவறு.

-ப-சாUத் = குழப்பம், கலகம்; -புல்க் = கப்பல்; -பலா-க் = வெற்றி.

Jகொம் = சமூகம்; Jகா$_2$Uதிர் = வல்லவன்; JகுUத்ரத் = சக்தி.

கலாம் = பேச்சு; கரீம் = கொடையாளி; கா--பிர் = மு-ச்லீம் அல்லாதவன்.

லா▽சிம் = அவசியமான; லிJகாவ் = சந்திப்பு, தரிசனம்; லியாJக$_2$த் = திறமை, தகுதி; லாயJக் = திறமையுள்ளவன்.

ம் மு—ச்லீம் = வழிபடுகிறவன்; மால் = பொருள்.
ந் நார் = தீ; நூர் = பிரகாசம்.
வ் வக்கீல் = பொறுப்பேற்றவன்; வக்காலத் = பொறுப்பு.
—க் —கொல் = அச்சம்; —காயில் = அஞ்சக்கூடிய; —கா^U^தி = நேர்வழிகாட்டுகிறவன்.
ய் ய—சீர் = இலேசான; யு—ச்ர் = இலேசு; ய^J^கீன் = உறுதி, நம்பிக்கை.

## 2

—குவ^U^தலீல் = அது (அவன்) சான்று.
—கா^J^தா ^J^தலீல் = இவன் கேவலமானவன்.
—கா^J^தா —ழா^U^பிர் = இவன் பொறுமையுள்ளவன்.
—கா^J^தா —ழ^U^ப்ர் = இதுபொறுமை.
—குவ வா$_2$ரி^U^ப் = அவன் அடிக்கிறவன்.
—குவ வார்$_2$ப் = அது அடி.
—கா^J^தா த்வ$_2$ரீக் = இது ஒரு பாதை, வழி.
—கா^J^தா 2வாலிம் = இவன் நேர்மையற்றவன்.
—காவுலாயி 2வாலிமூன் = இவர்கள் நேர்மையற்றவர்கள்.
—கா^J^தா ^U^அ^U^ப்^U^துல்லா—க் = இவன் ஆண்டவன் அடிமை.
—கா^J^தி—கி $_U$அய்ன் = இது ஒரு கண்.
—கா^J^தா ^J^கலத் = இது தவறு.
—கா^J^தா ^J^காயித் = இது கக்கூ-ச்.
—கா^J^தா ^J^கொம் = இது சமூகம்.
—கா^J^தா ^J^கா$_2$^U^திர் = இவன் வல்லவன்.
—கா^J^தா —தமர் = இது பழம்.
—கா^J^தா —தொ^U^ப் = இது துணி.
—கா^J^தா -கா^U^சி = இவன் மக்கா யாத்திரை செய்தவன்

—காᴶநா °கத்—இது கடிதம்.
—காᴶதா °காலி—இது வெறும் மனே.

## 3

1. இன்ன அர்வ₂ யரி—துகா இᵁபாᵁதி ய—ச்—சாலி-கூன். இன்ன—திண்ணமாக; அர்வ2—உலகத்தை; யரி—து — ஆள்வார்; இᵁபாᵁத்—அடிமைகள்; ய—என்னுடைய; —சாலி-கூன் — தகுதியுள்ளவர்கள். திண்ணமாக என்னுடைய திறமையுள்ள அடியார்கள் உலகத்தை ஆள்வார்கள்.

2. •காயி—பூன மினல் ᵁஅᴶதாᵁப்—தண்டனைக்கு அஞ்சுகிறவர்கள்.
லா தᴶக்னது மிர்ற-க்ம தில்லா—க்—ஆண்டவன் அருள் கிட்டாதென ஆயாசம் அடையாதீர்கள்.

3. இன்ன அ—க்ல—கா கானு வாலிமீன். இன்ன—திண்ணமாக; அ—க்ல—க்—அவ்வூரார்; வாலிமீன்—நேர்மையற்றவர்கள்; கானு—இருந்தார்கள்.
திண்ணமாக அவ்வூரார் நேர்மையற்றவர்.

4. —ப—கும் ᴶகா—பிலூன். —ப — எனவே; —கும் — அவர்கள்; ᴶகா—பிலூன் — சிந்தனையற்றவர்கள்.

5. வ •கலᴶக் னுகும் அᴖச் வாᵁசா. வ—மேலும்; •கலᴶக்னு—நாம் படைத்தோம்; கும்—உங்களே; அᴖச்வாᵁச்—இரட்டைகளாக.
மேலும் நாம் உங்களே ஆண் பெண்களாகப் படைத்தோம்.

# ஆங்கிலம்

## 1

1. இ—ட்—டி—ச் மார்$_2$நிங்—இப்பொழுது காலை நேரம்.

2. ஐ —காஒவ் ˘ட்⌒ழ—ச்—ட் ˘கா$_2$—டப்—நான் இப்பொழுதான் எழுந்தேன்.

3. மை வி—ட்—டில் ˘ப்ர˘தெ$_2$ர் இ—ச் —ச்—டில் இன் ˘பெ˘ட்—என்னுடைய தம்பி இன்னும் படுத்திருக்கிறான்.

4. ஐ —ழாஒல் 2வா—ழ் மை —பெய்—ச் நொ—நான் இப்பொழுது முகம் கழுவப்போகிறேன்.

5. மை ˘ப்ர˘தெ$_2$ 2வில் ஆ$_2$ல்—சொ ˘கெ—ட்—டப் அஒண்˘ட் 2வா—ழ் —கி—ச் —பெய்—ச் — என் தம்பியும் எழுந்து முகத்தைக் கழுவிக்கொள்வான்.

6. ˘தென் 2வீ —ழாஒல் ˘போத் ˘கோ$_2$ ஓா—ட் —பா$_2$ர் எ$_2$ 2வாக் — பின்னர் நாங்கள் இருவரும் வெளியில் உலாவப் போவோம்.

## 2

1. ˘தி—தி—ச் எ$_2$ ˘ப்யூ—டி—புல் பிக்—ட்—ழெ$_2$ர் — இது ஒரு அழகான படம்.

2. ˘தேஒ ரி—ச் எ$_2$ ரிவ$_2$ர் இன் ˘தெ$_2$ பிக்—ட்—ழெ$_2$ர் — படத்தில் ஒரு ஆறு இருக்கிறது.

3. யூ—சீ 2வன் ஆ$_2$—ப் ˘தெ$_2$ ˘பாஒங்—ச் ஆ$_2$—ப் ˘தெ$_2$ ரிவ$_2$ர் — நீ ஆற்றங்கரைகளில் ஒன்றைப் பார்க்கிறாய்.

4. யூ ᵁடு நா2–ட் –சீ ᵁநி அᵁதெ2ர் ᵁபாஒங் ஆ2–ப் ᵁதெ2 ரிவ2ர் — நீ ஆற்றின் மற்றொரு கரையைப் பார்க்க வில்லை.

5. எ2 ᵁபோ2–ட் இ–ச் ᵁகோயிங் –டு ᵁதி அᵁதெ2ர் ᵁபாஒங் — ஒரு படகு அக்கரைக்கு சென்று கொண் டிருக்கிறது.

6. ᵁதேஒ ரார் –போர் பெ2ர்–ழன்–ச் இனி–ட் — அதில் நான்கு பேர் இருக்கின்றனர்.

## 3

### –ப்ரம் –ட்–ழர் –ட்–ழில்–ச் –பெ2–ச்–ட் 2வா2ர் –ச்பீ–ட்–ழ்.

–டு ᵁதோ–ச் –கூ ஆ–ச்க் 2வா–டி–ச், அவெ2ர் பா2லி–சி ஐ –சே இ–ட் –டி–ச் –டு 2வெய்ᵁச் 2வார் (–ட்–ழியே2ர்–ச்) ᵁபை லாஒண்ᵁட், –சீ, அஒண்ᵁட் எஒர், 2வார் 2வி–த் ஆ2ல் அவெ2ர் மை–ட் அஒண்ᵁட் 2வி–த் ஆ2ல் ᵁதெ2 –ச்–ட்– ரெங்–த் ᵁகா2ᵁட் –காஒ–ச் ᵁகிவன–ச் அஒண்ᵁட் –டு 2வெய்ᵁச் 2வார் எᵁகெய்ன்–ச்–ட் எ2 மா2ன்–ச்–ட் ர–ச் –டிரங்ஙி நெவெ2ர் –செ2ர்பா–ச்–ட் இன் ᵁதெ2 ᵁடா2ர்க் லஒமென்–ட்ᵁப்ல் காஒ–டெ2லா2ᵁக் ஆ2–ப் –க்யூமங் க்ரைம்: (–ட்–ழியே2ர்–ச்) ᵁதெ–ட்–டி–ச் அவெ2ர் பா2லி–சி. –டு ᵁதெ2 க்2வெ–ச்–ட்–ழன் 2வா–டி–ச் அவெ2ர் எய்ம், ஐ காஒன் ᵁகிவ் ᵁதி ஆன்––செ2ர் இன் 2வன் 2வே2ᵁட். இ–ட் –டி–ச் விக்–ட2ரி (–ட்–ழியே2ர்–ச்), விக்–ட2ரி அஒ–ட் ஆ2ல் கா2–ச்–ட்–ச்,

விக்–டெ2ரி இன் –ச்பை–ட் அ2–பா2ல் பெரில், விக்–
–டெ2ரி –கொ எவெ2 லா2ங் அஒண்Uட் –கார்Uட் Uதெ2
ரோUட் மேUபி –பா2ர் 2வி–தொ–ட். விக்–டெ2ரி
Uதேஒரி–ச் நொ2 –சர்வைவெ2ல் அஒண்Uட் லெ–ட்
Uதஒ–ட் Uபி ரியலெ⊓ச்Uட், நொ2 –சர்வைவெ2ல் –பா2ர்
Uதெ2 Uப்ரி–ட்–டி–ழ் யெம் |பயெ2, நொ2 –சர்வைவெ2ல்
–பா2ர் ஆ2ல் Uதெ–ட் Uதெ2 Uப்ரி–ட்–டி–ழ் யெம்|பயெ2
–காஒ–ச் –ச்–டுUட் –பா2ர், நொ2 –சர்வைவெ2ல் –பா2ர்
Uதெ2 அ2ர்Uச் அஒண்Uட் இம்|பல்–ச் அ2–ப்Uதி யேUச–ச்
Uதெ–ட் மாஒன்கைண்Uட் –ழாஒல் மூவ் –பா2ர்2வே2Uட்
–ட்2வே2Uட்⊓ச் (–டா2Uட்⊓ச்) இ–ட்–ச் Uகோல்.
Uப–ட் ஐ–டெய்க் கப் மை –டா–ச்க் 2வி–த் Uபா2
யன்–சி அஒண்Uட் –கோப்(–ட்ழியே2ர்–ச்) அஒண்Uட்
ஐ –பீல் –மூயெ2 Uதெ–ட் அவெ2 கா2–ச் 2வில் நா2–ட்
Uபி –ச –பெ2Uட் –டு –பெய்ல் அஒமங் மெங்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 11 | ஓரோவழி | ஒரோவழி |
| 76 | 11 | (வெப்–ச்—டர்) | (வெ$^{U}$ப்–ச்–டர்) |
| 85 | 19 | தொ$^{U}$ப் | —தொ$^{U}$ப் |
| 87 | 11 | —ழா$^{U}$பிர் | –ழா$^{U}$பிர் |
| ,, | 12 | —ழ$^{U}$ப்ர் | –ழ$^{U}$ப்ர் |
| 89 | 1 | மார்$_{2}$நிங் | மா$_{2}$ர்நிங் |

## ந. மு. கோவிந்தராய நாட்டார்

### எழுதிய நூல்கள் :

**1. 'இராசேந்திரன்'**

வரலாறு தழுவிய நாடகம்.

(முதற்பதிப்பு) **விலை ரூ. 3-12—0**

**2.** ,, இரண்டாம் பதிப்பு

(சுருக்கியது) B. A., வகுப்பிற்குத்

துணைப்பாடம் ரூ. 2—8—0

**3. உலகப் பொது தமிழ் எழுத்தொலி**

ரூ. 2—4—(

இவை கிடைக்குமிடம் :

**ந. மு. கோவிந்தராய நாட்டார்,**

*1640*, நாட்டாரகம், தெற்குப் பெருந்தெரு,

தஞ்சை.